# உதயன்

பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 087 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 09 வியாழக்கிழமை (21/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily


# வடக்குத் தேர்தல் செப்ரெம்பர் 7 இல்




## அரசு முடிவு: விரைவில் அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 21

சர்வதேசத்தின் தொடர்ச்சியான அழுத்தங்களால் வட மாகாண சபைத் தேர்தலை செப்ரெம்பர் 07 ஆம் திகதி நடத்துவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது.

வட மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், கனடா உட்படச் சர்வதேச நாடுகள் தொடர்ச்சியாக வலியுறுத்திவருவதால் அழுத்

பார்க்க பக்கம் 04

"அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜெனிவாக் கூட்டத் தொடரில் ஏற்படும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவும், எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இலக்கு வைத்துமே அரசு வட மாகாண சபைத் தேர்தல் திகதியை தீர்மானித்துள்ளது."

### சென்னை ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் அலுவலகம் தாக்கப்பட்டது

சென்னை, பெப்.21

சென்னையில் உள்ள ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் அலுவலகம் மீது நேற்றுக் காலை இனந்தெரியாத சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் சென்னையில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதுடன், பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது.

சென்னை கோடம்பாக்கம் - நுங்கம்பாக்கம் வீதியில் உள்ள ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் அலுவலகம் மீது மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில், அலுவலக ஜன்னல்கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-சி)

## வெறும் 10 அதிகாரிகளை மட்டுமே ஜெனிவா அனுப்புகிறது இலங்கை

கொழும்பு, பெப்.21

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக மற்றொரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும் முயற்சிகளில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியுள்ள நிலையில், இலங்கை இந்தக் கூட்டத்தொடருக்கு முக்கியத்துவமளிப்பதைத் தவிர்க்க முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனைத்துலக நெருக்கடிகளில் இருந்து தப்பிக்கவோ, பரப்புரைகளை முறியடிக்கவோ முடியாது என்று உணர்ந்த நிலையில், வெறும் 10 அதிகாரிகளைக் கொண்ட குழுவை மட்டும் ஜெனிவாவுக்கு அனுப்ப இலங்கை முடிவு செய்துள்ளது.

அதுவும், ஜெனிவாவுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்கவே இம்முறை இலங்கைக் குழுவைக்

பார்க்க பக்கம் 04

## இலங்கையை தண்டிக்க இதுவே தக்க தருணம்

### ஐ.நாவிடம் சுட்டிக்காட்டுகிறது சனல்-4

CHANNEL FOUR TELEVISION

லண்டன், பெப்.21

புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் கொல்லப்படுவதற்கு முன்பாக இராணுவப் பதுங்குகுழி போன்று காட்சியளிக்கும் ஓர் இடத்தில் பிஸ்கட் சாப்பிடும் படத்தை வெளியிட்ட சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம், இலங்கை அரசைத் தண்டிக்கத் தவறிய ஐ.நாவுக்கு தற்போது அதற்கான சந்தர்ப்பம் மீண்டும் ஏற்பட்டிருக்கிறது என்றும் இதை ஐ.நா. சரியாகப்

பார்க்க பக்கம் 04

## அமெரிக்கா கவலை

வோஷிங்டன், பெப்.21

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன், இலங்கை இராணுவத்தினரால் உயிருடன் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டமை குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்கா, இலங்கையில் இடம்பெற்ற அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறல்கள் குறித்து, ஆழ்ந்த கவலையடைவதாக

பார்க்க பக்கம் 04

## 2009 மே 19 அன்று நண்பகலே பாலச்சந்திரன் கொல்லப்பட்டார்

### தடயவியல் ஆய்வில் தகவல்



லண்டன், பெப்.21

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளையமகன் பாலச்சந்திரன் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி நண்பகல் அளவிலேயே கொல்லப்பட்டுள்ளதாகத் தடயவியல் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

பார்க்க பக்கம் 04

## பாலச்சந்திரனின் படங்களை உறுதிப்படுத்த முடியவில்லை

### இந்திய அரசு தெரிவிப்பு

புதுடில்லி, பெப்.21

புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் இலங்கைப் படையினரால் உயிருடன் பிடித்து வைத்துக் கொலை செய்யப்பட்டதாக வெளியாகியிருக்கும் ஒளிப்படங்களின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகங்களில் வெளியான பாலச்சந்திரனின் ஒளிப்படங்கள் குறித்து, இந்திய வெளிவிவகார அமைச்சரிடம்

பார்க்க பக்கம் 04













## இலங்கை கடற்படைக்கு இந்தியாவில் பயிற்சி

புதுடில்லி, பெப்.21

இலங்கைக் கடற்படையினருக்குத் தென்னிந்தியாவில் பயிற்சி அளிக்கப்படமாட்டாது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி கூறியிருந்த போதிலும், அவரது சொந்த மாநிலமான கேரளாவிலேயே இலங்கைக் கடற்படை அதிகாரிக்குப் பயிற்சி கொடுக்கப்பட்ட தகவல் தற்போது அம்பலமாகியுள்ளது.

கொச்சியில் கருடா என்ற இந்தியக் கடற்படைத் தளத்தில் உள்ள வான் நுந்திரோபாயங்கள் தொடர்பான அவதானிப்பாளர் பாடசாலையிலேயே இந்தப் பயிற்சி

பார்க்க பக்கம் 04

## மன்னிக்க முடியாத போர்க்குற்றம் இது

### பாலச்சந்திரன் கொலை குறித்து ஜெயலலிதா சீற்றம்

சென்னை, பெப்.21

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன்

பார்க்க பக்கம் 04


ரூபா 4000 விலைக்குறைப்பு



TVS XL SUPER HEAVY DUTY

~~109900/=~~ 105900/=

முற்பணம் ரூபா 20000/= செலுத்தி தவணைக்கட்டண முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ராஜ் DISTRIBUTERS

இல.191,பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

T.P:- 021 2262249, 077 0853530


## இதைவிடக் கொடுமை எங்கும் நடந்ததில்லை

### கருணாநிதி தெரிவிப்பு

சென்னை,பெப்.21

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளையமகன் பாலச்சந்திரன் என்ற இளம் தளிரை, துப்பாக்கிக் குண்டுகளால் கருகச் செய்த கோர நிகழ்ச்சியைக் காணும் போது, கொடுமை, கொடுமை, இதைவிடப் பெரிய கொடுமையை வேறெங்கும் காண முடியாது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை ஜனாதிபதி ஒரு சர்வதேசப் போர்க்குற்றவாளி என்பதற்கு ஆதாரம் தேடி உலக நாடுகளோ, ஐ.நா சபையோ வேறெங்கும் செல்ல வேண்டியதில்லை. அதற்காக எந்த விசாரணையும் மேற்கொள்ளவும் தேவையில்லை. விடுதலைப் புலிகளின்

பார்க்க பக்கம் 04

## போர்க்குற்ற விசாரணை இலங்கை மீது அவசியம்

### சர்வதேசத்தை ஆதரவளிக்கக் கோருகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

ஜெனிவா, பெப்.21

இலங்கையில் இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை தேவை என்ற கோரிக்கை உலக அரங்கில் வலுவடைந்து வரும் நிலையில், இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

"2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை."

அடுத்த மாதம் நடைபெறும் ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில்,

பார்க்க பக்கம் 04

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முழுப் பூசனிக்காயைச் சோற்றுள் மறைக்கிறார் அரச அதிபர்

### வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப்.21

மீளக்குடியமர வேண்டியோரின் விவரங்கள் தன்னிடம் இல்லை என்று யாழ். மாவட்ட அரச அதிபர் கூறுவது, 'முழுப் பூசனிக்காயைச் சோற்றினுள் மறைப்பதற்கு ஒப்பானது.'

இவ்வாறு வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலாளரால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் மீள்குடியமர்த்தப்பட வேண்டியவர்கள் தொடர்பான சகல விவரங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

வலி. வடக்குப் பிரதேசத்தில் இன்னமும் விடுவிக்கப்பட வேண்டிய பிரதேசங்கள் (24 கிராம அலுவலர் பிரிவுகள்), மீளக்குடியமர்த்தப்பட வேண்டிய மக்கள் தொடர்பாகப் புள்ளி விவரங்களுடன் 11.09.2012 ஆம் ஆண்டு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலாளரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதன்படி மீளக்குடியமர்ந்தோர் (2 ஆயிரத்து 140 குடும்பங்கள்), அடிப்படை வசதியின்மையால் மீளக் குடியமராதோர் (4 ஆயிரத்து 562 குடும்பங்கள்), மீளக் குடியமர வேண்டியோர் (6 ஆயிரத்து 496 குடும்பங்கள்) விவரங்கள் மற்றும் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள், பகுதியாக அனுமதிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் என்பனவும் பிரதேச செயலாளரால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் வலி. வடக்குப் பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு தற்போது வலி.வடக்கு பிரதேசத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போர் (288 குடும்பங்கள்), வேறு பிரதேச செயலாளர் பிரிவில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போர் (1,268 குடும்பங்கள்) எண்ணிக்கையும் புள்ளிவிவர ரீதியாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்கள் குறித்த சரியான தகவல் இல்லை என்று அரச அதிபர் தெரிவித்திருப்பதும், ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற விசேட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் மேற்படி தகவல்களை ஜனாதிபதியின் கவனத்துக்கு அரச அதிபர் கொண்டுவராததும் எமக்கு மனவருத்தத்தை அளிக்கின்றது. அரச அதிபரின் இந்தக் கூற்றானது 'முழுப் பூசனிக் காயைச் சோற்றினுள் மறைப்பது' போன்ற செயலாக உள்ளது. எனவே உண்மை நிலையை உணர்ந்து மீள்குடியமர்விற்கு உதவிக்கரம் நீட்டுமாறு வலி.வடக்கு மக்களின் மக்களின் சார்பில் கேட்கிறோம்-என்றுள்ளது. (த-5)

## ஜனாதிபதியிடம் செல்லவிடாமல் திருப்பி அனுப்பப்பட்ட மருத்துவர்

யாழ்ப்பாணம், பெப்.21

மருத்துவர் சிவசங்கரை விடுதலை செய்யுமாறு கோரி கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிக்கச் சென்ற அவரின் மனைவியான மருத்துவரை ஜனாதிபதியிடம் கடிதத்தைக் கையளிக்கவிடாமல் பாதுகாப்புப் பிரிவினர் தடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த வருடம் டிசெம்பர் மாத கடைசிப் பகுதியில் மருத்துவர் சிவசங்கர் மாங்குளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். படைமுகாமுக்குள் அனுமதியின்றி உட்பிரவேசித்ததாகவும், ஒலிப் பதிவுக் கருவி வைத்திருந்தார் என்றும் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த 12ஆம், 13ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. யாழ்.நகரிலுள்ள விடுதியொன்றில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொண்டார். இவ்வேளையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் இருவரையும் அவர்களின் பெற்றோர் விடுத்த வேண்டுகோளை அடுத்து விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து மறுநாள் 13ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய மாடிக் கட்டடத்தை திறந்து வைத்திருந்தார் ஜனாதிபதி. இந்த நிகழ்வில் வைத்து ஜனாதிபதியிடம் மருத்துவர் சிவசங்கரை விடுவிக்கக் கோரி மனுவொன்றைக் கையளிப்பதற்கு அவரது மனைவியான மருத்துவர் திருமகள் முயற்சித்தார்.

இதன்போது ஜனாதிப்தியின் பாதுகாப்புப் பிரிவினர், ஜனாதிபதியிடம் எந்தவொரு மனுவும் நீங்கள் கையளிக்க முடியாது. நாங்கள் அதனைக் கையளிக்கின்றோம் எனத் தெரிவித்து குறித்த மனுவை அவர்கள் ஜனாதிபதியிடம் வழங்குவதற்கு அனுமதியளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

## மயிலிட்டியை அண்டியதாக சூட்டுச் சத்தங்கள்

**கடந்த 23 வருடங்களாக மயிலிட்டித் துறைமுகம் மற்றும் அதனை அண்டிய கடற் பிரதேசங்கள் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.**

யாழ்ப்பாணம், பெப்.21

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மயிலிட்டிக் கடற்கரைப் பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்பதாக கீரிமலையை அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகாலை வேளையிலேயே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்பதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 23 வருடங்களாக மயிலிட்டித் துறைமுகம் மற்றும் அதனை அண்டிய கடற் பிரதேசங்கள் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்தப் பகுதிகளை விடுவித்து தங்களை மீளக்குடியமர்த்துமாறு கோரி வலி.வடக்கு மக்களால் கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதன்பின்னர் 16ஆம் திகதி அதிகாலை ஒரு மணியிலிருந்தே மயிலிட்டிக் கடற்பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்பதாகவும், ஒவ்வொரு நாளும் அதிகாலை ஒரு மணியிலிருந்து இரண்டு, மூன்று மணி வரையே இந்தச் சத்தங்கள் கேட்பதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இப்பகுதியில் கடற்படையினரின் பயிற்சி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றதா என்பது தொடர்பில் அறியக் கடற்படையினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அது பலனளிக்கவில்லை. (த-)

## பிரபாகரனின் மகனின் கொலைக்கு எதிராகச் சென்னையில் போராட்டம்

சென்னை,பெப். 21

இலங்கை அரசை எதிர்த்து, இலங்கை தூதரகத்தைக் கறுப்புக்கொடி ஏந்தி முற்றுகையிடும் போராட்டம் மார்ச் 4ஆம் திகதி நடைபெறுமென்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கிய ஈழத்தமிழர் படுகொலைக் காட்சிகள், சனல்-4 காணொளி ஆதாரங்களோடு, ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்து கொண்டு இருக்கின்றது. ஈழத் தமிழ் இளைஞர்கள் எட்டுப் பேர் நிர்வாணமாக, கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் தரையில் மிதித்துத் தள்ளப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்ட கோரக் கொலைகளை 25-8-2010 இல் சனல்- 4 வெளியிட்டது, நம் நெஞ்சில் நெருப்பைக் கொட்டியது.

2010ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி சனல்-4 வெளியிட்ட மற்றுமொரு காட்சி நம் இரத்தத்தை உறைய வைத்தது. ஈழத்தங்கை இசைப்பிரியா, சிங்கள இராணுவத்தினரால் கொடூரமாக பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு சிதைந்து தரையில் கிடக்கும் காட்சி, நம் மனங்களை நடுங்கச் செய்தது. இப்போது தேசியத் தலைவர் பிரபாகரனின் இளைய புதல்வன், 12 வயதான பாலகன் பாலச்சந்திரனின் கண் முன்னால் ஐந்து ஈழத்தமிழர்களைச் சுட்டுக்கொன்று விட்டு, பின்பு, அந்தச் சின்னஞ்சிறு பாலகனையும் சுட்டுக்கொலை செய்த கொடுமை, கோடானு கோடி தமிழர்களை மனம் பதறச் செய்து, உலகில் தமிழனுக்கு நாதி இல்லையா? என்ற கேள்வியை எழுப்பிவிட்டது. இன்னும் நம் நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சும் தமிழர் படுகொலைக் காட்சிகளை, சனல்-4 வெளியிடவிருக்கிறது.

மனித குலத்தின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பவும், நீதி கேட்கவும், இலங்கை அரசைக் கூண்டில் நிறுத்தித் தண்டிக்கக் கோரியும், சுதந்திரமான பன்னாட்டு நீதி விசாரணை நடத்தக் கோரியும், சுதந்திர தமிழ் ஈழ தேசத்துக்கு விடியலைப் பெறவும், ஜெனிவாவில் ஐ.நா. சபைக்கு முன் இலட்சக்கணக்கான புலம்பெயர் ஈழத் தமிழர்கள் மார்ச் 4ஆம் திகதி மாபெரும் மக்கள் கூடல் நிகழ்ச்சியில் அறப்போர் கொடி உயர்த்தி முழங்க இருக்கிறார்கள்.

எனவே, எதிர்வரும் மார்ச் 4 ஆம் திகதி அன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரிலும் ஈழத் தமிழ் உணர்வாளர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், கட்சி அடையாளங்கள், கட்சிக் கொடிகள் இன்றி, கறுப்புக் கொடிகள் ஏந்தி இலங்கை அரசை அனைத்துலக நீதிமன்றக் கூண்டில் நிறுத்தித் தண்டிக்கக் கோரி அறப்போர் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், அதே நாளில் தலைநகர் சென்னையில், இலங்கை தூதரகத்தைக் கறுப்புக்கொடி ஏந்தி முற்றுகைப் போராட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றுள்ளது. (த)

## இயன் மருத்துவ பிரிவு இன்று சுகவீன விடுப்பு

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்.போதனா வைத்தியசாலையின் எக்ஸ்ரே கதிர் வீச்சு, மருந்தாளர், ஆய்வு கூடம், உயர்மருத்துவ பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்கள் இன்று ஒருநாள் சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஏற்கனவே தாம் நடத்திய போராட்டத்தின்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை சுகாதார அமைச்சு ஏற்றுக் கொண்டாலும் அவை இதுவரையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்று தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பணியாளர்களின் இந்த சுகவீன போராட்டத்தினால் வைத்தியசாலையின் சேவைகள் இன்று முழுமையாகப் பாதிக்கப்படவுள்ளன.

(ஐ-17)

## சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக உபுல் ஜயசூரிய

கொழும்பு,பெப் 21

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக உபுல் ஜயசூரிய தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று உபுல் ஜயசூரிய வெற்றி பெற்றுள்ளார்.

தலைவர் பதவிக்கு உபுல் ஜயசூரிய, டிரந்த வலலியத்த, தங்கராஜா ஆகியோர் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த தேர்தலில் யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தில் இருந்து வாக்களிக்க 50 பேர் தகுதி பெற்றிருந்த போதும் 21 பேரே வாக்களித்தனர். யாழ். மாவட்ட வாக்குகளில் 17 வாக்குகள் உபுல் ஜயசூரியவுக்கும், டிரந்த வல்லியத்த, தங்கராஜா ஆகியோருக்கு தலா 2 வாக்குகளும் கிடைத்தன.

யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா வாக்குகளை எண்ணி அறிவித்தார்.

(த)

## பிரிட்டன் குடியுரிமை பெற்ற யாழ்ப்பாண நபரை காணவில்லை

### யாழ்.பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.21

பிரிட்டன் குடியுரிமை பெற்ற யாழ்ப்பாணத்து நபர் கொழும்பில் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகரைச் சேர்ந்தவரும் யாழ்.ஈச்சமோட்டைப் பகுதியில் வசித்தவருமான ஆறுமுகம் யோகேஸ்வரன் (வயது-37) என்பவரே காணாமல் போனவராவார்.

லண்டனில் குடியேறி அந்நாட்டு குடியுரிமை பெற்றிருந்த இவர் தனது மனைவி மற்றும் உறவினர்களைப் பார்ப்பதற்காக அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அதன் பின்னர் மீண்டும் லண்டனுக்குச் செல்வதற்காக கொழும்பு சென்றார். இந்த நிலையில் கடந்த 10 ஆம் திகதியிலிருந்து அவரது தொடர்பு எதுவும் கிடைக்கவில்லை. அன்றிலிருந்து அவர் காணாமல் போய்விட்டார் என்று யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப குடும்பஸ்தர் காணாமல் போனமை தொடர்பாக கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக காணாமல் போனவரின் மனைவி குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-4)

## பலாலி விமானத்தள விஸ்தரிப்புக்கு காணிகள் சுவீகரிக்கப்படவில்லை

### யாழ்.அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,பெப். 21

பலாலி விமானப்படைத் தள விஸ்தரிப்புக்கு காணிகள் சுவீகரிக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

ஆயினும் அதற்குரிய நடவடிக்கைகள் முழுமைபெற்று காணிகளின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் கட்டத்தை எட்டியிருப்பதாக மாவட்ட செயலகத்தின் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

வலி.வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் பலாலி, காங்கேசன்துறை, மயிலிட்டி ஆகிய பிரதேசங்களில் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கேட்டபோது, பலாலி விமானப்படைத்தளம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் என்பன விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அதற்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். சிவில் நிர்வாக அடிப்படையில் மேற்படி சுவீகரிப்பு நடவடிக்கைகள் உங்கள் தலைமையிலான அரச அதிகாரிகளாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகள் ஏதாவது மேற்கொள்ளப்படுகின்றனவா என்று கேட்கப்பட்டது.

அவ்வாறு எந்தவொரு நடவடிக்கைகளும் தன்னால் மேற்கொள்ளப்படவில்லை என அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பதிலளித்தார். ஆனாலும் பலாலி விமானத்தளம் விமானப்படையினராலேயே சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது. மக்களின் காணிகளை சுவீகரிப்பதற்குரிய சகல ஏற்பாடுகளும் முடிக்கப்பட்டு நஷ்டஈடு வழங்கும் நிலையிலேயே தற்போதுள்ளது. மேலும் இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் 1987 ஆம் ஆண்டே வெளியிடப்பட்டதாகவும் மேற்படி மாவட்ட செயலகத்திலுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

# மீள்குடியமர்ந்த 120 இளைஞருக்கு தெல்லிப்பழையில் வேலைத்திட்டம்

## 76 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.21

*மீள்குடியமர்வு செய்யப்பட்ட தெல்லிப்பழைப் பிரதேசத்தில் 76 இலட்சம் ரூபா நிதியுதவியில் 120 இளைஞர்களைக் கொண்டு முன்மாதிரி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.*

*தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது என்று மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் இ.ஈஸ்வரராஜா தெரிவித்தார்.*

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்றிட்டங்கள் தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு நேற்று முன்தினம் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள நிஸ்கோ அலுவலகத்தில் இடம்பெற்றது.

மன்றத்தின் செயற்றிட்டங்கள் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இந்த வருட செயற்றிட்டமாக மீள்குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் சிறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் முதற்கட்டமாக தெல்லிப்பழைப் பிரதேசத்தில் 4 மாத வேலைத் திட்டமாக 120 இளைஞர்களைக் கொண்டு 76 இலட்சம் ரூபா நிதியுதவியில் முன்மாதிரித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தெல்லிப்பழைப் பிரதேசத்தில் உள்ள குளங்கள், சிறு வீதிகள் போன்றவற்றை புனரமைப்புச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களுக்காக பிரதேசத்தைச் சேர்ந்த 120 இளைஞர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இந்த இளைஞர்களுக்கு நாளாந்த 350 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் தெரிவித்தார்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் 7 ஆயிரத்து 902 இளைஞர்கள் அங்கத்தவர்களாக இளைஞர் சேவைகள் மன்றத்தில் இணைந்துள்ளனர்.

இவர்களுக்கு சிறு தொழில்களுக்கான கடன் உதவிகள் வழங்கப்படுவதுடன் இளைஞர்களை முன்னேற்றுவதற்கான கலை கலாசார நிகழ்வுகளையும் நடத்தி வருகின்றோம். இன்னும் பல முன்னேற்றகரமான வேலைத் திட்டங்களை இளைஞர் சேவைகள் மன்றம் மேற்கொள்ளவுள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14 - ரி)

## கச்சதீவுத் திருவிழா பூசை இன்று ஆரம்பம்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவை முன்னிட்டு இன்று பிற்பகல் அங்கு பூசைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான ஒழுங்குகளை நெடுந்தீவு பங்குத் தந்தை மேற்கொண்டுள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை பங்குத் தந்தை அமலராஜ் அடிகள் கொடியேற்றி திருப்பலி பூசைகளை ஒப்புக் கொடுப்பார்.

சனிக்கிழமை இந்தியக் குருமார் விசேட திருப்பலிப் பூசைகளை நடத்துவர்.

இறுதித் திருப்பலிப் பூசையும் சுற்றுப் பிரகாரமும் ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

சனிக்கிழமையே பெரும் எண்ணிக்கையில் இந்திய யாத்திரிகர்கள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முறை இங்கிருந்து செல்லும் மக்கள் பலத்த சோதனைகளுக்குப் பின்னரே அனுமதிக்கப்படலாம் எனவும் பொருள்களைக் கொண்டு செல்வதில் கட்டுப்பாடுகள் இறுக்கமாகவும் இருக்கும் எனவும் தெரிய வருகின்றது.

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சமுத்திரதேவா படகு திருவிழா இறுதி நாள்கள்வரை கச்சதீவுக்கான சேவையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## தனிநாயகம் அடிகளாரின் உருவச் சிலைக்கு நெடுந்தீவில் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப்.21

நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் உள்ள தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் உருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு தனிநாயகம் அடிகளார் தமிழ் மன்றம் மலர் மாலை அணிவித்து நினைவு நூற்றாண்டைக் கொண்டாடியது.

தனிநாயகம் அடிகள் தமிழ் அடிகள் தமிழ் மன்றத் தலைவர் புலவர். அ.வெ. அரியநாயகம், லண்டனில் வதியும் மருத்துவத்துறை பேராசிரியர் மருது கந்தப்பு, நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷியன் உட்பட பலர் மலர் மாலை அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் பொது மக்களும் கலந்துகொண்டனர். (ம-7)

## ஆனைவிழுந்தான் வெள்ளவாய்க்கால் புனரமைப்பு

புலோலி மத்தி, புலோலி மேற்கு கிராமங்களை ஊடறுத்துச் செல்லும் ஆனைவிழுந்தான் வெள்ளவாய்க்கால் ஆழமாக்கப்பட்டுத் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

60 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஒன்றிணைந்து சிரமதானம் மூலம் இந்தப் பணியை மேற்கொண்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெற்ற இந்தச் சிரமதானப் பணியை பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பிரிவு பொலிஸார் நேரில் பார்வையிட்டனர்.

அடிக்கடி பெய்துவரும் மழையால் இந்த வெள்ள வாய்க்காலில் தேங்கும் வெள்ளம் வெள்ள வாய்க்காலையும் மீறி இந்தப் பகுதியை அண்மித்துள்ள வெங்காயத் தோட்டங்களில் அழிவை ஏற்படுத்தி வருகிறது.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தூர்ந்து போயிருந்த வெள்ள வாய்க்காலை வெட்டி ஆழமாக்கித் துப்புரவு செய்ய புலோலி மத்தி, புலோலி மேற்கு கமக்காரர் அமைப்புக்கள் தீர்மானித்தன. இந்த நிலையில் அதனை சிரமதானம் மூலம் புனரமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## வீதி புனரமைப்பு பணிகள் மீண்டும் ஆமை வேகத்தில்

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ். நகர அண்டிய பிரதான வீதிகளின் அகலிப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் தற்போது ஆமை வேகத்தில் நடைபெற்று வருகின்றன.

கடந்த வாரத்தில் ஜனாதிபதி வருகைக்காக நகரை அண்டிய வீதிகள் மற்றும் வாய்க் கால்களில் புனர்நிர்மாணப் பணிகள் இரவு, பகல் பார்க்காது முழு வீச்சில் இடம்பெற்றன.

வீதிகளுக்கும் துரித கதியில் காப்பெற் போடப்பட்டது.

இரண்டு நாள் பயணத்தை முடித்து விட்டு ஜனாதிபதி கொழும்பு திரும்பியதும் வீதிகளில் புனரமைப்புப் பணிகளும் ஓய்ந்து காணப்படுகின்றன.

கே.கே.எஸ்.வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதிகளின் புனரமைக்கப்படாத பகுதிகளுக்கு கற்கள் பறிக்கப்பட்டு சீர்செய்யும் பணிகள் ஆமை வேகத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதனால் குறித்த பகுதிகள் ஊடான போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-17)

## கிராம அதிகாரியைத் தாக்கியோரை உடனடியாகக் கைது செய்யுங்கள்

### பூம்புகார் பொது அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.21

அரியாலை கிழக்கு ஜே/90 பிரிவு கிராம சேவையாளரைத் தாக்கிய நபர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு பூம்புகார் பிரதேச பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கிராம சேவகர் தாக்கப்பட்டமை தொடர்பாக நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடிக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலை அடுத்து இந்த விடயம் தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

குறிப்பிட்ட சில நாள்களில் உரியவர்கள் கைது செய்யப்பட்டுத் தண்டனை வழங்கப்படாது விட்டால் பிரதேச செயலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்த வேண்டிவரும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் இனிவரும் காலங்களில் நடைபெறாது இருக்க உரிய நடவடிக்கையை பொலிஸார் மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பான கோரிக்கையை பிரதேச செயலர் ஊடாக யாழ். அரச அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## கச்சதீவுக்கான சேவையில் குமுதினி

நெடுந்தீவு -குறிகாட்டுவான் சேவையில் உள்ள அரச படகு குமுதினி கச்சதீவுக்கான சேவையிலும் ஈடுபடுத்தப்படவுள்ளது.

ஏற்கனவே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள குமுதினியைக் கச்சதீவுக்கான சேவையிலும் ஈடுபடுத்துவதால் நெடுந்தீவு போக்குவரத்துச் சேவை இதனால் மேலும் பாதிக்கலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

நெடுந்தீவில் இருந்து காலை 6.15 மணிக்குப் புறப்படும் குமுதினி காலை 9 மணிக்கு மீண்டும் நெடுந்தீவுக்கு வரும் அங்கிருந்து மீண்டும் பிற்பகல் 3.30 மணிக்கு குறிகாட்டுவான் சென்று அங்கிருந்து புறப்பட்டு நெடுந்தீவுக்குச் சென்று அங்கிருந்து கச்சதீவுக்குச் செல்லும் எனக் கூறப்படுகின்றது.

கச்சதீவுத் திருவிழாவின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும் குமுதினி கச்சதீவில் இருந்து நெடுந்தீவுக்குப் புறப்படும் எனவும்-

அன்றையதினம் முற்பகல் 10 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவுக்குச் செல்லும் எனவும் தெரிகின்றது.

தனியார் படகுகள் 23 ஆம் திகதி காலை நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்குப் புறப்படும் படகுக் கட்டணமாக ஒருவருக்கு தலா 200 ரூபா அறவிடவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு நிகழ்வு ஆரம்பம்





யாழ்ப்பாணம், பெப்.21

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா தொடக்க நிகழ்வு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. தனிநாயகம் அடிகளின் திருவுருவப்படம் யாழ். பிரதான வீதியில் புனித பத்திரிசியார் கல்லூரிச் சந்தியில் இருந்து ஊர்வலமாக பாடசாலை நோக்கிச் சென்றது.

இசை வாத்தியங்கள் முழங்க மாணவ, மாணவியரின் கலை பண்பாட்டு நிகழ்வுகளுடன் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

பின்னர் கல்லூரி மண்டபத்தில் மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்பு நடனத்துடன் அரங்க நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வின் வரவேற்புரையை கல்லூரி அதிபர் அருட்திரு.ம.ஜெறோ செல்வநாயகம் நிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட பீடாதிபதியும் நூற்றாண்டு விழாக்குழுத் தலைவருமான பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஆசியுரையையும், நூற்றாண்டு விழாப் பிரகடனத்தையும் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நிகழ்த்தினார்.

ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்தினார்.

'நூற்றாண்டு விழாவின் இலக்கு' எனும் தொனிப் பொருளில் நூற்றாண்டு விழாக் குழுவின் இணைச் செயலாளர் அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரமும் தொடக்கப் பேருரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபனும் 'நன்றாகத் தமிழ் செய்வோம்' எனும் தொனிப் பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் உரையாற்றினர். (ம-4)

### வெறும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
குத் தலைமையேற்கவுள்ளார்.

கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தோற்கடிக்க, அமைச்சர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் அதிகமானோரை ஜெனிவாவுக்கு அனுப்பி கடுமையான பரப்புரைகளை இலங்கை மேற்கொண்டது.

எனினும் அந்த முயற்சி தோல்வியில் முடிந்திருந்தது.

இம்முறையும், அமெரிக்காவுடன் வெற்றி பெற முடியாது என்று உணர்ந்த நிலையிலேயே எதிர்வரும் திங்கள்கிழமை ஆரம்பமாகவுள்ள ஜெனிவா கூட்டத்தொடருக்கு முக்கியத்துவம் அளிக்காமல் ஒதுங்க இலங்கை முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

(த)

### 2009...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பதுங்குகுழி ஒன்றில் பாலச்சந்திரன் தடுத்து வைக்கப்பட்டுள்ளது மற்றும், அவர் சுட்டுக் கொல்லப் பட்டுக் கிடக்கும் காட்சிகள் அடங்கிய நான்கு ஒளிப்படங்களை வைத்து மேற்கொண்ட ஆய்வுகளிலேயே இது தெரியவந்துள்ளதாக இலங்கையில் ஜனநாயகத்துக் கான ஊடகவியலாளர்கள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த ஒளிப்படங்களின் சுயதரவுகளின் படி, 2009 ஆம் ஆண்டு மே 19ஆம் திகதி காலை 10.14 மணிக்கும், 12.01 மணிக்கும் இடையில் ஒரே ஒளிப்படக் கருவியால் எடுக்கப் பட்டுள்ளன என்று ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. எனவே, பாலச்சந்திரன் 2009 மே 19ஆம் திகதி நண்பகலுக்குச் சற்று முன்னதாகவே படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இது கேள்விக்கிடமின்றி நிறைவேற்றப் பட்ட மரணதண்டனை என்று தாம் உறுதிப் படுத்துவதாகவும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

(த)

### பாலச்சந்திரனின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கேள்வி எழுப்பிய போது,

இலங்கை இராணுவத்தினரால் கொல்லப் பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளையமகனின் ஒளிப்படங்களைப் பார்த்தேன். ஆனால் அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப் படுத்த முடியவில்லை.

இலங்கை ஒரு முக்கியமான அயல்நாடு, நண்பன். எல்லாத் துறைகளிலும் இலங்கையுடன் இந்தியா உறவுகளை வலுப்படுத்தி வருகிறது. அதேவேளை, மனித உரிமைகள் நிலை குறித்தும் கவலை வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கும் ஆதரவளித்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(த)

### அமெரிக்கா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தெரிவித்துள்ளது.

வொஷிங்ரனில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நாளாந்தச் செய்தியாளர் சந்திப்பில், பாலச்சந்திரன் தடுத்து வைக்கப்பட்டு, கொல்லப்பட்டுள்ள ஒளிப்படங்கள் வெளியாகியுள்ளமை குறித்து இராஜாங்கத் திணைக் களப் பேச்சாளர் விக்ரோரியா நூலன்டிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெற்ற அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறல்கள் குறித்து, தொடர்ந்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாகவும், ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் இந்த விவகாரம் தொடர்பாக தீர்மானம் கொண்டுவர அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரின் முடிவில், அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களில் ஈடுபட்ட எல்லாத் தரப்பினரையும் முழுமையாகப் பொறுப்புக் கூறுவதற்கு ஆதரவளித்தோம்.

நீண்டகாலப் பிரச்சினையாக உள்ள நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விவகாரங்களுக்குத் தீர்வுகாண இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கடுமையான கவலை தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையை அமெரிக்கா வரவேற்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நாம் இது தொடர்பாக, சொந்தமாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம்- என்றார்.

(த)

### வாக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தங்களுக்கு முகம்கொடுக்க முடியாத நிலையில் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

குறிப்பாக, அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜெனிவாக் கூட்டத் தொடரில் ஏற்படும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவும், எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இலக்குவைத்துமே அரசு வட மாகாண சபைத் தேர்தல் திகதியை தீர்மானித்துள்ளது.

இதற்கான அறிவிப்பை விரைவில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளில் அரசு இறங்கியுள்ளது என்றும் தேர்தல் திகதியை உத்தியோக பூர்வமாக அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிப்பு விடுக்கப்படவுள்ளது என்றும் நம்பகரமாகத் தெரியவருகிறது.

எனவே, வடக்குத் தேர்தல் அறிவிப்பை விடுப்பதற்கு ஜனாதிபதியின் கட்டளைக்காகத் தேர்தல் திணைக்களம் காத்திருக்கிறது என அறியமுடிகின்றது. ஏனெனில், இயங்காத சபை ஒன்றுக்கு அதாவது மாகாணசபையொன்றுக்கு முதன்முதலாகத் தேர்தல் நடைபெறும் போது அதற்கு ஜனாதிபதியின் உத்தரவு அவசியம்.

குறிப்பாக, 1988ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 10 (1) உப பிரிவிற்கமைய ஏதேனுமொரு மாகாணத்திற்கு முதன்முதலாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ள போது அத்தகைய தேர்தலொன்றை நடத்துமாறு ஜனாதிபதி தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவொன்றை பிறப்பித்தல் வேண்டும்.

இதற்கமைய வடமாகாணசபைத் தேர்தல் விடயத்தில் ஜனாதிபதியின் உத்தரவுக்காகத் தேர்தல் திணைக்களம் காத்திருக்கின்றது.

குறிப்பாக, ஏனைய மாகாணங்களுக்கு ஏற்கனவே தேர்தல்கள் நடைபெற்றுள்ளதால் பதவிக்காலம் முடிவடையும்போது அல்லது அரசமைப்பின்படி ஆளுநர் குறித்த சபையைக் கலைத்தாலே தேர்தல் ஆணையாளரால் தேர்தலுக்குச் செல்லமுடியும். இங்கு ஜனாதிபதியின் உத்தரவு முக்கியம் பெறாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே, வடக்குத் தேர்தல் செப்ரெம்பரில் நடத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தமை தெரிந்ததே.

(த-சி)

### இதைவிட...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் என்ற இளம் தளிரை, துப்பாக்கிக் குண்டுகளால் கருகச் செய்த கோர நிகழ்ச்சியைக் காணும் போது, கொடுமை, கொடுமை, இதை விடப்பெரிய கொடுமையை வேறெங்கும் காண முடியாது. அந்தப் பச்சிளம் பாலகன் என்ன பாவம் செய்தான்.

உலகத்திலே உள்ள எந்த நாட்டிலும் இப்படிப்பட்ட கொடூரமான கொலை செய்யப்பட்டதற்கான குறிப்பே இல்லை. மணல் சாக்குகளின் மத்தியிலே பிணைக்கைதியாக அந்தச் சிறுவனை அடைப்பதற்கே கல் நெஞ்சம் வேண்டும். அந்தப் பச்சிளம் பாலகன் என்ன பாவம் செய்தான். வெளியிடப்பட்டுள்ள அந்தப் புகைப்படங்களைக் கண்டு கலங்கிக் கண்ணீர் விடாத கட்சித் தலைவர்களே தமிழகத்திலே இல்லை. அந்த சிறுவனை நோக்கித் துப்பாக்கியை நீட்டுவதற்கு எத்தகைய நெருப்பு நெஞ்சம் வேண்டும்.

அமைதியாக ஆயுதமின்றிச் சமாதானம் பேசச் சென்ற விடுதலைப் புலிகளின் தலைவர்களையெல்லாம் ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்த இலங்கை இராணுவம், 12 வயது பையனைக்கூட மணல் மூட்டைகளுக்கு மத்தியிலே தனிமைச் சிறையிலே வைப்பதைப் போல வைத்திருக்கவேண்டுமென்றால், எத்தகைய கொடுமை அது. சிங்கள இராணுவத்தினர் அடுக்கடுக்காகச் செய்த அட்டூழியங்களையெல்லாம் லண்டனில் உள்ள சனல்-4 தொலைக்காட்சி புகைப் படங்கள், வீடியோ காட்சிகள் மூலமாக உலகத்துக்குத் தெளிவாக்கிக் கொண்டு வருகிறது. உலக நாடுகளுக்கு மத்தியிலே உத்தமராக வேடம் தரித்த இலங்கை ஜனாதிபதியின் உண்மைச் சொரூபம் தோலுரிக்கப்பட்டு வருகிறது. பாலகன் பாலச்சந்திரனின் இந்த மூன்று புகைப் படங்களையும் காணும் உலக நாடுகள் எல்லாம் சிங்கள இனவாத அரசுக்கு எதிராக இயல்பாகவே தங்கள் குரலை எழுப்பியே தீரும்- என்றுள்ளது.

(த)

### இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அளிக்கப்பட்டுள்ளது.

கொச்சி கடற்படைத் தளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில், இலங்கைக் கடற்படை அதிகாரி உள்ளிட்ட 17 அதிகாரிகள் பயிற்சியை முடித்து பட்டத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இவர்களில் 11 பேர் இந்தியக் கடற்படையையும், 4 பேர் இந்தியக் கடலோரக்காவல் படையையும், ஒருவர் இலங்கைக் கடற்படையையும், மற்றொருவர் பங்களாதேஷ் கடற்படையையும் சேர்ந்தவர்களாவர்.

வான் போர்முறை, நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் முறை, இலத்திரனியல் போர் முறை, அடிப் படை வான் தொடர்பாடலுக்கு மேலதிகமான தொடர்பாடல், பறக்கும் நடைமுறைகள் உள்ளிட்டவற்றைக் கொண்ட பயிற்சியே இங்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு இலங்கைக் கடற்படையினருக்கான பயிற்சிகளை தென்னிந்தியாவுக்கு அப்பால் வைத்துக்கொள்ளுமாறு இந்தியக் கடற்படைக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி உத்தரவிட்டுள்ளார் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், அதற்கு முரணான வகையில் தமிழ்நாட்டுக்கு அருகில் உள்ள, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியின் சொந்த மாநிலத்திலேயே இலங்கைக் கடற்படைக்கு பயிற்சி அளிக்கப்பட்ட விபரம் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

(த-சி)

### மன்னிக்க...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இலங்கை இராணுவத்தால் ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டமை, மன்னிக்க முடியாத மாபெரும் போர்க் குற்றமாகும் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

இதனால் இலங்கை மீது சர்வதேச பொருளாதாரத் தடையைக் கொண்டு வர மத்திய அரசு அமெரிக்காவுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

சென்னையில் நேற்று ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவன் பாலச்சந்திரன் இலங்கை இராணுவத்தால் ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டதற்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது கொஞ்சம் கூட மனிதாபிமானமற்ற செயல். ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சியில் நடந்தது தான் நினைவுக்கு வருகிறது. ஹிட்லர் ஆட்சியில் யூதர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டனர். அதே போல இன்றைய இலங்கை அரசு தமிழர்களை வேட்டையாடிக் கொன்று குவித்து வருகிறது.

இதை கருத்தில் கொண்டு மத்திய அரசு, அமெரிக்காவுடனும் இன்னும் ஒத்த கருத்துடைய நாடுகளுடனும் கலந்து பேசி, இலங்கையில் நடந்த இனப் படுகொலை தொடர்பாக ஐ.நாவில் தீர்மானம் கொண்டு வர வேண்டும். அமெரிக்காவுடன் இணைந்து இலங்கை மீது சர்வதேச பொருளாதாரத் தடையைக் கொண்டு வர வேண்டும். இலங்கையில் இடம் பெயர்ந்து முகாம்களில் வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் தங்களது சொந்த இடங்களில் வாழ அனுமதிக்கப்படும் வரை, அவர்கள் சிங்களவர்களுக்கு இணையாக மரியாதையுடன் வாழும் வரை இந்தப் பொருளாதாரத் தடை நீடிக்க வேண்டும்.

சிறுவன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டது மன்னிக்கவே முடியாத போர்க் குற்றமாகும். இது தொடர்பாக இலங்கை அரசு மீது போர் குற்ற விசாரணை நடத்தச் செய்ய சர்வதேச நாடுகளுடன் இணைந்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (த-1)

### போர்க்குற்ற...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இலங்கை மீது சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தி கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு ஐ.நா. மனித உரிமை பேரவை அங்கத்துவ நாடுகள் அனைத்தும் ஆதரவளிக்க வேண்டும் என்றும் மனித உரிமைக் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை விவகாரம் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்ட கோரிக்கையை சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் விடுத்துள்ளது.

இறுதிக் கட்டப்போரின் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம் என்றும், 2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டில் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு இலங்கை அரசு அச்சுறுத்தல் விடுத்து வந்தது என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது உயிரிழந்த பொதுமக்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச சுயாதீன விசாரணைகளை வலியுறுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட உள்ள பிரேரணைக்கு அனைத்து உறுப்பு நாடுகளும் ஆதரவளிக்க வேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-சி)

### இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பயன்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

பாலச்சந்திரன் குறித்த போர்க்குற்ற ஆதாரம் மட்டுமன்றி இன்னும் அதிர வைக்கும் பல ஆதாரங்கள் தம்மிடம் இருக்கின்றன என்றும் சனல்-4 அதிரடியாக அறிவித்துள்ளது.

சனல் - 4 ஆவணப்பட இயக்குநர் கெல்லும் மக்ரே, தமிழக தொலைக்காட்சி ஒன்றிற்கு பிரிட்டனிலிருந்து வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசைத் தண்டிக்க ஐ.நா. தவறியுள்ளது. ஆனால், இப்பொழுது அதற்கான சந்தர்ப்பம் மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. இதை ஐ.நா. சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்தமாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைக்கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ள நிலையில், சனல்-4 வெளியிட்ட புகைப்படங்கள் உலகம் எங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. அதேவேளை, சனல்-4 தொலைக்காட்சி போர் தவிர்ப்பு வலயம் என்ற ஆவணத்தை இந்தக் கூட்டத் தொடரை முன்னிட்டு வெளியிடவுள்ளது.

இதுதொடர்பில் மேலும் மக்ரே தெரிவித்திருப்பவை வருமாறு -

போர்வெற்றிகளுக்கு தாங்கள்தான் காரணம் என்று கூறுபவர்கள்தான் போர்க்குற்றத்தையும் பொறுப்பேற்க வேண்டும். இந்தப் போர்க் குற்றத்தை தட்டிக்கேட்டகத் தவறினால் எதிர்காலத் தலைமுறை இதற்காக மீண்டும் புரட்சியில் இறங்கலாம். அதனால் இந்தப் பிராந்தியத்தின் அமைதிக்காக இப்பொழுதே இதை தட்டிக்கேட்க வேண்டியது அவசியம்.

இராணுவம் போர்க்குற்றத்தில் ஈடுபட்டிருந்தால் இராணுவத் தரப்புத்தான் பொறுப்பு. ஜனாதிபதி முப்படைத்தளபதி. அவரது சகோதரர் கோத்தபாய இராணுவச் செயலாளர். எனவே, இந்தக் குற்றங்களுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பொறுப்பு வகிக்கின்றார் - என்றார் மக்ரே.

இவ்வாறான போர்க்குற்றச்சாட்டுக்களை போலியானவை என்றும் மேற்குலக சதி என்றும் இலங்கை கூறுகிறதே என்பதற்கு பதில் அளித்த மக்ரே, இவை உண்மையானவை என்பதற்கான ஆதாரங்களை உறுதி செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் இலங்கையின் இறைமையில் தலையிடக்கூடாது என்று இலங்கை சொல்வது குறித்துக் கேட்டபோது, ஐ.நாவில் இலங்கை உட்பட பல நாடுகள் இணைந்து தம் மக்களைப் பாதுகாக்க ஒப்பந்தம் செய்துள்ளன. எனவே, எந்த நாடு குற்றங்களை பொதுமக்களுக்கு எதிராகச் செய்தாலும் அது குறித்துக் கேட்க ஐ.நாவுக்கு முழு உரிமை இருக்கிறது - என்றார்.

''பிரிட்டன், அமெரிக்கா இழைத்த போர்க் குற்றங்களுக்கு எதிராக நான் படம் தயாரித்திருக்கிறன். யாராக இருந்தாலும் போர்க்குற்றங்களுக்குதிராக நான் படம் தயாரித்திருக்கிறன். என்மீது குற்றம் சாட்டி அல்லது போலியான படங்கள் என்று குற்றம் சாட்டி இலங்கை தப்பிக்க முனைகிறது'' என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கு எதிரான பிரேரணையை கொண்டுவரும் நடவடிக்கையில் இந்தியாவின் பங்கு முக்கியமானது என்றும் கடந்த ஆண்டு கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா நீர்த்துப்போகச் செய்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க அனைவரது ஒத்துழைப்பும் அவசியமானது என்றும் கெல்லும் மக்ரே தெரிவித்தார்.

(த-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சனல்-4 படங்களால் அரசுக்கு மேலும் ஒரு சிக்கல்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இரண்டாவது புதல்வர் 12 வயது பாலச்சந்திரன் தொடர்பான படங்கள் சிலவற்றை லண்டன் சனல்-4 தொலைக்காட்சி நிறுவனம் மீண்டும் வெளியிட்டு உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. சென்னை இந்து பத்திரிகை முதல் பல பத்திரிகைகள் அப்படங்களை வெளியிட்டு கருத்துக்களையும் தெரிவித்துள்ளன. இலங்கையிலும் நேற்றைய தமிழ்ப் பத்திரிகைகளில் அவைகளைக் காண முடிந்தது.

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் கூட்டம் அடுத்த வாரம் ஆரம்பமாகவிருக்கும் நிலையில் இந்தப்படங்களை சனல்-4 நிறுவனம் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டும் பாலச்சந்திரனின் படம் ஒன்றை சனல்-4 வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இம்முறை பாலச்சந்திரன் மணல் மூடைகள் அடுக்கி அமைக்கப்பட்ட ஒரு பதுங்கு குழி போன்ற இடத்தில் தன்னந்தனியாக மேல் உடம்பில் சால்வைத்துண்டு ஒன்றை போட்டபடி ஏக்கத்தோடு கண்களை எங்கோ செலுத்தி எதையோ ஆர்வத்துடன் பார்ப்பது போல் ஒரு படமும், இன்னொரு படத்தில் எதையோ வாயில் வைத்து பசியைப் போக்க உண்பது போலவும் காட்டப்பட்டுள்ளது. மூன்றாவது படத்தில் அவர் சுடப்பட்டு நிலத்தில் கிடக்கிறார். மேல் உடம்பை மறைப்பதற்காக சட்டையோ துணியோ இல்லை. அவரது தலைப்பக்கமாக மிக அருகிலேயே சப்பாத்துக் கால் ஒன்றும் செருப்பு அணிந்த கால் ஒன்றும் தெரிகின்றன. பாலச்சந்திரன் இறந்து கிடப்பதான படம் முன்னரும் சனல்-4 தொலைக்காட்சியில் வெளியிடப்பட்ட ஒன்றுதான்.

இப்படங்களை பார்ப்பவர்களின் மனங்கள் நிச்சயம் கல் நெஞ்சர்களானாலும் ஒரு கணம் துணுக்குறத்தான் செய்யும். புலிகளின் தலைவரின் புதல்வன் என்பதற்காகத்தான் இந்த பச்சிளம் பாலகன் கொல்லப்பட்டானா என்ற கேள்வி எழுவதும் இயற்கையே. பாலச்சந்திரன் உயிருடன் இருக்கும் போதே பிடிக்கப்பட்டு பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை இந்தப்படங்கள் ஏற்படுத்துவதாக உள்ளன.

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை கூடும் நேரத்தில் இலங்கைக்கு எதிராக இரண்டாவது பிரேரணை ஒன்றை தாக்கல் செய்ய அமெரிக்கா முனைப்புடன் செயல்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் ஏற்கனவே இலங்கை அரசு தானே அமைத்த நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை முறையாக செயற்படுத்தவில்லை என்றும் அதன் போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்று ஆணையாளர் நவநீதம்பிள்ளை பேரவைக்கு அழுத்தம் கொடுத்துள்ள தருணத்தில் இந்தப் படங்களை சனல்-4 வெளியிட்டிருப்பது கவனத்துக்குரியது.

இலங்கை மீது மேலும் நெருக்குதல்களை உருவாக்குவதற்கு இது பயன்படும் என்று கருதப்பட்டாலும் அதே நோக்கத்தை பின்புலமாக வைத்தே அவை வெளியிடப்பட்டுள்ளன என்று இலங்கை அதிகாரிகள் தமக்குச் சார்பாக சொல்லிக் கொள்வதற்கு இவை உதவியிருக்கின்றன. அதுமட்டுமல்ல இப்படங்கள் வெளியான கையோடு கருத்து வெளியிட்டுள்ள இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய இப்படங்கள் போலியானவை என்று மறுத்துள்ளார். இலங்கைக்கு எதிரான திட்டமிட்ட செயற்பாடுகள் இவை. நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலேயே இராணுவத்துக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார் அவர்.

இராணுவத்துக்கு அல்லது பொலிஸாருக்கு எதிராக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ராணுவத்தைச் சார்ந்த அதிகாரிகள் அல்லது பொலிஸ் அதிகாரிகள் அவசரப்பட்டு மறுப்பது ஒன்றும் புதிதல்ல. அண்மையில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் முன்றிலில் நடந்த அமைதியான உண்ணாவிரதத்தை சிலர் குழப்ப முயன்ற போது அவர்களில் சிலர் பிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டமை நிராகரிக்கப்பட்டமையும் சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் காணும் வகையில் பத்திரிகைகளில் வெளியான செய்திகளும் படங்களும் திரிக்கப்பட்டவை, புனையப்பட்டவை என்றும் ராணுவ பொலிஸ் அதிகாரிகள் கூறியிருந்ததும் அண்மைக்கால நிகழ்வுகள். நடந்து விட்ட சம்பவங்களால் தங்கள் தரப்பால் அரசுக்கு அசௌகரியம் ஏற்படாமல் இருக்கும் படி பார்த்துக் கொள்வது அவர்களின் கடமையாக இருக்கலாம். ஆனால் சர்வதேச மட்டத்தில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை வெறும் மறுப்பு அறிக்கைகளாலும் நையாண்டி மொழிகளாலும் நிராகரித்துவிட முடியும் என்று கருதப்படுவது தவறு. எனவே குற்றச்சாட்டுக்கள் உள்நாட்டில் அல்லது சர்வதேச மட்டத்தில் எங்கிருந்து வந்தாலும் அவைகளை முறையாக முகம் கொடுத்து விசாரிப்பதும், அதற்கேற்ப செயற்பாடுகளை நகர்த்துவதும் அரசின் பொறுப்பு.

விசாரணை என்று சொல்லும் போது குற்றச்சாட்டுக்குள்ளானவர்களே அல்லது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்களே விசாரணையாளர்களாக மாறும் ஒரு போக்கு இலங்கையில் சமீபகாலத்தில் தென்படத் தொடங்கியுள்ளது

எனவேதான், அரசின் மீது பாரதூரமான எந்த குற்றச்சாட்டு வந்தாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தார்மிக ஜனநாயக அரசானது சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொது நடுவர்களைக் கொண்டு நம்பகத்தன்மையுள்ள பகிரங்க விசாரணைகளை நடத்த வேண்டும். அதன் மூலம் வரும் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே நல்லிணக்கத்தை மட்டுமல்ல சர்வதேச நன்மதிப்பையும் அதிகரித்துக் கொள்ள முடியும்.

ஐ.நா.செயலாளர் நாயகம் அமைத்த நிபுணர் குழுவின் அறிக்கையை அரசு நிராகரித்திருந்தது. ஆனால்,அந்த அறிக்கையின் உள்ளடக்கம் மனித உரிமைப் பேரவையினால் நிராகரிக்கப்படவில்லை. கடந்த சனல்-4 தொலைக்காட்சிப்படங்கள் வெளியான போதும் அவைகளை அரசு நிராகரித்தது. ஆனால் இம்முறை மேலும் ஒரு படத்தொகுப்பை சனல்-4 வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் அடுத்த வாரம் ஆரம்பமாகும் ஐ.நா.மனித உரிமை பேரவையை அரசு எவ்வாறு எதிர்கொள்ளும் என்பதை காத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# பனம் கைத்தொழில் போதனாசிரியர்கள் பயிற்சி பெறுவதற்காகத் தாய்வானுக்கு

யாழ்ப்பாணம்,பெப். 21

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பனம் கைத்தொழில் போதனாசிரியர்களில் தெரிவு செய்யப்படும் போதனாசிரியர்களை பனை அபிவிருத்திச் சபை தாய்வான் நாட்டுக்கு பயிற்சி பெறுவதற்கு அனுப்பி வைக்க தீர்மானித்துள்ளது என்று பனை அபிவிருத்தி சபைத்தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பனைசார் கைத்தொழில் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற 25 போதனாசிரியர்களை தாய்வான் நாட்டுக்கு அனுப்பி வைக்கவுள்ளோம்.

அந்த நாட்டில் உள்ள வடிவமைப்பாளர்கள், கலைஞர்கள் இந்த 25 பேருக்கு உரிய பயிற்சிகளை வழங்குவர்.

புதிய வடிவமைப்புக்களை கற்றுக்கொண்டு வெளியேறுவதால் நாட்டில் சந்தை வாய்ப்பை அதிகரிப்பதோடு பொருளாதார வளர்ச்சியையும் அதிகரிக்கச் செய்ய முடியும்.

இந்தப் பயிற்சி நெறியில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள போதனாசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சுக்கு விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட பின்னர் போதனாசிரியர்கள் தாய்வான் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இந்த பயிற்சிகள் 3 நாள்கள் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

(ம-13)

## வெளிநாடுகளில் இருந்து வருவோரால் குடாநாட்டில் தலைதூக்கும் மலேரியா

**பிராந்திய சுகாதார திணைக்களம் தகவல்**

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ். மாவட்டத்தில் முற்றாக அழிக்கப்பட்ட மலேரியாக் காய்ச்சல் வெளிநாடுகளிலிருந்து வருவோரால் மீண்டும் தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினர் அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதனை அடுத்து மாவட்டத்தில் உள்ள ஆதார வைத்தியசாலைகளில் மலேரியா பரிசோதனைப் பிரிவுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் மலேரியாக் காய்ச்சலால் 15 பேர் பீடிக்கப்பட்டவர்களாவும் இவர்களில் 5 பேர் சாதாரண மலேரியாவாலும் 10 பேர் மூளை மலேரியாவாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த 15 பேரும் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்து யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்தவர்கள் என்று இனம் காணப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்து மீளக்குடியமர்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால் மலேரியாவின் தாக்கம் அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மீண்டும் எமது பிரதேசத்தில் இருந்து முற்றாக மலேரியா காய்ச்சலை 2014 ஆம் ஆண்டுக்குள் தடுக்கும் செயற்பாடுகளில் ஓர் அங்கமாக ஆதார வைத்தியசாலைகளில் மலேரியா பரிசோதனை பிரிவுகள் ஆரம்பிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

மலேரியா காய்ச்சல் நுளம்பு மூலம் வேறொருவருக்கு வேகமாகப் பரவக் கூடிய அபாயம் உள்ளதால் மலேரியாக் காய்ச்சல் இருப்பதாக சந்தேகப்பட்டால் அருகில் உள்ள ஆதார வைத்திய சாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மலேரியா தடுப்புக் பிரிவில் வெளி நோயாளர் பிரிவு துண்டுடன் நேரடியாகச் சென்று இரத்த மாதிரியை வழங்கிச் செல்லுமாறும் கூறப்பட்டுள்ளது.

மலேரியா இருப்பது பரிசோதனையில் கண்டு பிடிக்கப்படின் அவரது தொலை பேசி இலக்கத்துக்கு தகவல் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முற்றாக ஒழிக்கப்பட்ட மலேரியாக் காய்ச்சலை மீண்டும் பரவ விடாமல் தடுக்க பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியமென சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-9)

## மரக்கறி வகைகளின் விலைகளில் சரிவு நிலை

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாணத்து மரக்கறி வகைகள் பெருமளவு சந்தைக்கு வந்துள்ளதை அடுத்து கடந்த பல வாரங்களாக உச்ச நிலைமை எட்டியிருந்த மரக்கறி வகைகளின் விலை மட்டங்கள் கீழிறங்கியுள்ளன.

பீட்றூட், கரட், உருளைக் கிழங்கு, கத்தரி, சின்னவெங்காயம், வெண்டிக்காய், பாகற்காய், ராணி அவரை, கோவா மற்றும் பச்சை மிளகாய் என்பவற்றின் விலைகளில் சடுதியான வீழ்ச்சி நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோ 180 ரூபா தொடக்கம் 200 ரூபா வரையில் உச்சம் பெற்றிருந்த கத்தரிக்காய் தற்போது கிலோ 15 ரூபா தொடக்கம் 20 ரூபா வரையில் கீழிறங்கியுள்ளது.

எதிர்வரும் தினங்களில் பெரும் தொகையில் தமது உற்பத்திகள் சந்தைக்கு எடுத்துவரப்படவுள்ளதால் மேலும் விலைகளில் சரிவு ஏற்படும் என்று விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-17)

## ஒரு நாளில் 23 ஆயிரத்து 782 லீற்றர் பால் வடமாகாணத்தில் கடந்த வருடம் உற்பத்தி

யாழ்ப்பாணம்.பெப்.21

வடமாகாணத்தில் கடந்த வருடம் ஒரு நாளில் 23 ஆயிரத்து 782 லீற்றர் பால் உற்பத்தி கிடைக்கப்பெற்றது.

வடமாகாண விவசாய, கால் நடை அபிவிருத்தி, காணி, நீர்ப் பாசனம் மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம். ஹால்டீன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு நாளில் நல்லின பசுக்களால் 23 ஆயிரத்து 782 லீற்றர் பால் கிடைக்கப் பெற்றது. அதேவேளை மன்னார் மாவட்டத்தில் எருமைகளால் 483 லீற்றர் பால் கிடைக்கப் பெற்றது.

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 8 ஆயிரத்து 300 லீற்றர் பால் ஒரு நாளில் கிடைத்தது. வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 281 லீற்றரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 400 லீற்றரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 273 லீற்றரும், மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 45 லீற்றரும் பால் உற்பத்தி கிடைத்தது.

மன்னார் மாவட்டத்தில் நல்லின கறவை எருமைகள் உள்ளதால் அவற்றின் மூலம் ஒரு நாளைக்கு 483 லீற்றர் பால் கிடைக்கப் பெற்றது.

கடந்த 2011 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 8 ஆயிரத்து 275 லீற்றர் பால் உற்பத்தியும், வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 545 லீற்றர் பால் உற்பத்தியும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 500 லீற்றர் பால் உற்பத்தியும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 140 லீற்றர் பால் உற்பத்தியும் கிடைக்கப் பெற்றது.


கடந்த 2010 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 7 ஆயிரத்து 536 லீற்றர் பால் உற்பத்தியும், வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 374 லீற்றரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 800 லீற்றர் பால் உற்பத்தியும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 650 லீற்றர் பால் உற்பத்தியும் கிடைத்தது.

வடமாகாணத்தில் பால் உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவை அடைவதற்காக நல்லின பசுக்களை உருவாக்கி அதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரித்துக் கொள்கிறோம்.

மல்லாவியில் இயங்கிவரும் கால்நடை அபிவிருத்திப் பண்ணையில் நல்லினப் பசுக்களைச் செயற்கை சினைப்படுத்தல் மூலம் உருவாக்கிக் கொண்டுள்ளோம். இந்தப் பசு ஒன்றிலிருந்து ஒரு நாளைக்கு 20 லீற்றர் பால் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வன்னிப் பிரதேசத்தில் நல்லினப் பசுக்கள் பல அழிந்து விட்டன. அந்த நிலையை ஈடுசெய்யவும் உற்பத்திப் பொருளாதாரத்தை அதிகரிப்பதற்காகவும் நல்லினப் பசுக்களை உருவாக்கி வருகிறோம்.

கடந்த வருடங்களை விட இந்த வருடம் வடமாகாணம் பால் உற்பத்தியில் உச்ச நிலையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.- என்று தெரிவித்தார்.(ம-13)

கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகில் புதிய சந்தைக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளதால் அம்பாள்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கடைகளை வர்த்தகர்கள் அகற்றி வருகின்றனர். (க-126)

# கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர்

### நேற்று முன்தினம் கடமை ஏற்பு

கிளிநொச்சி, பெப்.21

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் நான்காவது பிரதிப் பொலிஸ் மா அதிபராக கபில ஜெயசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் இரணைமடுவில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் தமது கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார்.

போர் ஓய்ந்து மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் முதலாவது பிரதிப் பொலிஸ்மா அதிபராக டி.பி.சமரக்கோன் நியமிக்கப்பட்டார். இரண்டாவது பிரதிப் பொலிஸ் மா அதிபராக 2010 ஆம் ஆண்டு எல்.எல்.சி. பெரேராவும், 2011 ஆம் ஆண்டு என்.டி.நீல் தளுவத்த மூன்றாவது பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது நான்காவது பிரதிப் பொலிஸ் மா அதிபராக எச்.டி.கே.எஸ்.கபில ஜெயசேகர பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளார். (க-6)

# குழுக்களின் மோதலை அடுத்து நொறுக்கப்பட்டன வீதி விளக்குகள்

### வவுனியாவில் இளைஞர்கள் அடாவடி

நெளுக்குளம்,பெப்.21

வவுனியாவில் மோதலில் ஈடுபட்ட இளைஞர் குழுக்களின் நடவடிக்கையால் கிராம மக்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர்.

வவுனியா காத்தான்குளம், ஈசன்குளப் பகுதியில் உள்ள இளைஞர் குழுக்களுக்கிடையில் நேற்று முன்தினம் மோதல் ஏற்பட்டது. இதன் போது வவுனியா தெற்குப் பிரதேச சபையினரால் பொருத்தப்பட்டிருந்த அநேகமான வீதி விளக்குகள் அடித்து நொறுக்கப்பட்டன. இதன் காரணமாக அந்தப் பகுதிகளிலுள்ள வீதிகள் இருளில் மூழ்கின.

இந்த இளைஞர் குழுக்கள் மது போதையின் உச்சக் கட்டத்தில் மோதலில் ஈடுபட்டதாகத் தெரிய வருகின்றது. இதன் போது இந்தக் குழுவினர் மாறி மாறி காத்தான்குளம், ஈசன்குளம் பகுதியிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் உள்ள வீதி விளக்குகளை அடித்து நொறுக்கி அடாவடியில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து அங்குள்ள வீடுகளில் புகுந்த இவர்கள் கூரைத் தகடுகளையும் அடித்து நொறுக்கினர். மேலும் கற்களால் எறிந்தும் வீடுகளுக்குச் சேதங்களை ஏற்படுத்தியுள்ளனர். இதனால் சிறார்கள், பெண்கள் அச்சமடைந்து கூக்குரல் எழுப்பினர். நீண்ட நேரமாக இடம்பெற்ற இந்தக் குழு மோதல் வவுனியா மரக்காரம்பளைப் பகுதி வரை நீடித்தது. இதனால் இந்தக் கிராம மக்கள் உட்பட அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் அச்சத்துடன் பொழுதைக் கழித்தனர்.

இந்த மோதல் தொடர்பாக கிராம அபிவிருத்தி சங்கத்தினரும் வவுனியா தெற்குப் பிரதேச சபையினரும் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். ஆனால் நேற்றுக் காலை வரை இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (க-402)

# கொக்கிளாய் ஆற்றில் சிலர் சட்டவிரோதமான மீன்பிடி

### அதிகாரிகளின் அசமந்தம் குறித்து பிரதேசத்தவர்கள் விசனம்

முல்லைத்தீவு,பெப்.21

முல்லைத்தீவு கொக்கிளாய் ஆற்றில் தடை செய்யப்பட்ட மீன்பிடித் தொழில் நடவடிக்கைகள் தொடர்வதாக இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தென்னமரவாடி, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், புளியமுனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2ஆயிரம் பேர் தமது வாழ்வாதாரத் தொழிலாக கடற்றொழிலையே நம்பியுள்ளனர். இவர்கள் கொக்கிளாய் ஆற்றுப்பகுதியில் தடை செய்யப்பட்ட மீன்பிடித் தொழில் நடவடிக்கை எதிலும் ஈடுபடுவதில்லை. மேலும் இந்த ஆற்றுப் பகுதியில் கூட்டு வலை, தங்கூசி வலை,

**இங்கு அத்துமீறி நுழையும் வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தடை செய்யப்பட்ட தொழில்களை இங்கு மேற்கொண்டு வருவதாக இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.**

வெளியிணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட வள்ளங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி தொழில் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இங்கு அத்துமீறி நுழையும் வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தடை செய்யப்பட்ட விதங்களிலான தொழில்களை இங்கு மேற்கொண்டு வருவதாக இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் இத்தகைய தொழில்கள் தொடருமாயின் இறால் மற்றும் ஏனைய மீன் உயிரினங்கள் முற்றாகவே அழிவடைந்து விடுமெனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக 2011 ஆம் ஆண்டில் இருந்து உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள போதிலும் இத்தகைய தொழில் செயற்பாடுகளை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனவும் இந்தப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (க-6)

# பாவனைக்கு உதவாத வீதி

வவுனியா,பெப்.21

வவுனியா சேமமடு வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளமையால் இதனை உபயோகிக்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்த வீதி நீண்டகாலமாகவே புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் சுமார் 110 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மழை காலத்தில் இந்த வீதியூடாக முற்றாகவே செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியில் விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன. மிகவும் நீளமான இந்த வீதியை உடனடியாகப் புனரமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

## பூவரசங்குளம் முன்பள்ளியில் சிறப்பு பொங்கல் நிகழ்வு

பாண்டியன்குளம்,பெப்.21

பூவரசங்குளம் அன்ரனி முன்பள்ளியில் சிறப்பு பொங்கல் நிகழ்வு ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சிறார்களின் மன நிலையில் பாதிப்புக்கள் ஏற்படக் கூடாது என்பதற்காகவும் அவர்களின் மனங்களில் மகிழ்வான சிந்தனைகள் உருவாக வேண்டும் என்பதற்காகவும் இந்தப் பொங்கல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வுக்கு முன்பள்ளியின் ஆசிரியையான செல்வி அமிர்தலிங்கம் அஜிதா தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராக பாண்டியன்குளத்திலுள்ள முன்பள்ளிகளின் பொறுப்பாளரான திருமதி ம.பாமினி கலந்து கொண்டார். சுமார் 25 சிறார்கள் தமது பெற்றோர்களுடன் இந்தப் பொங்கலில் கலந்து கொண்டனர். (க-415)

## ஆசிரிய ஆலோசகர்களுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி,பெப்.21

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் வடக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் அவை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மேலும் ஆசிரிய ஆலோசகர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அமைப்பாக இயங்குவது தொடர்பாகவும் இங்கு ஆராயப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க-405)

# போலி நகை சிக்கியது தங்க நகை தப்பியது

### கனகராயன்குளத்திலுள்ள வீடொன்றில் பட்டப்பகல் வேளையில் திருட்டுச் சம்பவம்

நெளுக்குளம்,பெப்.21

கனகராயன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் பட்டப் பகல் வேளையில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நண்பகல் வேளையில் ஏ 9 வீதியில் அமைந்துள்ள கனகராயன்குளம் மகாவித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள வீடு ஒன்றிலேயே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இதன்போது வீட்டில் வைக்கப்பட்டிருந்த 48 ஆயிரம் ரூபா பணமும், போலிநகைகள் சிலவும் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கணவன், மனைவி இருவரும் ஆசிரியர்களாகப் பணி புரிந்து வருகின்றனர். இவர்களும், இவர்களது பிள்ளைகளும் பாடசாலைக்குச் சென்றதை அறிந்த திருடர்கள் வீடு புகுந்து கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

குறித்த வீட்டின் பின்புறமாக உள்ள வயல்வெளியூடாக வந்த திருடர்கள் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த முதிரைப் பலகைகளாலான கதவைக் கோடரி கொண்டு கொத்தி உடைத்துள்ளனர். பின்னர் வீட்டினுள் நுழைந்து அங்கிருந்த அலுமாரியையும் உடைத்துச் சேதப்படுத்திய பின்னர் அதனுள் வைக்கப்பட்டிருந்த பணத்தையும், போலி நகைகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

திருடர்களால் சேதப்படுத்தப்பட்ட அலுமாரியினுள் தங்க நகைகள் இருந்த போதிலும் அவை திருடர்களின் கண்களுக்குத் தென்படவில்லை. இதனால் அவை தப்பிவிட்டன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-122)

### இந்திய வீட்டுத்திட்டத்தில்

# 530 குடும்பங்கள் மட்டுமே எருக்கலம்பிட்டியில் தகுதி

மன்னார்,பெப்.21

மன்னார் எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் 530 குடும்பங்கள் மட்டுமே இந்திய அரசின் வீடுகளைப் பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகளைப் பெற்றுள்ளன.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல்.

எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பயனாளிகள் தெரிவின் போது இங்கு வசிக்கும் 2 ஆயிரத்து 700 குடும்பங்களில் 530 குடும்பங்கள் மட்டுமே 10 புள்ளிகளுக்கும் மேலாகப் பெற்றுள்ளன. 10 புள்ளிகளுக்கும் மேலாகப் பெற்றுள்ளவர்களே இந்திய வீட்டுத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட முடியும் என்பது இத்திட்டத்தின் ஒரு விதியாகும்.

**இந்திய தூதுவராலயத்தினால் வழங்கப்பட்ட பிரமாணங்களுக்கு அமைவாகவே பயனாளிகள் தெரிவு இடம்பெற்று வருகின்றது.**

தற்போது முதல் கட்ட இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்திய தூதுவராலயத்தினால் வழங்கப்பட்ட பிரமாணங்களுக்கு அமைவாகவே பயனாளிகள் தெரிவு இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் இந்த வீட்டுத் திட்டம் தொடர்பாக பல்வேறு வதந்திகள் உலவி வருகின்றன.

மன்னார் மாவட்டத்துக்கு மொத்தமாக 7 ஆயிரத்து 500 வீடுகள் இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-12)

# நயினாதீவு, வங்களாவடி ஆகிய இறங்கு துறைகளை புனரமைக்குக

## கோரிக்கை விடுக்கின்றனர் பிரதேச மக்கள்

யாழ்ப்பாணம், பெப்.21

நயினாதீவு, நயினாதீவு தெற்கு வங்களாவடி ஆகிய இறங்கு துறைகளையும் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பயன்பாட்டுக்கு உதவாத முறையில் சேதமடைந்து இருக்கும் இந்த இறங்கு துறைகளை மீளப் புனரமைத்து மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தி உதவுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் இருக்கும் மூன்று துறைமுகங்களில் இரண்டு துறைமுகங்களை மட்டுமே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கு முன்பாக செல்லும் இறங்கு துறையையும் மற்றும் நாகவிகாரைக்கு எதிரே உள்ள இறங்கு துறையை பெரும்பான்மை இன சுற்றுலாப் பயணிகளும் பயன்படுத்தி வருகின்றனர்.

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தெற்குப் புறத்தில் சுமார் இரண்டரைக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வங்களாவடி

### வங்களாவடி இறங்கு துறையை மீளப் புனரமைத்தால் நயினை தெற்கு பிரதேச மக்கள் பயனடைவார்

இறங்கு துறையை மீளப் புனரமைப்பதன் மூலம் நயினை தெற்கு பிரதேச மக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

இதன் மூலம் நயினாதீவுக்கான கடற்போக்குவரத்தையும் இலகுபடுத்த முடியும் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். நாகவிகாரை இறங்குதுறை புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெறுகின்ற போதும் நயினாதீவு துறைமுகம் குற்றுயிராக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

# சூராவத்தை அம்மன் கோயிலடியில் இளைஞரின் அட்டகாசம் இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.21

ஏழாலை தெற்கு சூராவத்தை முத்துமாரி அம்மன் கோயிலடிப் பகுதியில் இளைஞர்கள் எவரும் அட்டகாசத்தில் ஈடுபடவில்லை என ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி உதயனில் 7 ஆம் பக்கத்தில் வெளியான 'சூராவத்தை அம்மன் கோயிலடியில் மாலையில் இளைஞர் அட்டகாசம்'' என்ற செய்தி தொடர்பில் அனுப்பி வைத்துள்ள விளக்கத்திலேயே அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக நிர்வாக சபையினர் கடந்த 15 ஆம் திகதி இரவு கூடி ஆராய்ந்ததாகவும், இது குறித்து பொதுமக்களாலோ அல்லது கிராம அலுவலராலோ எந்தவித முறைப்பாடும் ஆலய நிர்வாகத்துக்கு கிடைக்கவில்லை எனவும் இதனை ஆலயப் பிரதம குருவும் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் நிர்வாக சபையினர் மேலும் கூறியுள்ளனர். (த)

# ஏற்கனவே தண்டிக்கப்பட்டவர் மீண்டும் வந்தார் நீதிமன்றம்

## அவருக்கு அபராதம் 25 ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம்,பெப்.21

ஏற்கனவே நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர் மீண்டும் குற்றம் புரிந்தமையால் அவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

காரைநகர் கள்ளத்தாழ்வு எனும் இடத்தைச் சேர்ந்த நாகலிங்கம் மோகனறாஜ் என்பவரே இவ்வாறு குற்றம் புரிந்தவராவார்.

சட்டவிரோதமாக மதுவிற்பனை செய்த குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டார். பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். ஆனால் வழக்குக்காக நீதிமன்றுக்குச் செல்லாது இருந்து வந்ததினால் நீதிமன்று பிடியாணை பிறப்பித்தது.

இதன்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவர் ஏற்கனவே சில குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டு நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டிருந்தவர். நேற்று அவர் நீதிமன்றில் தன்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

அவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இது தவிர 6 மாத சிறைத்தண்டனை 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப் பட்டது. 5 வருடங்களுக்குள் அவர் மீண்டும் குற்றம் புரிவாராகில் சிறைத்தண்டனைக்கு உள்ளாகுவார். அவரது கைவிரல் அடையாளமும் நேற்று பதிவுசெய்யப்பட்டது.

(த-4)

# கைதடி—நாவற்குழிக்கு இடையே பஸ் தரிப்பிடம் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.21

கைதடிப் பகுதியில் பஸ் தரிப்பிடம் ஒன்றை அமைத்து தருமாறு விழிப்புலனற்றோர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாவற்குழிச் சந்திக்கும் கைதடிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் பஸ்தரிப்பிடத்தை அமைத்துத் தருமாறு பல்வேறு தடவைகள் தென்மராட்சி பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்திருக்கிறோம்.

கைதடி முதியோர் இல்லம், நவீல்ட் பாடசாலை, விழிப்புலனற்றோர் சங்கம் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் என்பன ஏ-9 பிரதான வீதியில் அமைந்துள்ளன.

இந்த நிலையில் குறித்த இடத்தில் பிரதான வீதியில் பஸ்தரிப்பிடம் ஒன்று இல்லாததால் பார்வையற்றோர் மற்றும் வயோதிபர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மழை காலத்தில் மழையில் நனைந்தும் கோடை காலத்தில் வெயிலில் காய்ந்தும் பஸ்ஸுக்குக் காத்து நிற்கவேண்டியுள்ளது.

இந்த விடயத்தில் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. விரைந்து இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.- என்றார். (ம-17)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,பெப்.21

எதுவித ஆவணமும் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 15 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வாகன வரிப்பத்திரம் எதுவுமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்ற குற்றச்சாட்டில் நாரந்தனை மத்தியைச் சேர்ந்த றொபேட் எட்மன் டெனிசன் என்பவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

விசாரணையின் போது அவர் தன்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டது.

(த-4)

# நெடுந்தீவுப் பகுதியில் நிரந்தர இராணுவ முகாம்

யாழ்ப்பாணம்,பெப்.21

நெடுந்தீவுப் பகுதியில் நிரந்தர இராணுவ முகாம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே நெடுந்தீவு துறைமுகப் பகுதியை கடற்படையினர் தம்வசப்படுத்திக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் துறைமுகப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கும் பணியும் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மக்களின் பதற்றத்தைத் தணிக்க உரியவர்களது நடவடிக்கை அவசியம் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-7)

# கொள்வனவுக்கு ஏற்ப விற்பனவு இல்லை ஊற்றப்பட்டது ஆயிரம் போத்தல் கள்

கொடிகாமம்,பெப்.21

கொள்வனவுக்கு ஏற்ப விற்பனவு இடம்பெறாமையால் ஒரே நாளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட போத்தல் கள் நிலத்தில் ஊற்றப்பட்டுள்ளது.

இது குறித்து உற்பத்தியாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பனங் கள் உற்பத்தி அதிகரிப்பை அடுத்து உற்பத்தியாளர்களால் பெருமளவில் கள் தவறணைக்கு விநியோகிக்கப்படுகிறது.

அளவுக்கு அதிகமாக கொள்வனவு செய்யப்பட்டதால் தலைமை அலுவலகத்தால் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளாத நிலையில் கள் நிலத்தில் ஊற்றப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர்களிடையே அதிருப்தி ஏற்பட்ட நிலையில் தலைமைச் சங்கத்தில் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊற்றப்பட்ட கள்ளுக்கு உரிய கட்டணம் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படாது என்பதால் உற்பத்தியாளர்கள் தமது வயிற்றில் அடிக்கும் செயல் என்றும் குற்றம் சுமத்துகின்றனர்.

சங்க அங்கத்தவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பனைகளில் கள் உற்பத்திக்கு அனுமதிக்கப்பட்டது. எனினும் தினமும் பெருமளவு போத்தல் கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த நிலையில் தம்மால் தவறணைக்கு வழங்கப்படும் கள் நிலத்தில் ஊற்றப்பட்டமை குறித்தும் கட்டணம் வழங்கப்படாதது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கிழக்கு பன தென்னை வள அபிவிருத்திச் சங்க எல்லைப் பரப்பில் பனங் கள் உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக போத்தலில் கள் அடைக்கும் நிலையத்தையும், வெல்ல உற்பத்தி நிலையத்தையும் ஆரம்பிக்குமாறு கடந்த வருடம் இயக்குநர் சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் அவற்றை இன்னமும் நடைமுறைப்படுத்த சங்க நிர்வாகம் முன்வராமை குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது.

மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் வரை தமது உற்பத்திப் பொருள்கள் நிலத்தில் ஊற்றப்படும் அபாய நிலை காணப்படுவதால் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி உதவ முன்வர வேண்டும் என்று சங்க அங்கத்தவர்கள் கேட்டுள்ளனர். (ம-9)

# அபாயமான முறையில் பொருள் ஏற்றிச் சென்றவருக்கு அபராதம்

வடமராட்சி,பெப்.21

லொறி ஒன்றில் அபாயகரமான முறையில் பொருள்களை ஏற்றிச் சென்ற சாரதிக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறைப் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வல்வெட்டித்துறை பொலிஸார் வாகனங்களை வழி மறித்துச் சோதனை இட்டபோது லொறியில் அளவுக்கு அதிகமான பொருள்களை ஏற்றி ஆபத்து விளைவிக்கக் கூடிய வகையில் கொண்டு செல்லப்பட்டது.

லொறிச் சாரதி மீது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது சாரதி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதை அடுத்து 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-8)

# வேலணை, அல்லைப்பிட்டியில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.21

வேலணை மற்றும் அல்லைப்பிட்டிப் பிரதேசங்களில் நுளம்பை கட்டுப்படுத்துவதற்குப் புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் இந்த புகையூட்டும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அதிகரித்த நுளம்புப் பெருக்கம் மற்றும் டெங்குத் தாக்கம் இருக்கும் பகுதிகளுக்கு இந்த புகையூட்டும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் அண்மையில் நுளம்பின் பெருக்கம் மிகவும் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதைக் கட்டுப்படுத்துவதற்கு பொது இடங்களில் காணப்பட்ட கழிவுப் பொருள்கள், பற்றைகள் அகற்றப்பட்டன. அத்துடன் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் சுற்றுச் சூழல் என்பனவும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

வேலணை, அல்லைப்பிட்டிப் பிரதேசங்களில் சிரமதானப் பணிகள் மும்முரமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# கோயிலில் திருட்டு

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்.கந்தர்மடம் பகுதியில் ரயில் பாதையை அண்மித்துள்ள கோயில் கதவு உடைக்கப்பட்டு பணம் மற்றும் உடைமைகள் திருடப்பட்டுள்ளன.

20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கோயிலின் உள்ளே விக்கிரகத்தில் இருந்த வெள்ளி ஆபரணங்களே திருடப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் காலை கோயிலுக்குச் சென்ற போதே கதவு உடைத்து திருட்டு நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# மண்டைதீவில் மருத்துவ முகாம் விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.21

மண்டைதீவு பிரதேசத்தில் விரைவில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்துவதற்கு வேலணை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த பிரதேசத்தில் மக்களின் வசதி கருதி இந்த இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது. பல்வேறு நோய்கள் தொடர்பான சிகிச்சையை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் வைத்தியசாலை ஒன்று இல்லாததால் நோய்க்கு ஆளாகும் பிரதேச மக்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கே நீண்ட தூரம் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு நடமாடும் மருத்துவ முகாமை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நெடுந்தீவு கிராமப் புறங்களில் இரண்டு நாள் இலவச சிகிச்சை முகாம் ஒன்றை வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நடத்தியிருந்தது.

இந்த சிகிச்சை முகாம் மூலம் கிராம மக்கள் பயன் அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## தூக்குத் தண்டனைக்கு கருணாநிதி எதிர்ப்பு

தூக்குத்தண்டனை விதிக்கும் முறையை சட்டப் புத்தகங்களில் இருந்து நீக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

தூக்குத் தண்டனையானது மனித உரிமைகளுக்கும் மனிதநேயத்துக்கும் எதிரானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மத்திய அரசுக்கும், சட்ட நிபுணர்களுக்கும் கடிதம் எழுதி உள்ளதாகவும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தனது கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி பலரின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் எனவும் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)



மது விலக்குக்கோரி காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைப்பயணம் மேற்கொண்டிருந்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவை, முதல்வர் ஜெயலலிதா திடீரென சந்தித்துப் பேசினார்.

## காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிட்டது அரசு

உச்சநீதிமன்றத்தின் கடும் எச்சரிக்கை மற்றும் மிரட்டலைத் தொடர்ந்து காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசு அரசிதழில் (வர்த்தமானி) வெளியிட்டுள்ளது.

இதன்மூலம் எந்தக் காரணத்தைக் கூறியும் இனிமேல் தமிழகத்துக்குத் தண்ணீர் தரமாட்டோம் என்று கர்நாடக அரசு கூற முடியாது. எப்பாடுபட்டாவது தமிழகத்துக்குரிய தண்ணீரை கர்நாடகம் தந்தே தீர வேண்டும் என்ற சட்டப் பாதுகாப்பு தமிழகத்துக்குக் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நடுவர் மன்னத்தின் இறுதித் தீர்ப்பை நேற்று அரசி தழில் வெளியிட வேண்டும் என்பது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவாகும். இந்த நிலையில் நேற்று முன்தினம் முற்பகல் முழுவதும் இதுதொடர்பான உத்தரவை மத்திய அரசு பிறப்பிக்காமல் இருந்து வந்தது.

இந்தச் சூழ்நிலையில் நேற்று முன்தினம் இரவு நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட மத்திய அரசு உத்தரவிட்டது. அதைத்தொடர்ந்து அரசிதழில் தீர்ப்பு வெளியானது. இனி இறுதித் தீர்ப்பில் என்ன சொல்லப்பட்டுள்ளதோ அதன் அடிப்படையிலேயே கர்நாடகம், தமிழகம், கேரளம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்கள் காவிரி நதி நீரைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### எந்தக் கோயிலுக்குச் சென்றாலும்

## மஹிந்தவின் பாவங்களுக்கு ஒருபோதும் மன்னிப்பே இல்லை



சென்னை, பெப்.21

எத்தனை கோயில் கோயிலாகச் சென்று கும்பிட்டாலும், எந்தக் கடவுளும் இலங்கைஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாவத்தை மன்னிக்கப் போவதில்லை என்று வைரமுத்து தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனின் மரணம் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் புகைப் படங்களை வெளியிட் டுள்ளது. இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் ததாவது:-

ஒரு பிள்ளையை கொல்லவா பீரங்கி? ஓர் அரும்பை உடைக்கவா அணுகுண்டு? போர் குற்றங்களை மறைக்கும் இலங்கை இன்று ஒரு சர்வதேச சாட்சியத்தின் முன்னால் தலை குனிந்து நிற்கிறது. இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ கோயில் கோயிலாகச் சென்று கும்பிட்டாலும் எந்த கடவுளும் இந்த பாவத்தை மன்னிக்கப் போவ தில்லை. ஐ.நா. சபை இது குறித்து ஆழ்ந்த கவலை கொள்ளட்டும்; தீர்வு சொல்லட்டும்-என்றார். (வ)

## இலங்கை அரசுடனான உறவை இந்தியா இனியும் தொடருமா?

### கேள்வி எழுப்புகிறார் திருமா எம்.பி.



சென்னை, பெப்.21

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்தியா ஏன் இன்னும் உறவைத் தொடர்கிறது என்று விடு தலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து சிதம்பரத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது அவர் கூறியதாவது:-

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனது இளைய மகன் பாலச்சந்திரன் சிங்கள இராணுவத்தினரின் பிடியில் இருந்து, பின்பு சுடப்பட்டு இறந்துள்ளார். அந்தப் புகைப் படங்கள் ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன. போர்த் தர்மத்தை மீறி சிறுவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் படுகொலையில் சின்னஞ்சிறு பிஞ்சுகளைக் கூட விட்டு வைக்காமல் நசுக்கி உள்ளதையும், போர்க் குற்றத்தையும் தாண்டி இன அழிப்பு நடைபெற்றுள்ளதையும் இச்சம்பவம் உறுதி செய்துள்ளது.

தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்தும்கூட ராஜதந்திர உறவு என்ற பெயரில் இந்திய அரசு தொடர்ந்து இலங்கை இனப்படுகொலையாளிகளுக்கு ஆதரவளித்து வருவது தமிழ் மக்களைக் கேவலப்படுத்தும் செயலாகும்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கூட்டத்தில் இலங்கை இனப் படுகொலை குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வரவேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கேட்டுக்கொள்கிறது.

பாலச்சந்திரன் படுகொலையைப்போல இன்னும் எத்தனை ஆதாரங்கள் வெளிவரப்போகின்றனவோ தெரியவில்லை. இவ்வளவுக்குப் பின்பும்இந்தியா வாய்மூடி மௌனம் காப்பது முறையல்ல. இன்னும் சில தினங்களில் நடைபெறவிருக்கும் ஐ.நா.மனித உரிமைக் குழு கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக இந்தியாவே தீர்மானம் ஒன்றை முன்மொழிய வேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா வர தடை விதிக்க வேண் டும் என்று வலியுறுத்துவேன். இது குறித்து பிரதமரைச் சந்தித்து மனு அளிப்பேன்-என்றார். (வ)

### பயிற்சியிலீடுபட்டிருந்த சுகோய் போர் விமானம் தரையில் விழுந்து நொறுங்கியது

**ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள போக்ரான் பாலைவனப் பகுதி யில் இந்தச் சம்பவம் நடைபெற்றது**

போக்ரான், பெப்.21

பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்திய விமானப் படையின் சுகோய் 30 எம்.கே.ஐ. ரக போர் விமானம் தரையில் விழுந்து நொறுங்கியது. விமானிகள் இருவரும் பரசூட் மூலம் குதித்து உயிர் தப்பினர்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மீர் மாவட்டத்தில் உள்ள போக்ரான் பாலைவனப் பகுதியில் இந்த சம்பவம் நடைபெற்றது. நாளை "Iron Fist' என்ற பெயரில் இரவு-பகல் போர் பயிற்சியில் விமானப் படை விமானங்கள் ஈடுபட இருந்தன. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்த குறித்த விமானம் திடீரென தரையில் பாய்ந்து வெடித்துச் சிதறியது. விமானம் கட்டுப்பாட்டை இழந்த வினாடியே இரு விமானிகளும் பரசூட் மூலம் வெளியே குதித்து விட்டதால் தப்பி விட்டனர். இந்திய விமானப் படையில் உள்ள மிக நவீன ரக விமானம் சுகோய் தான். (வ)

## புதிய செயலகக் கட்டத்தில் மருத்துவமனைக்கு அனுமதி

### பசுமை தீர்ப்பாயம் தீர்ப்பு



சென்னை, பெப்.21

சென்னையில் புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தை பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையாக மாற்றுவதற்கு தடையில்லை என்று தேசிய பசுமைத் தீர்ப்பாயம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

சென்னை ஓமந்தூர் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தை பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையாக்க தமிழக அரசு முடிவு செய்தது.

தமிழக அரசு எடுத்த குறித்த முடிவுக்கு மாநில சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு ஆணையம் ஒப்புதல் அளித்திருந்தது.

மாநில சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு ஆணையம் அளித்த அந்த ஒப்புதலை எதிர்த்து சட்டத்தரணி ஆர். வீரமணி தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எம். சொக்கலிங்கம், ஆர். ராஜேந்திரன் ஆகியோர் நேற்றுத் தீர்ப்பளித்தனர்.

தமிழக அரசின் முடிவுப்படி புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தை பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையாக மாற்ற எந்தத் தடையும் இல்லை என்று தீர்ப்பில் கூறியுள்ளனர்.

## வீரப்பன் கூட்டாளிகளின் தூக்குக்கு விதித்த இடைக்காலத்தடை நீடிப்பு

### 6 வாரங்களின் பின் மீண்டும் விசாரணை

டில்லி, பெப்.21

சந்தனக்கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகளுக்கு தூக்குத்தண்டனைநிறைவேற்றுவதற்கு உச்ச நீதிமன்றம் ஏற்கனவே விதித்துள்ள இடைக்காலத் தடையை அது மேலும் நீடித்துள்ளது.

வீரப்பன் கூட்டாளிகளுக்கான தூக்குத் தண்டனை தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நேற்று புதன் கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அல்டமாஸ் கபீர் தலைமையிலான அமர்வில் குறித்த வழக்கு விசாரிக்கப்பட்டது.

விசாரணையின்போது மற்றொரு தூக்குத் தண்டனைக் கைதியான புல்லர் தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டது. புல்லர் வழக்கில் தீர்ப்பு வெளியான பின்னரே வீரப்பனது கூட்டாளிகளின் மனு மீதான விசாரணை எடுத்துக்கொள்ளப்படும் என உச்சநீதிமன்றம் தெரிவித்தது. அதனையடுத்து 6 வாரங்களின் பின்பே வீரப்பன் கூட்டாளிகளின் மனு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிகிறது. உச்சநீதிமன்ற உத்தர வால் வீரப்பனது கூட்டாளிகளின் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. (வ)

## மத்திய அரசு இனியாவது தர்மத்தின் பக்கம் நின்று செயற்பட வேண்டும்

### தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்



சென்னை, பெப்.21

இந்திய அரசு இனியாவது இலங்கை அரசின் பக்கம் இல்லாமல் தர்மத்தின் பக்கம் நிற்க வேண்டும் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை அரசின் மீதான போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு அந்த அரசு தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகின்றது. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனின் மரணம் தொடர்பில் சனல் 4 தொலைக் காட்சி நிறுவனம் புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

இலங்கை மண்ணில் பிறந்த சிறுவனை அந்த நாட்டு அரசே கொடூரமாக படுகொலை செய்ததை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்திய அரசு எப்போதும் போல் இலங்கை அரசின் பக்கம் இல்லாமல் தர்மத்தின் பக்கம் இனி யாவது நிற்க வேண்டும்- என்றுள்ளது. (வ)

# தென்கொரியாவுக்கு இறுதி எச்சரிக்கை!

## கடுந்தொனியில் விடுத்தது வடகொரியா

பியாங்யாங், பெப்.21

தென்கொரியா பயமறியாது சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை வெளியிட்டு வருகிறது. அதன் எதிர் விளைவுகள் அபாயகரமானவையாக இருக்கும். இதை இறுதியான எச் சரிக்கையாகவும் தென்கொரியா எடுத்துக் கொள்ளலாம்- என்று கடுந்தொனியில் தெரிவித்துள்ளது வட கொரியா.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் வடகொரிய அணுத் திட்டம் குறித்து தென்கொரியா வெளியிட்ட கருத்தை அடுத்தே இவ்வாறு தெரிவித்துள்ளது வடகொரியா.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தென்கொரியா பயமறியாது சிறுபிள்ளைத் தனமாக கருத்துக்களை வெளியிட்டு வருகிறது. அதன் எதிர்வினை அபாயகரமானதாக அமையும். இதை இறுதியான எச்சரிக்கையாகவும் தென்கொரியா எடுத்துக் கொள்ளலாம். அதே வேளை எம்மீது அமெரிக்கா கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முயற்சித்தால் பதிலடி கொடுக்கத் தயார் நிலையிலேயே உள்ளோம்- என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வடகொரியாவுடனான பேச்சுக்கள் பிழையான திசை நோக்கி நகர்கின்றன என்று பிரிட்டன் கவலை வெளியிட்டுள்ளது.

அத்துடன் வட கொரியாவுக்கு எதிரான பொருளாதார வர்த்தகத் தடைகளைக் கடுமையாக்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது. ஐரோப்பிய நாடுகளின் நிதி அமைச்சர்கள் மத்தியில் இது தொடர்பில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. பிரசல்ஸில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## பிரஸல்ஸ் விமான நிலையத்தில் அதிரடிக் கொள்ளை!

# ரூ.2,500 கோடி வைரத்துடன் தப்பினர் ஆயுததாரிகள்



பிரஸல்ஸ், பெப்.21

பெல்ஜியம், பிரஸல்ஸ் விமான நிலையத்தில் 2 ஆயிரத்து 500 கோடி ரூபா மதிப்புள்ள விலையுயர்ந்த வைரம் கொள்ளையடிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த வர்த்தக விமானம் ஒன்றில் பொருள்களை ஏற்றும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அப்போது விமான நிலையத்தின் ஒரு பகுதியில் உள்ள வேலியை உடைத்துக்கொண்டு சீறிப்பாய்ந்தவாறு சிறு டிரக் ஒன்று விமானத்தை நெருங்கியது.

அதில் இருந்து ஆயுதங்களுடன் இறங்கிய கொள்ளையர்கள் ஒருசில நிமிட நேரத்தில் இந்தக் கொள்ளையை நிகழ்த்தி விட்டு தப்பிச் சென்றனர்.

மிகத் தெளிவாகத் திட்டமிடப்பட்டு சில நிமிடங்களில் நிகழ்த்தப்பட்ட கொள்ளையில் துப்பாக்கிச் சூடு, தாக்குதல் போன்றவை எதுவும் இடம் பெறவில்லை. பாதுகாப்பு அதிகாரிகள் என்ன நடைபெறு கின்றது என்பதை அறிய முன்னரே கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

ஆயுததாரிகளால் கொள்ளையடிக்கப்பட்ட வைரத்தின் மதிப்பு ரூபா 2 ஆயிரத்து 500 கோடி என்று தெரிவித்துள்ள விமான நிலைய அதிகாரிகள், கொள்ளையடிக்கப்பட்டது ஒரே வைரமா அல்லது அதிக எண்ணிக்கையில் உள்ள வைரங்களா என்பது போன்ற தகவல்கள் தீவிர விசாரணைக்குப் பின்னரே தெரிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர். (ற)

## பதவி விலகினார் டுனீசியப் பிரதமர்

டுனீசியப் பிரதமர் ஹமாடி ஜெபாலி பதவி விலகியுள்ளார்.

புதிய அரசு அமைப்பது தொடர்பான பேச்சு தோல்வியில் முடிந்ததை அடுத்தே அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சொக்ரி பெலாய்ட் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்ததை அடுத்து டுனீசியாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதைத் தீர்த்துக்கொள்ளும் நோக் கில் புதிய கூட்டணி அரசை அமைக்க ஜெபாலி முயற்சிகளை மேற் கொண்டிருந்தார். எனினும் அவை தோல்வியில் முடிந்துள்ளன. அதனை அடுத்து தனது பதவி விலகலை அறிவித்துள்ளார் ஜெபாலி.

கடந்த 6 ஆம் திகதி பெலாய்ட் உயிரிழந்ததை அடுத்து டுனீசியாவில் ஆட்சி மாற்றம் கோரி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)



## சிரியாவில் ஏவுகணைத் தாக்குதல்: 19 பேர் சாவு

அலெப்போ, பெப்.21

சிரியாவின் அலெப்போ நகரில் சிரிய இராணுவத்தினர் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர்.

அலெப்போ சர்வதேச விமான நிலையத்தைக் கைப்பற்ற கடந்த சில வாரங்களாகக் கிளர்ச்சியாளர்கள் கடும் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் நாட்டின் இரண்டாவது பெரிய விமான நிலையமான அலெப்போ விமான நிலையம் கிளர்ச்சியாளர்கள் வசமாவதைத் தடுக்க ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் அலெப்போவை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தரைவழியாக நெருங்கும் இராணுவத்தினருக்கு உதவியாக கிளர்ச்சியாளர்கள் மீது விமானம் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# சைபர் தாக்குதல்களின் பின்னணியில் சீனா?

## சந்தேகம் தெரிவிக்கிறது அமெரிக்க கணினி பாதுகாப்பு நிறுவனம்

நியூயோர்க், பெப்.21

அமெரிக்காவில் பரந்துபட்ட அளவில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் சைபர் தாக்குதல்களின் பின் னணியில் சீன இராணுவத் தின் ஒரு பிரிவு சம்பந்தப்பட்டுள்ளது என்று அமெரிக்கா வைத் தளமாகக் கொண்டியங் கும் கணினிப் பாதுகாப்பு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'மண்டியண்ட்' என்னும் கணினி பாதுகாப்பு நிறுவனம் இது குறித்து மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அமெரிக்காவின் கணினித் துறையில் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்ச்சியான உயர் மட்ட சைபர் தாக்குதல் களின் பின்னணியில் குறித்த சீன இராணுவப் பிரிவு தொடர்புபட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களுக்கான மூல ஆதாரமாக ஷங்கை நகரில் உள்ள ஒரு 'டவர் புளொக்' மையம் இருப்பதை நாம் கண்டுபிடித்துள்ளோம். இந்தத் தாக்குதல்களுக்கு அதிகபட்ச காரணமாக '61398' எனும் சீன இராணுவப் பிரிவு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அந்த இராணுவப் பிரிவு பெரும்பாலும் அமெரிக்காவில் உள்ள பரந்துபட்ட தொழில்துறையில், நூற்றுக்கணக்கான 'டெராபைட்ஸ்' தரவுகளைத் திருடியுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்று மறுத்துள்ளது சீன வெளியுறவுத்துறை அமைச்சு. (ற)

# உணவு விடுதியில் தீ: 14 பேர் காயம்



கன்ஸாஸ் சிட்டி, பெப்.21

அமெரிக்காவின் கன்ஸாஸ் சிட்டி மாகாணத்தில் உள்ள உணவு விடுதியொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 14 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உணவுவிடுதியில்எரிவாயு கசிவு ஏற்பட்டு விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்று மீட்புப் படையினர் தெரிவிக்கின்றனர்.

தீ விபத்தால் கட்டடம் முற்றாகச் சேதமடைந்துள்ளது என்றும், காயமடைந்தவர்களின் அல்லது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்றும் கூறப்படுகின்றது. (ற)

## 'போப்'க்கு ஓய்வூதியம் 1.75 லட்சம்?

வத்திக்கான், பெப்.21

எதிர்வரும் 28 ஆம் திகதியுடன் பதவி விலகவுள்ள போப்பாண்டவர் 16 ஆம் ஆசீர்வாதப்பருக்கு 16 ஆம் பெனடிக்குக்கு ஓய்வூதியமாக ரூபா 1.75 லட்சம் வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பதவி விலகவுள்ள போப்பாண்டவருக்கு ஓய்வூதியம் வழங்க வத்திக்கான் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இந்தநிலையிலேயே இவ்வாறு தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் இந்தத் தொகை பற்றி வத்திக்கான் உறுதிப்படுத்தவில்லை.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வத்திக்கான் செய்தித்தொடர்பாளர் கூறுகையில்:-

பதவி விலகும் போப்பாண்டவர் தனக்கு ஓய்வூதியம் ஏதும் தேவையில்லை என்று கடந்த வார ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் கூறியுள்ளார். ஆனால் அவர் கௌரவமாக வாழ ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்தார். (ற)

## சீனாவில் நிலநடுக்கம்; இருவர் காயம்

பீஜிங், பெப்.21

சீனாவில் தென்மேற்கு பகுதியில் உள்ள யுன்னான் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சில நிமிடங்கள் தொடர்ச்சியாக ஏற்பட்ட நிலநடுக்கம் 4.9 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் சில கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. இடிபாடுகளில் சிக்கி இருவர் காயமடைந்தனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ற)

# மக்களின் உயிரிழப்புகள் ஆப்கனில் குறைகின்றது

## ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை

ஆப்கனில் பொதுமக்களின் உயிரிழப்பு கடந்த ஆறு வருடங்களில் முதற்றடவையாக இம்முறையா குறைந்துள்ளது என்று ஐ.நா. சபை கூறியுள்ளது.

கடந்த வருடத்தில் பொது மக்கள் 2,754 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அதற்கு முந்தைய வருடத்தைவிட இந்த எண்ணிக்கை சுமார் 400 ஆல் குறைந்துள்ளது என்றும் ஐ.நா.சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

126 பேர் அமெரிக்க மற்றும் நேட்டோ படையினரின் வான் தாக்குதலில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இது முந்தைய ஆண்டைவிட அரைவாசி குறைவாகும். பொது மக்களின் உயிரிழப்புகளில் 80 சதவீதத்துக்கும் அதிகமானவை கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதல்களால் ஏற்பட்டவையாகும். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை சிறிது அதிகரித் திருக்கிறது- என்றுள்ளது. (ற)

# இராணுவ விமானம் விபத்து: ஏமனில் 9 பேர் உயிரிழப்பு



சானா, பெப்.21

ஏமனில் இராணுவ பயிற்சி விமானம் ஒன்று கட்டடத்தில் மோதி விபத்துக்குள்ளானது. அதில் 9 பேர் உயிரிழந்தனர்.

ஏமன் தலைநகரான சானாவிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. இராணுவப் பயிற்சி விமானம் குடியிருப்புப் பகுதியில் தாழ்வாகப் பறந்தபோது கட்டடத்தில் மோதியது. மோதிய வேகத்தில் தீப்பிடித்த விமானம் துண்டு துண்டுகளாக நொறுங்கியது. அதில் 9 பேர் உயிரிழந்தனர். விமானம் மோதிய கட்டடமும் இடிந்து நொறுங்கியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## வீடு வாடகைக்கு தேவை

அரச திணைக்களத்தில் கடமையாற்றும் சிறிய குடும்பத்திற்கு யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் (செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதி, விரும்பத்தக்கது) வீடு வாடகைக்குத் தேவை. தொ.பே: 021 222 9363, 075 247 9607

(33581)(5.6.7)

## TV கள் மலிவு விற்பனை

மிக மிக மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"-13000/=, 29"-16000/=, பைனியர் அம்பிளிபயர், Box வகைகள், DVD என்பன

தொ.பே:0770440570 (அப்பளம்) சோனி ரேற் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்) 56, K.K.S வீதி, சுன்னாகம்.

(28995)(2.6)

## கடை வாடகைக்கு

இல.363 A, கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியிலுள்ள 20'X9' கடை, கொங்கிறீட் கூரை, சுருக்கு கேற் உடையது. உடன் வாடகைக்கு விடப்படும்.

தொ.பே: 0778585973

உடற் பருமனா ?
ஆலோசனையும் சிகிச்சையும்.

## லாவா வைத்தியசாலை

இல 75, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :021-2224333


## தென்னம்பிள்ளை விநியோகம்

தென்மராட்சி,பெ.பி.

தென்மராட்சி தெற்கு மறவன் புலோப் பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு சாவகச்சேரி லியோ கழகத்தினர் அண்மையில் 200 தென்னம் பிள்ளைகளை வழங்கினர்.

வவுனியாவைச் சேர்ந்த ஓய்வுநிலை கூட்டுறவுப் பரிசோதகர் அமரர் பொ. கணபதிப்பிள்ளையின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் லியோ கழகத் தலைவர் ஜெ.மினேஸ் தலைமையில் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மறவன்புலோ கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பொது மக்கள், லியோ கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ம-9)


## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சிஎன்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

★ **ஆசிரியர்கள்**

கணித, விஞ்ஞான, கணினிப் பட்டதாரி ஆசிரியர்கள் கலைப்பிரிவில் வரலாறு, தமிழ், ஆங்கிலம் மற்றும் தொகுதிப்பாடங்கள் கற்பிக்கக் கூடிய பட்டதாரிகள் பட்டச் சான்றிதழின் பிரதியுடன் விண்ணப்பிக்கவேண்டும். இவற்றுக்குப் பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவை புரிய விருப்பம் கொண்ட நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். (கிழமைநாள்கள் மட்டுமன்றி சனி, ஞாயிறு ஆகிய நாள்களிலும் பணியாற்றவேண்டும்.)

★ **கணக்காளர்**

ஓய்வுபெற்ற கணக்காளர் அல்லது கணக்குத்துறையில் அனுபவம் வாய்ந்த ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பமுடிவு திகதி: 27.02.2013

தொடர்புகளுக்கு:-

**தி.இராசநாயகம் தலைவர்,**
**மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

தொலைபேசி இலக்கம்: 077-0604950, 021-4923118

(C/4996)(2.6)


ௐ

# ஆச்சார்யாபிஷேக மங்கள வைபவ அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான ஸ்ரீ நந்தன வருடம் பங்குனித் திங்கள் 10ஆம் நாள் (22.02.2013) வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரமும் துவாதசி திதியும் சித்த யோகமும் கூடிய காலை 8.21முதல் 9.27 மணி வரையுள்ள மீன லக்ன சுபமுகூர்த்தத்தில்

பிரம்மஸ்ரீ நாகேந்திரசர்மா - மனோன்மணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்

சிரஞ்சீவி

**பிரம்மஸ்ரீ கிருபாகர சர்மாவிற்கு**

விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசார்யாபிஷேகம் செய்ய நீலியம்மனை விநாயகரின் திருவருளும், அளவெட்டி அழகொல்லை விநாயகரின் திருவருளும் துணை கொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு.

**அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய மண்டபத்தில்** நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அனைவரும் குடும்ப சமேதராக வருகை தந்து ஆசீர்வதித்து குரு ஆசி பெற்று விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பித்து எம்மை மகிழ்விக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**

பிரம்மஸ்ரீ.நா. கிருபாகர சர்மா,
ஸ்ரீமதி நா.சிந்துஜா தம்பதிகள்.

மகாலிங்கக்குருக்கள் மதிவதனி,
நா.மனோன்மணி.

(33651)(3.6.7)


உதயன் விளம்பரங்களுக்கு
advt@uthayan.com
0215671111


# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 19 |
| ★ | ★ |
| 05 | 02 |
| ★ | ★ |
| 1954 | 2005 |

திதி:
பூர்வபக்க ஏகாதசி

அமரர்

## கருணைவேல் தேவநாயகி

வருடம் எட்டாகி மாண்டீர் என்று
சொல்ல மனசு மறுக்கிறது
யோசிக்க யோசிக்க நிமிடம் கடந்தாலும் உம்
சிரித்த முகத்தோற்றம் எம் நெஞ்சத்தைக் கடக்காது

அருணோ மில்,
துவாளி வீதி,
இமையாணன்,
உடுப்பிட்டி.

கருணைவேல் (கணவர்)
அருள்செல்வி, ஹரிந்திக்கா,
ஜனதன் (பிள்ளைகள்).

(c/4995)(10.6.7)


01-03-2013 இல்
மாணிக்க விழாவினைக்
கொண்டாடும்

மாண்பு மிகு நிறுவனம்
**The Express Institute** இனை
மனம் உவந்து
வாழ்த்துகின்றோம்.

மாணிக்க விழாவின் மகுட நாயகனே!
உம் வழியில் செல்கின்றனர் எம் மாணவர்கள்.
வாழிய பல்லாண்டுகள்...

அரசகேசரிப் பிள்ளையார் கோயில்,
நீர்வேலி.

வாழ்த்துவோர்,
சா. சோமதேவகுருக்கள்
குடும்பம்.



இரத்த சக்தியை மீண்டும் பெற்றிட
பாவியுங்கள்
## றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது

**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்**

PACKED BY:
ROYAL Industries
T.P 0777 2776 70 Colombo 12.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நாராயணர் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2567

★ விளையாட்டுத்துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வீறு கொண்டெழும் விசேட சக்தியை வழங்குவது றோயல் குளுக்கோஸ்
★ நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்கு புத்துணர்வும் புதுத்தென்பும் தருவது றோயல் குளுக்கோஸ்
★ காலை முதல் மாலைவரை வேலை அதிகம் காரணமாக சோர்வுற்ற நிலை அடையும் போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது றோயல் குளுக்கோஸ்
★ மழலைகளுக்கும் மகப்பேற்றுத்தாய்மாருக்கும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் முதியோருக்கும் சுகாதாரமான காலத்தில் இருந்து முன் நின்று உற்சாகம் தருவது றோயல் குளுக்கோஸ்

சந்தைப்படுத்துவோர்:- சிவா நாராயணர் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உற்பத்தியாளர்:- றோயல் இன்டஸ்ரீஸ், ஷெல்வொன்ட் ஸ்றீற், கொழும்பு - 13

(C/6257)(2.6)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## செல்லத்துரை அன்ரனி யோகராஜா



(முன்னாள் சிலோன் தியேட்டர், சினிமாஸ் Ltd இயந்திர இயக்குநர், மகா விஷ்ணு கணக்காளர்)

**மலர்வு**
**07-08-1949**

**உதிர்வு**
**23-01-2013**

கடந்த 23.01.2013 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் தெரிவித்தவர்களுக்கும், பங்குபற்றிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (22.02.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஒடக்கரை,**
**பருத்தித்துறை.**

**மனைவி: யோ.பரமேஸ்வரி,**
**மகன்: யோ.செல்வகுமார்.**

(c/4984)(10.6.7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் நல்லதம்பி தருமராசா



தோற்றம் 22.07.1952 மறைவு 04.03.2012

ஆண்டு ஒன்றாகினவே அண்ணா ஒன்பதுவும் சிறகிழந்து வாடுகின்றன
பெற்றவளோ தடுமாறுகின்றாள் கை பிடித்தவளோ கதி கலங்கி கண்ணீர் சொரிகின்றாள்
பெற்ற பிள்ளைகள் என் அப்பா எங்கே? எங்கே?
என அழ உறவுகளோ தருமன் பெரியவன் எங்கே?
எனத் திகைத்து நிற்க சுற்றமும் சோகத்தால் வாடி நிற்க
யாரைக் கண்டாலும் தன் தலையை அசைத்துக் காட்டிய காட்சியை
தன் இடமான கொம்மந்தறை பலமிழந்து சோகத்தால் கதையற்று
வாடி நிற்க சோக மழை ஊரெங்கும் வழிந்தோட
எங்கள் அண்ணனைத் தேடுகின்றேன்
என் கையில் வருவாயாக....!

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவும் ஆத்ம சாந்திக் கிரியை நிகழ்வும் நாளை (22.02.2013) வெள்ளிக்கிழமை நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி நிகழ்வில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.
T.P-0778917927, 0217911978

இவர் பிரிவால் வாடும் உறவுகள்.
(27756)(6.7.11) குடும்பத்தினர்.

## வலுவிழந்தோருக்கு சைக்கிள்கள்

தென்மராட்சி நிருபர்

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மூவருக்கான மூன்று சக்கர சைக்கிள் செயலகத்துக்கு வந்துள்ளது.

மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் விசேட தேவையுடையோருக்கான உபகரணங்கள் வழங்கல் திட்டத்தின் கீழ் இந்தச் சைக்கிள்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கந்தன் இராசையா, கரம்பைக் குறிச்சி மேற்கு, வரணி தர்ம குலசிங்கம் பத்மாவதி, மந்துவில் கிழக்கு அகத்தியர் ஆனந்தராஜா கல்வயல் சாவகச்சேரி ஆகியோருக்கு மூன்று சில்லு சைக்கிள்கள் வந்துள்ளன. இதனால் உரியவர்கள் தமது பங்கீட்டு அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

யாழ்.பேராதனைப் பல்கலைக்கழக GAQ வெளிவாரிப் பதிவுகளை மேற்கொள்ளவுள்
2011 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன் A/L 3 பாடங்களில் சித்திபெற்றவர்கள் தகுதியானவர்களாவார்கள் 23.02.2013 சனி காலை 8 மணிக்குப் புதிய பிரிவினருக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

**New Degree College (NDC)**

சங்கத்தானை, சாவகச்சேரி.
தொ.பே. இல.: 075 040 2790
(33587)(2-6)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 13.05.1942

உதிர்வு 08.01.2013



அமரர் கணபதிப்பிள்ளை ஜெயகசோதி (சந்திரன்)
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

எல்லோரையும் அன்பால் அரவணைத்த இனிய நெஞ்சம்
உறங்கி விட்டதே ! நல்லவராக வல்லவராக
கள்ளமில்லா மனத்தினராக வயது வேறுபாடின்றி பழகிடும்
இனிய நண்பராக ஒளி விட்ட சோதி திடீரென அணைந்து விட்டதே?
ஐயா உன் இல்லத்தில் குழுமியிருந்து குதூகலம் அடையும்
இளைய பறவைகள் நாம் உமை பிரிந்த வேதனை
தாளாது தவிக்கின்றோம். விதியின் வலியகரங்களில்
நீங்கள் வீழ்ந்து விட்டீர்கள். உங்கள் நினைவுச் சுடர்களால்
நாம் வேதனையில் துடிக்கின்றோம்.

நல்லூர். (28093)(6.11)
உங்கள் பிரிவால் உருகிடும்
இளைய நண்பர் குழாம்.

குழந்தை வைத்திய நிபுணர்
பார்வையிடும் நேரம்:
தினசரி - காலை 7 மணி

லாவா வைத்தியசாலை
இல 75, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2224333


**New House for Rent**

New House with 3 bedrooms, Kitchen, 2Halls, attached bathroom and Car park for rent. near Maruthaddi Pillaiyar Temple, Manipay North. *Hindus are Preferred.*
தொ.பே: 077 4467387
(28930)(5-6-7)

# உடனடிப் பயணம் துபாய் நாட்டில்

**Dodsal** நிறுவனத்துக்கு

# உதவியாளர்கள் (Helpers)



எண்ணிக்கை - 250
சம்பளம் - Dhs - 575+ OT
- ஆரோக்கியமான தேக நிலை
- வயதெல்லை: 23-35
- சுறுசுறுப்பான வேலைத் திறமை

AI/2541/Advt/13/12

**Hotline: 0727 544 333**

ஒரு Dhs = 34 ரூபா

சேவை நிபந்தனைகள்
- ஒப்பந்தக் காலம் 2 வருடங்கள்
- வழக்கமான 8 மணித்தியால வேலையுடன் மேலதிக வேலை நேரம்
- உணவு, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவச் செலவு அனைத்தும் இலவசம்
- ஒப்பந்தக் காலம் முடிவடைந்த பின் திரும்பிவர இலவச விமான டிக்கட்
- ஏனைய நிபந்தனைகள் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தொழில் சட்டங்களுக்கு உட்பட்டவை.

யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை
Hotel Lovusiya பெப்ரவரி 21/22
லவ்சியா ஹோட்டலில்
இல.584, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பாஸ்போர்ட் மற்றும் வெள்ளை நிறப் பின்னணியுடனான 16 புகைப்படங்களுடன் உடனடியாக வாருங்கள்.

கட்டணம் ரூபா 61,546/=



## இக்ரா வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்

இல.634-1/1 மற்றும் 1/2, மருதானை வீதி, மருதானை, கொழும்பு-10 (ஆனந்தாக் கல்லூரியின் முன்பாக)
தொ.பே: 0094 115 544 333 பெக்ஸ்: 0094 115 544 337
அனுமதிப் பத்திர இல. 2541 மின்னஞ்சல்: info@ikralk.com

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021 567 ....
விநியோகம்: 021 567 7222
தொலைநகல்
செய்தி: 021 567 8844,
விளம்பரம்: 021 222 9731
மின் அஞ்சல்
செய்தி: news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 2262395
சாவகச்சேரிக் கிளை:
நுணாவில் சந்தை ரோட், சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: ... அல்வாய் : 021 226 3206. ... நெல்லியடி : 021 490 1519. ... கண்டி வீதி, ... : 021 227 0399. ... மன்னார் : 0775282478. ... கொடிகாமம் : 0774937585. ... : 0778175116. ... : 0779598917. ... : 0775035571. ... 98, ... வீதி, மன்னார் : 023 222 3311

## மலிந்த பொருள் எது?

உலகில் மிகவும் மலிவானது எது? என்று உங்களை யாரேனும் கேட்டால் ஒரு கணம் யோசிக்கவே செய்வீர்கள். நொடிக்குநொடி விலைவாசி ஏறிக் கொண்டே போகையில் மலிவான பொருளென்று எதை அடையாளப்படுத்த முடியும்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முதன் முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தபோது ஒரு இறாத்தல் பாணின் விலை வெறும் ஐந்து ரூபாய் மட்டுமே. அதனால் அது ஏழைகளின் பிரியாணி என்று அழைக்கப்பட்டது. மிகமலிந்த பொருளான பாணே அநேக ஏழைகளுக்குப் பசிநேரத் தோழனாக இருந்தது. இப்போது பாணைப் பணக்காரர்களே வாங்குவதற்கு யோசிக்கும் அளவுக்கு அதன் விலை 60 ரூபாவைத் தாண்டிவிட்டது.

இந்த லட்சணத்தில் உலகிலேயே மலிவான பொருள் எது என்று கண்டுபிடிப்பது கஷ்டம் தான். ஆனால், முள்ளிவாய்க்காலில் கடைசிக்கணம் வரை நின்றவர்களிடமோ அல்லது கள்ளத் தோணியில் கடல்கடந்து ஆஸ்திரேலியாவுக்குச் சென்றவர்களிடமோ இதே கேள்வியைக் கேட்டுப் பார்த்தீர்களானால் அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு,

''உலகில் மலிவானது மனித உயிர் மட்டுமே.'' என்று சட்டென்று சொல்லிவிடுவார்கள். அந்தளவுக்கு மனித உயிர் மிகமிக மலிவான ஒன்றாக மாறிவிட்டது.

இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற கனவு இலங்கையர்களுக்கு மட்டுமே சொந்தமான ஒன்றல்ல. அது வறுமையின் பிடியில் உழலும் எல்லாத் தேசங்களிலும் உள்ள இளைஞர்களின் மனதுக்குள் புகுந்துவிட்டது. அதனால் எப்பாடுபட்டாவது உயிரைக் கொடுத்தாவது தங்களுக்கு பச்சை போன்ற நாட்டுக்குப் போய் இறங்கிவிட வேண்டுமென்று இவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள். சிறுகச்சிறுகச் சேர்த்த பணத்தையெல்லாம் கொட்டிக் கள்ளத்தோணியில் கடலில் பயணிக்கத் தொடங்குகிறார்கள்.

அதன் பின்னரே அவர்களின் அக்கரைப் பச்சை பற்றிய கனவுகள் மெல்லமெல்லச் சாயமிழக்கத் தொடங்குகின்றன. குறிப்பாக இப்போது அநேக இளைஞர்களின் கனவுகள் கங்காரு தேசத்தை நோக்கியதாகவே இருக்கின்றன. ஒரே பாய்ச்சலில் அந்த நாட்டை அடைய முடியாது. உலகிலேயே மிகவும் அபாயமான பகுதிகளை உள்ளடக்கிய சமுத்திரத்தைக் கடந்தே ஆஸ்திரேலியாவை அடைய முடியும்.

அந்தச் சமுத்திரம் உயிர் குடிப்பதற்கென்றே உருவெடுத்தது போன்று இராட்சத அலைகளையும், பெரும் கற்பாறைகளையும், சுழிகளையும், ஆபத்தான கடல்வாழ் உயிரினங்களையும் கொண்டுள்ளது. போதாக்குறைக்கு பல்வேறு நாட்டுக் கடற்படைகள் மற்றும் கடற் கொள்ளையர்களின் தொந்தரவுகள் வேறு. இவற்றையெல்லாம் தாண்டுவதற்குள் இளைஞர்களின் முக்கால்வாசி உயிர் பிரிந்துவிடும்.

அதற்கிடையே ஏதேனும் அசம்பாவிதங்கள் நிகழ்ந்துவிட்டால் அவ்வளவுதான். பெரும் பேரழிவுக்கு வெறும் வரப்போவதில்லை. ஒரு சம்பிரதாயத்துக்கு அவலக் குரல் எழுப்பிவிட்டுக் கடலுக்குள் மூழ்கிப் போக வேண்டியதுதான்.

இலங்கை இளைஞர்களிடம் குடிகொண்டிருந்த ஆஸி. கனவு இப்போது மியான்மருக்கும் பரவிவிட்டது. அங்கிருந்து படகுகளில் சட்டவிரோதமாகப் புறப்பட்டவர்கள் திக்குத்திசை தெரியாமல், அன்னம் தண்ணி இல்லாமல் தனித்து இரண்டு மாதங்களுக்கு மேலாகக் கடலில் அலைந்திருக்கிறார்கள். இந்த அலைதலின்போது எஞ்சியிருக்கிற உணவைச் சேமிப்பதற்காக நோய்வாய்ப்பட்ட மியான்மர் இளைஞர்கள் பலர் உயிரோடு கடலில் வீசப்பட்டிருக்கிறார்கள். படகில் எஞ்சியிருந்த உணவைவிட, துடித்துக் கொண்டிருந்த சகபயணியின் உயிர் மிக மலிந்த ஒன்றாக அந்தக் கணத்தில் மாறியிருந்தது. கிட்டத்தட்ட 98 பேர் இவ்வாறு உயிரோடு கடலில் தமது சகாக்களால் எறியப்பட்டிருக்கின்றனர். இப்போது எஞ்சியவர்கள் எலும்பும் தோலுமாக மீட்கப்பட்டு இலங்கையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இப்போது சொல்லுங்கள், மனித உயிரை விட மலிந்த பொருள் ஏதுமுண்டா உலகில்?

# உண்ணக்கொ

## ஒரு பாலகனின் மரித்தல் ச

■ ஒளண்யன்

கடந்த இரு தினங்களாக உலகின் பெரும்பாலான ஊடகங்களின் பக்கங்களை மீண்டும் நிரப்பத் தொடங்கியிருக்கிறான் பாலச்சந்திரன். புலிகளின் தலைவர் பிரபாகரனின் கடைசிக் குழந்தை. போரைப் பற்றியோ, அதன் விளைவுகளைப் பற்றியோ அறிந்திராத மற்றைய தமிழ்க் குழந்தைகளைப் போலவே அவனும் ஏதுமறியாப் பாலகன். அவன் குண்டுகளால் சல்லடையிடப்பட்ட புகைப்படம் 2009 இல் வெளிவந்து பெரும் சலசலப்பை உண்டுபண்ணியிருந்தது.

எதற்கும் இளகாத இத்தாலியின் இரும்புப்பெண்ணும், இந்தியாவின் 'உண்மையான ஆட்சியாளருமான' சோனியா காந்தியையே அந்தப்படம் கண்கலங்க வைத்ததாகவும், அதனாலேயே ஜெனிவாவில் இலங்கைக்கெதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததாகவும் ஒரு கதையுண்டு. அவையெல்லாம் காலம்கடந்தவை.

இப்போது போரின் ரணங்களை மறக்கும் காலம். சவக்குழிகளின் மீது அலங்காரப் பந்தல்கள் எழுந்துகொண்டிருக்கின்றன. மண்ணோடு கரைந்துபோன மனித உடல்களைப் பற்றியோ, சாம்பரைப் பற்றியோ யாரும் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. எல்லாவற்றையும் மண் விழுங்கி, செமிக்கத் தொடங்கியிருக்கிறது. என்றாலும் இடையிடையே ரணங்களின் வலியை உச்சத்துக்குக் கொண்டுபோகும் வகையிலான ஞாபகமூட்டல்கள் ஏதோவொரு வகையில் பலமனங்களைப் பற்றிக்கொள்ளவே செய்கின்றன. இதன்போதெல்லாம் நிலத்தில் புதைந்துபோன ஆயிரமாயிரம் உயிரற்ற உடலங்கள் ஒரே கணத்தில் எழுந்துநின்று, போரின் வெம்மைக்குள் நிற்பதுபோன்ற உணர்வை எமக்குள் உற்பத்தி செய்கின்றன.


சாவு பற்றிய காட்சிகளை விடவும், சாவுக்கு முன்னரான கணங்கள் எவரது மனங்களையும் சட்டெனத் தொட்டுவிடக்கூடியவை. பாலச்சந்திரன் துப்பாக்கிச் சன்னங்களால் துளைக்கப்பட்டு, தரையில் வீசியெறியப்பட்டுக் கிடக்கும் முன்னைய புகைப்படத்தை விடவும், இப்போது வெளியாகியுள்ள இரு புகைப்படங்களும் எழுப்புகின்ற வலியின் அதிர்வுகளைச் சொல்லி மாளமுடியாது.

ஆனால் இந்தப் படங்களில் குருதியின் வாடையில்லை. எவரும் நிர்வாணமாக்கப்படவில்லை. யாருடைய கைகளும், கண்களும், கால்களும் கட்டப்பட்டிருக்கவில்லை. ஒரு துப்பாக்கி கூடப் படத்திலில்லை. ஆனாலும் அவை ஒரு பாலகனின் சாவுக்கு சில நிமிடத்துளிகளுக்கு முந்திய பகுதியைச் சொல்லிப் பறைகின்றன.


ஒரு இனத்தின் தன்மானத்துக்காகப் போராடிய விடுதலை அமைப்பின் தலைவரின் மகனென்ற எந்த அடையாளங்களுமற்று, ஏதுமறியா குழந்தைத்தனத்தோடு, பாலச்சந்திரன் வாங்கு ஒன்றில் அமர்ந்து, பிஸ்கட் ஒன்றை உண்டுகொண்டிருக்கிறான் அந்தப் புகைப்படங்களில். அவனுக்குப் பக்கத்தே தாகம் தீர்க்க ஒரு சிவப்புக் குவளையில் தண்ணீர். அவனது கண்களில் எந்தக் கலக்கமும் இல்லை. பசியைத் தீர்ப்பதிலேயே குறியாக இருக்கிறான். இடுப்பில் ஒரு மண்ணிறக் காற்சட்டை. தோளில் ஒரு சாரம். சுற்றிவரப் பச்சை உருமறைப்புகளில் மண் நிரப்பப்பட்டு, உருவாக்கப்பட்ட சிறுவயதினரின் காவலரண்.

அவன் எல்லாவற்றையும் மறந்துபோய், பிஸ்கட்டை சுவைப்பதைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் ஒரு சீருடைக்காரனின் கரம். இவ்வளவுதான் அந்தப்படத்தில். ஆனால் பார்த்தவுடனேயே கண்களின் நீர்ப்பெருக்கைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கிறது. ஏனெனில் அந்தப் பாலகனின் முடிவு ஏற்கனவே நமக்குத் தெரிந்திருந்தது. ஆனால் பிஸ்கட்டை உண்டுகொண்டிருந்த அதற்கடுத்த கணங்களில் நிகழப்போகும் விபரீதத்தை அவன் உணர்ந்திருக்க வாய்ப்பில்லை.

இத்தனை நாளும் பட்டினியால் தவித்தவனுக்கு அந்த பிஸ்கட் அமிர்தமாக இருந்திருக்க வேண்டும். ஒரு அரசின் இளவரசன் அவன். சர்வ வல்லமை பொருந்திய தந்தையின் கீழ், சொன்னதைச் செய்ய ஆயிரமாயிரம் படைகள். பின்தொடர லட்சக்கணக்கான மக்கள். எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு, தனியனாக ஒரு காற்சட்டையோடு எதிரிகளின் காவலரணுக்குள் உட்கார்ந்து, காலாட்டியபடி பிஸ்கட்டை உண்டுகொண்டிருக்கிறான். ஏனெனில் அவனுக்கு போர் பற்றிய புரிதல்கள் கிடையாது. ஆயுதத்தை அவனுடைய தந்தையும், தமையனும், அவர்களின் கீழிருந்த போராளிகளும் தூக்கியதைப் பார்த்திருப்பான். சிலவேளைகளில் அவற்றைத் தொட்டுக்கூடச் செய்திருப்பான். ஆனால் அதனை அவன் தோளில் தூக்கி, பயிற்சியெடுத்து, அரச


1


2


3

# …டுத்து உயிர் பறித்தல்:

## …ல் கிளர்த்தும் கண்ணீராலான காட்சிகள்







**''1996 ஆம் ஆண்டு எதிர்பாராத அதிசயமாக குடும்பத்திற்கு வந்து சேர்ந்த குழந்தை பாலச்சந்திரன். பிரபாகரனின் கடைக்குட்டி பாலச்சந்திரன். குடும்பத்தில் எல்லோருக்கும் செல்லக் குட்டி. அச்சில் வார்த்தது போல பிரபாகரனின் மறுதோற்றம்..''**

நன்றி:'சுதந்திர வேட்கை'
அடேல் பாலசிங்கம்
இறுதிப்பக்க, இறுதிவரிகள் இவை.

பகைகளுக்கெதிராக பிரயோகித்திருக்க முடியாது. அவனும் ஒரு சாதாரண தமிழ்க்குழந்தை.

இறுதிப்போரில் ஓடுமட்டும் ஓடி, கடைசியில் எல்லோரையும் தொலைத்துவிட்டு, படைகளிடம் சரண் புகுந்தவன். சரணடைதலின் அர்த்தம் கூட அவனுக்குத் தெரிந்திருக்கப் போவதில்லை. கோயில் திருவிழாவில் மற்றவர்கள் போகும் திசையில் இழுபட்டுச் செல்லும் குழந்தையைப் போலவே, சனங்கள் ஓடிச்சென்ற பக்கம் அவனும் உயிர்தப்ப ஓடிப்போனான். அப்போது தலைவரின் பிள்ளையாக இருக்கவில்லை அவன். உயிரைக் கையிலேந்திக் கொண்டோடும் ஒரு அநாதைக் குழந்தை. அவ்வளவுதான்.

அந்தக் குழந்தையை முதலில் ஆசுவாசப்படுத்தி, உணவும், நீரும் கொடுத்துவிட்டே அவன் மீது சன்னங்களை உமிழ்ந்து, கொன்றுபோட்டிருக்கிறார்கள். எந்தவித களங்கமுமற்ற, ஒளிபொருந்திய பாலச்சந்திரனை சல்லடையிட எப்படி துப்பாக்கிதாரிக்கு மனம் வந்திருக்கும்? ஏனெனில் நீட்டிய துப்பாக்கிக்கு முன் நின்றது ஒரு குழந்தை. துப்பாக்கி ஏந்தியவனுக்கு தனது குழந்தையின் முகத்தை பாலச்சந்திரனின் முகம் ஞாபகப்படுத்தாமல் இருந்திருக்க முடியாது. அப்படியிருந்தும் கொன்றுபோட்டிருக்கிறார்கள் என்றால் நிச்சயம் இறுதிப்போரில் நிறைய மிருகங்கள் சீருடைக்குள் ஒளிந்து நடமாடியிருக்க வேண்டும். அவற்றுக்குத்தான் மனிதர்களின் பேதங்கள் தெரியாது. சதையும், இரத்தமும் கொண்ட எல்லாமே அவற்றின் பார்வையில் இரைதான்.

தங்களுக்கெதிராக ஆயுதம் தூக்கியவர்களைக் கொன்றார்கள். அது பாதுகாப்புக்காக என்று சொல்லிக்கொள்கிறார்கள். போகட்டும். பெண்களின் உடல்களைச் சுவைத்துவிட்டு, வெற்றுடலாக வீசியெறிந்தார்கள். அவர்கள் தற்கொலைதாரிகளாக இருக்கலாமோ என்று சோதித்தோம் என்றார்கள். நம்பியதுபோல் நடிக்கலாம். கண்ணுக்கு உறுத்தக்கூடிய உருவத்திலிருந்த சகல இளைஞர்களையும், யுவதிகளையும் கூட்டாகக் கொன்றார்கள். ''அவர்களும் புலிகளாக இருக்கலாம் என்ற முன்னெச்சரிக்கைக்காக'' என்று இதற்கும் ஒரு சப்பைக்கட்டு. அவற்றையெல்லாம் பார்த்தும், மனதுக்குள் வெம்பி அழுது விட்டு, மௌனிக்க முடிந்தது. ஆனால் பாலச்சந்திரனின் சாவுக்கு முந்திய கணங்களைப் புலப்படுத்தும் இந்தப் படங்களைப் பார்த்த எவரும், மனதுக்குள் அழுவதன் துக்கிப்பைத் துடைத்தெறிய முடியாது. 'ஓவென்று' ஓராயிரம் முறை கத்தி அழுதால் மாத்திரமே இந்தப் புகைப்படங்கள் உண்டாக்கிய துயரின் பெருவலியிலிருந்து மீளமுடியும்.

பாலச்சந்திரன் என்ன பாவம் செய்தான்? தந்தையும், தமையனும் அரசுக்கெதிராகப் போராடியதற்காகவா ஏதுமறியா பன்னிரெண்டு வயதுப் பாலனுக்கு கொலைத்தண்டனை?

பாடப்புத்தகங்களையும், விளையாட்டுப் பொருள்களையும் மட்டுமே தூக்கியறிந்தமைக்காக அந்தக் குழந்தைக்கு ஆயுதங்கள் மூலம் பரிசளித்திருக்கிறது கொடும்படை. அவன் பேரினவாதிகளின் பாஷையில் 'பயங்கரவாதியாக' இருந்திருந்தால், இப்படியா ஒரு காவலரணுக்குள் கள்ளம் கபடமற்ற முகத்தோடு, காலாட்டிக் கொண்டு, பிஸ்கட்டை உண்டு கொண்டிருப்பான்? இறுதிப்போரில் கொல்லப்பட்டது தமிழர்கள் மட்டுமல்ல, உலகின் மனச்சாட்சியும் கூடத்தான். அதனையே பாலச்சந்திரனின் சாவுக்கு முந்திய படங்கள் மீண்டுமொருமுறை சொல்லி, மனங்களை அதிரப் பண்ணுகின்றன. யாருக்குமே தெரியாமல் கருகிப்போன குருத்துக்காக ஆயிரமாயிரம் விழிகள் கண்ணீராற்றை பெருக்கெடுக்கச் செய்கின்றது. நீதிக்கான அந்த நீரோட்ட வேகத்தில் என்றோ ஒரு நாள் கறைபடிந்த கரங்களின் சொந்தக்காரர்கள் தோற்றுப் போகத்தான் வேண்டியிருக்கும். ★

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப் போவீர்கள்.

**இடபம்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

**மிதுனம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**கடகம்:** இட்டமிட்ட காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**சிங்கம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**கன்னி:** வியாபாரத்தில் இருந்து வந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்ட நாள் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

நாளை

மாசி- 10 வெள்ளிக்கிழமை 22.02.2013
திதி: துவாதசி பி.இ 12.45 வரை
நட்சத்திரம்: புனர்பூசம் மு.இ. 10.55 வரை
சுபநேரம்: 06.30- 08.00 வரை
இராகுகாலம்: 11.00- 12.30 வரை

**துலாம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். சகோதரர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பாக்கிகளை விரைந்து வசூலிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளில் இருந்து வந்த தேக்க நிலைமாறும்.

**விருச்சிகம்:** சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள். சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**தனுசு:** எதிர்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

**மகரம்:** புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மன நிறைவு கிட்டும்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | | 1 | | 4 | 3 |
| | 6 | | 8 | 3 | | | 9 | |
| | | 3 | 2 | 4 | | 5 | | 7 |
| | | 1 | | | 5 | 6 | 2 | |
| | | 6 | | | | 4 | | |
| | 7 | 8 | 9 | | | 3 | | |
| 5 | | 7 | | 1 | 8 | 9 | | |
| | 1 | | | 9 | 2 | | 8 | |
| 8 | 3 | | 5 | | | | | 4 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 5 | 8 | 7 | 1 | 4 | 9 | 2 |
| 8 | 1 | 9 | 2 | 3 | 4 | 7 | 6 | 5 |
| 4 | 2 | 7 | 5 | 9 | 6 | 3 | 1 | 8 |
| 1 | 5 | 6 | 7 | 4 | 8 | 9 | 2 | 3 |
| 7 | 3 | 8 | 9 | 6 | 2 | 1 | 5 | 4 |
| 9 | 4 | 2 | 1 | 5 | 3 | 6 | 8 | 7 |
| 5 | 9 | 4 | 6 | 2 | 7 | 8 | 3 | 1 |
| 2 | 8 | 3 | 4 | 1 | 9 | 5 | 7 | 6 |
| 6 | 7 | 1 | 3 | 8 | 5 | 2 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டிக்காமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

வன்னி மண்ணில்
கனகராயன் குளத்தில்
பிரமாண்டமான ஆரம்பம்
லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்



நிகழும் மங்கலகரமான நந்தன வருடம் இன்று
(21.02.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணி
தொடக்கம் பிற்பகல் 01 மணி வரையுள்ள சுப வேளையில்
லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்
ஏ-9 வீதி, கனகராயன் குளத்தில் எம்மால் ஆரம்பிக்கப் படவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து வைபவத்தைச் சிறப்பிப்பதோடு மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
சு.கதிரவேலு குடும்பத்தினர்
ஏ-9, வீதி, கனகராயன் குளம், வவுனியா.

நெஞ்சைவிட்டு அகலாத
நினைவுகளில் நெஞ்சங்கள்



02.02.1936 - அன்னை மடியில் - 12.01.1944
22.02.1997 - ஆண்டவன் அடியில் - 04.03.2012
பௌர்ணமி (மாசி) - திதி - ஏகாதசி (மாசி வளர்பிறை)
25.02.2013 21.02.2013

அமரர்
இளையதம்பி செல்வநாயகம்
(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

அமரர்
செல்வநாயகம் பரமேஸ்வரி
(முன்னாள் ஆசிரியை)

கண் எதிரில் காணாத உங்கள் உருவங்கள் எங்கள்
கண்ணீரில் இன்னும் வடிகின்றதே
நீங்கள் இல்லாத இடைவெளி நெஞ்சை வஞ்சித்தாலும்
நெருக்கமுடன் நீவிர் எம் மனதில் நிலைத்துள்ளீர்
நிழல் தந்த மரங்கள் நிலம் சாய்ந்தாலும் நிழல் பெற்ற
மனங்களிலிருந்து அது மறைந்திடுமோ?
எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த எம் குல தெய்வங்களே
பலவாண்டுகள் ஆனாலும் எம் மனது இன்னும் ஆறவில்லை
தங்கள் ஆன்மாக்கள் உயர்வுபெற்று ஈடேறி வாழ
நாமெல்லோரும் ஒரு மனதாய் ஏற்றமுடன் வாழ்த்துகிறோம்.
தங்கள் இருவரினதும் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நினைவுடன்
அன்புக் குடும்பத்தினர்.

(28997) (5.6.7)

## பாகிஸ்தான் கடற்படை குழு இலங்கை வருகை

கொழும்பு,பெப்.21

பாகிஸ்தானிய கடற்படைக் குழு இலங்கை வந்துள்ளது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வந்த இந்தக் குழு 6 நாள்கள் இலங்கையில் தங்கியிருந்து பேச்சுக்களை நடத்தவுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான மற்றும் பாதுகாப்பு தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலேயே இந்தப் பயணம் அமைவதாக இலங்கையின் பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து திரும்பிய பாகிஸ்தானிய அதிகாரிகள் குழுவின் பயணத் தொடர்ச்சியாகவே தற்போதைய பாகிஸ்தான் கடற்படைக் குழுவினரின் வருகை அமைந்துள்ளது. (ச)



நீர்கொழும்பு ஹமில்டன் கால்வாய் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் புனரமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அதனை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ திறந்துவைத்த பின் படகில் உல்லாசமாக பயணிக்கிறார். அருகில் பிரதி மீன்பிடித் துறை அமைச்சர் சரத் குணரட்ண உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் காணப்படுகின்றனர்.

போலி ஆவணம் சமர்ப்பித்து

## 19 லட்சம் ரூபா மோசடி 8 பேர் வசமாக மாட்டினர்

கொழும்பு,பெப்.21

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து சுங்கத் திணைக்களத்தில் 19 லட்சம் ரூபா மோசடி செய்த 8 பேரை பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான 11 ஆயிரம் கிலோ கிராம் நிறைகொண்ட 'மெக்கரோனி' உணவு வகையே போலி ஆவணங்களை சமர்ப்பித்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

கப்பல் மூலமான இந்த இறக்குமதிக்கு 25 லட்சம் ரூபா வரி சுங்கத் திணைக்களத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலையில், குறைவான நிறையே இறக்குமதி செய்யப்படுவதாகக் கூறி போலி ஆவணங்கள் சமர்ப்பித்ததன் மூலம் 6 லட்சம் ரூபா மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது என்று பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இரத்மலானையிலுள்ள ஒரு பிரபல நிறுவனமே 'மெக்கரோனி' உணவு வகையை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்டோர் மேலதிக விசாரணைகளுக்காக சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ச)

## கணினிக் கட்டமைப்பு பதிவு முறையில் மாற்றம்

### சிங்கப்பூர் செல்கிறது அதிகாரிகள் குழு

கொழும்பு,பெப்.21

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், புள்ளிவிபரங்களை பதிவுசெய்யும் கணினிக் கட்டமைப்பு முறையில் மாற்றங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

நாட்டில் தற்போது காணப்படும் புள்ளிவிபரங்களைப் பதிவுசெய்யும் கணினிக் கட்டமைப்புகளும் பழைமையானது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் மல்லிகா சமரசேகர தெரிவித்தார்.

அதற்கமைய, சிங்கப்பூரில் தேசிய ரீதியான புள்ளிவிபரங்கள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ள முறை தொடர்பில் அறிந்து கொள்வதற்காக அதிகாரிகள் குழு ஒன்றை அங்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

தற்போது காணப்படும் கணினிக் கட்டமைப்பில் புதிய முறைகளைப் பயன்படுத்த முடியாது போயுள்ளதால், பல தவறுகளும், மோசடிகளும் இடம்பெறுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த மாத இறுதியிலும், எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியிலும் சிங்கப்பூருக்கு இரண்டு குழுக்கள் இதற்காக அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

ஜி.சீ.ஈ.சாதாரண தர, உயர்தர மாணவர்களுக்கு

# ஆங்கிலம் பேசுதல், வாசிப்பு திறனுக்கு மேலதிக 10 புள்ளிகள்

### 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் என்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு,பெப்.21

மொழித் திறனை ஊக்குவிக்கும் வகையில் ஜி.சீ.ஈ சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களுக்கு ஆங்கிலம் பேச, வாசிக்க இயலுமான திறமைக்கு 10 புள்ளிகளை மேலதிகமாக வழங்கும் திட்டம் 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வாழ்க்கைத் திறனுக்கான ஆங்கிலம் எனும் ஜனாதிபதி செயலணி செயற்றிட்டத்தின் மூன்றாம் கட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.இந்தநிகழ்வில் அவர் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டின் சகல பிள்ளைகளினதும் மொழித் தேர்ச்சியை முன்னேற்றும் யுகம் உருவாகியுள்ளது. ஆங்கிலமொழியைக் கற்பதற்காக புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆங்கில மொழிக் கற்றல் நடவடிக்கைக்காக நாம் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகின்றோம்.

ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவதில் மாணவர்கள் வெற்றிகாண வேண்டும் என்பதே எமது இலக்கு. ஆங்கில மொழியை மாணவர்கள் தமது வாழ்வில்வழக்கப்படுத்திக் கொள்வது அவசியமாகும். அதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகிறது.



இலவசக் கல்வி ஆரம்பிக்கப்பட்டு பல தசாப்தங்கள் நிறைவுற்றபோதும் அதன் பயனை முழுமையாக அனுபவிக்க கடந்த காலங்களில் தடைகள் இருந்தன. அதற்குக் காரணம் ஆங்கில மொழி தெரியாதிருந்தமையேயாகும்.

சகல பிள்ளைகளும் மொழிகளில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம். ஆங்கில மொழியாக இருக்கட்டும் அல்லது வேறு சர்வதேச மொழிகளாக இருக்கட்டும் எமது மத்தியில் மொழிகளின் பிரயோகம் பலம்பெற வேண்டும்.

சிலர் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறு கிடைக்காவிட்டாலும் ஆங்கில மொழியைத் தெரிந்திருந்தால் அவர் முன்னேற்றமடைய வழியுண்டு. எமது பிள்ளைகள் ஆங்கிலத்தைப் பேசுவதில் பின்வாங்குகின்றனர். உச்சரிப்புக்கள் தவறினால் ஏனையோரின் பரிகாசத்துக்கு உட்பட வேண்டி வரும் என நினைக்கின்றனர்.

ஆங்கிலம் ஒரு வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே உரித்தானது என்ற யுகம் நிறைவடைந்து, நாட்டில் சகல மாணவர்களும் ஆங்கில மொழியில் தேர்ச்சிபெற தற்போதைய அரசு வழிவகுத்துள்ளது. ஆங்கிலத்தை வாழ்க்கையின் திறன் மொழியாகக் கற்று எதிர்காலத்தை வெற்றிகொள்வதற்கு மாணவர்கள் சந்தர்ப்பத்தை வாய்ப்பாக்கிக் கொள்ள வேண்டும்.

சகல பாடசாலைகளுக்கும் பல் ஊடகத்தை அறிமுகப்படுத்தும் செயற்றிட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும்.-என்றார்.

இந்தநிகழ்வில் 10 ஆம், 11 ஆம் ஆண்டுகளில் கல்வி கற்கும் மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் வகையில் டிஜிட்டல் இறுவட்டும், ஆறாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்காக ஆங்கிலப் பயிற்சிக் கையேடு ஒன்றும் ஜனாதிபதியினால் வெளியிட்டு வைக்கப்பட்டு, சகல மாவட்ட மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன ,மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா உட்படபலர் கலந்து கொண்டனர். (ச)

## சட்டக்கல்லூரி சர்ச்சை குறித்து பிரதம நீதியரசருடன் பேச்சு

### நீதி அமைச்சர் ஹக்கீம் சொல்கிறார்

கொழும்பு,பெப்.21

சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை தொடர்பில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸுடன் பேச்சு நடத்தப்படும் என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை பாட விதானம் தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன. அது தொடர்பில் பிரதம நீதியரசருடன் பேச்சு நடத்த உத்தேசித்துள்ளோம்.

பேச்சின் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று ஹக்கீம் கூறினார்.



புதிய பாட விதானத்தை அறிமுகம் செய்ய கால அவகாசம் தேவைப்படுகின்றது. தீர்மானம் எடுக்கும் வரையில் அனைவரும் பொறுமையுடன் இருக்க வேண்டும் என்று அமைச்சர் ஹக்கீம் கோரியுள்ளார். (ச)

# தனியார் மயமாகும் இலங்கை மின்சார சபை

### சந்தேகம் வெளியிடுகிறது ஐ.தே.க.

இலங்கை மின்சார சபை தனியார் மயப்படுத்தப்படவுள்ளதா? இல்லையா என்பதை அரசு நாட்டுக்கு அறிவிக்க வேண்டும். மின்சார சபை, தனியார் மயப்படுத்தப்படவுள்ளமை தொடர்பில் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று ஐ.தே.க. ஊடகப் பேச்சாளர் சுயந்த கருணாதிலக சாடியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

போரில் இழப்புகளைச் சந்தித்த மக்களுக்கு நன்மை செய்யாமல், அவர்கள் மீது பொருளாதார ரீதியில் அரசு பதில் தாக்குதல் நடத்துகிறது.

நாட்டு மக்கள் மீது பெரும் பொருளாதாரச் சுமையை அரசு சுமத்தியுள்ளது. அதனால் அதிகமானவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நஞ்சூட்டித் தாமும் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொள்கின்றனர். இவை அனைத்தும், மக்கள் மீது அரசு சுமத்தியுள்ள மீளமுடியாத பொருளாதாரச் சுமையினாலேயே நடக்கின்றன. தினமும் நாட்டில் கொலை, கொள்ளை, வன்புணர்வு என்பன இடம்பெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் திடீரென அதிகரிக்கின்றன. இன்று மக்களுக்கு அத்தியாவசியப் பொருள் என்ற ஒன்று இல்லாது போய்விட்டது. ஏனெனில், அதன் விலைகள் பெருமளவில் அதிகரிக்கப்படுகின்றன.

சந்தையில் நூறு கிராம் நெத்தலியின் விலை 80 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதன்படி ஒரு கிலோ நெத்தலியின் விலை 800 ரூபாவாக உள்ளது. வரலாற்றில் எந்த அரசும் சுமத்தாத வகையில் தற்போதைய அரசு மக்கள் மீது பெரும் பொருளாதாரச் சுமையைச் சுமத்தியுள்ளது. போரால் பெரும் இழப்புகளைச் சந்தித்த மக்களுக்கு நன்மைகளைச் செய்யாது அவர்கள் மீது பொருளாதார ரீதியில் அரசு பதில் தாக்குதல் நடத்துகிறது.

எனவே, தமது அராஜக செயல்களை மூடிமறைப்பதற்காக அரசு எவர் மீதும் பழிபோட்டு தப்பிக்க முடியாது.-என்றார். (ச)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## நவநாள் வழிபாடு

பளை,பெப்.21

பளை, புலோப்பளை புனித அந்தோனியார் தேவாலய நவநாள் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூஜையும் இடம்பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் பாடற் பலிபூஜையும் இடம்பெறும். பளைப் பிரதேச கத்தோலிக்க பங்குத் தந்தை அருட்பணி ஜேம்ஸ்நாதன் அடிகள் திருவிழா ஆராதனைகளை நடத்துவார். (3-9)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்.சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் த.ஞானப் பிரகாசம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக உடற் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீ.முருகதாஸ்காந்தனும், சிறப்புவிருந் தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி ஆர்.சி.எக்ஸ். நேசராஜாவும் கலந்து கொள்வர்.

★ ★ ★

யாழ் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற் பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகர் கலாநிதி ஏ.எதிர்வீரசிங்கம் கலந்து கொள்வார். இடைவேளை சிறப்பு நிகழ்வாக கராத்தே உடற்பயிற்சி கண்காட்சியும் இடம்பெறும்.

★ ★ ★

வண்ணை நாவலர் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதனும், சிறப்புவிருந்தினராக வண்ணார்பண்ணை கிராம அலுவலரும் கலந்து கொள்வர்.

★ ★ ★

கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் க.உதயரூபன் தலைமை யில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தின ராக வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப் பாளர்- (ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு) சி.தில்லைநாதன் கலந்துகொள்வார். (வ-3)

## புலனுறுப்புக்கும் புலக்காட்சிக்கும் இடையே உள்ள தொடர்பு

புலனுறுப்புக்களாவன கண்கள், காதுகள், நாசி, நாக்கு, கைகள். புலன்களாவன பார்வை, ஒலி, மணம், சுவை, ஸ்பரிசம்.

நமது சூழலில் காணப்படுகின்ற பொருள்களே புலக்காட்சியாகும். புலக்காட்சி இன்றி புலனுறுப்புகள் ஒரு வினாடியேனும் தொழில் புரியமாட்டா.

இன்பம், துன்பம், வெப்பம், தட்பம், சந்தோஷம், கவலை இவையெல்லாம் புலனுறுப்புகள், புலக்காட்சியுடன் தொடர்புறும் வேளையில் நிகழ்வனவாகும்.

உடம்பிலும் பார்க்க மிகவும் நுண்ணியதான புலன்கள் உடம்பைக் கட்டுப்படுத்தி வைக்கின்றன. உடம்பிலே பேச்சு, ஸ்பரிசம், பார்வை, கேட்டல், சுவை ஆகியனவும் வாயு, பித்தம், சளி போன்றவையும் இருந்த போதிலும், அவை அனைத்தையும் சமமாகவே கட்டுப்பாட்டினுள் வைத்து புலன்கள் அதிகாரம் பண்ணுகின்றன.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி,பெப்.21

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மிக சஞ்சிகையின் 182 ஆவது இதழ் வெளிவருகின்றது.

நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறும்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கமும், மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நிகழ்த்துவார்கள். (3-8)

## மனிதருள் மிருகம்

இன்று நாம் ஊடகங்கள் மூலம் அறியக்கூடிய நாளாந்த செய்திகளில் சிறுவர் பாலியல் சம்பந்தமான விடயங்களுக்கு பஞ்சமில்லை. இன்று காமுகர்களின் கோரப்பசிக்கு சிறுமிகள் இரையாவது சர்வ சாதாரணமான விடயமாக மாறிவிட்டது. அதுவும் சில சிறுமிகள் தந்தையர்களாலும், உறவினர்களாலும் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்படுவதும், சில சிறுமிகள் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட பின்பு கொலை செய்யப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் மனிதர்களா? அல்லது மனித உருவில் உலவும் மிருகங்களா? சில மிருகங்களுக்குக் கூட அன்பும் உறவும் புரிகின்றன. ஆனால் ஆறு அறிவு படைத்த மனிதனுக்கு...? இதற்கெல்லாம் காரணம் மனிதன் பாவத்திற்கு அடிமைப்பட்டு, பாவச் சாக்கடையில் மூழ்கி, அதிலிருந்து மீள முடியாது, அதுவே வாழ்வென அதிலே ஊறிக்கொண்டு அதிலே சுகம் காணுகின்றான்.

நாம் விவிலியத்தை பார்க்கின்றபோது "உங்களைச் சபிப்போருக்கு ஆசி கூறுங்கள், உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்." (லூக் 6:28 29) என்று கூறும் இறைமகன்

தவக்காலச் சிந்தனை

இயேசு மீண்டும் மீண்டுமாய் கூறுகின்றார். "இச் சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது நல்லது. அதற்குக் காரணமாக இருப்போருக்கு கேடு" (மத்:6 7) என்றுரைக்கின்றார். அதாவது சபிப்போரை, இகழ்வோரை, அடிப்போரை மன்னிக்கும்படி கூறும் இறைமகன் இயேசு, சிறியோரை பாவத்தில் விழச் செய்வோருக்கு தண்டனைத் தீர்ப்பு நிச்சயம் உண்டு என்பதை உறுதிப்படக் கூறுகின்றார்.

ஆகவே இவ்வுலகில் செய்யும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களுக்கு இங்கு வழங்கப்படும் தண்டனைத் தீர்ப்பிலிருந்து தப்பினாலும் ஆண்டவன் யேசுவின் தண்டனையிலிருந்து நாம் தப்பிக்க முடியாது. ஆகவே மனம் மாறிப் புதிய செய்தியை நம்பி பரலோக இராஜ்ஜியத்தில் வழங்கப்படும் தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்வோம்.

க. அருள்நேசன், குருநகர்

## பீம ஏகாதசி உற்சவ நிகழ்வு

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயத்தில் பீம ஏகாதசி உற்சவ நிகழ்வு இன்று வியாழக்கிழமை இரவு இடம்பெறும். இரவு நான்கு சாமப் பூஜைகளும் சிறப்பு சமயச் சொற் பொழிவுகளும் நடைபெறும். (3-8)

★ ★ ★

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பீம ஏகாதசி உற்சவம் நடைபெற உள்ளது. இன்று பகல் விசேட பூசை வழிபாடுகளும் இரவுஅபிஷேகமும் நான்கு சாம பூசையும் புராண படனமும் இடம்பெற்று அதிகாலை பாறணை பூசையுடன் உற்சவம் நிறைவுபெறும். (வ-8-ரி)





நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

இன்றே அழையுங்கள்: (011) 4 218 218

Nations Trust Bank
Nations Leasing

## பொதுபல சேனாவை கண்டித்து கிழக்கு மாகாண சபை தீர்மானம்

திருகோணமலை,பெப்.21

நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்தும் நோக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படும் பொதுபல சேனா இயக்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் கிழக்கு மாகாண சபையில் கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபையின் மாதாந்த சபை அமர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திருகோணமலையிலுள்ள மாகாண சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்ற போதே இந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீல் கண்டனப் பிரேரணையை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## எல்லை மீள்நிர்ணயக் குழுவில் தமிழர் இடம்பெறாதமை அநீதி

### திருமலை நகர சபை உறுப்பினர் காட்டம்

திருகோணமலை,பெப்.21

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் கணிசமாக வாழும் நிலையில் உள்ளூராட்சி மன்றங்களில் எல்லை மீள் நிர்ணயக்குழுவில் தமிழர் நலன் பேணும் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படாமை பெரும் அநீதியாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முதலாவது மாவட்ட எல்லை மீள்நிர்ணயக் கூட்டத்தைக் கடந்தவாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடத்தியிருப்பது இனரீதியான பாகுபாட்டின் வெளிப்பாடாகும்.


எல்லை மீள் நிர்ணயக் குழுவின் உறுப்பினர் நியமனம் எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்ற நிர்வாகத்தில் தமிழர் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தைத் திட்டமிட்ட முறையில் குறைக்கும் நோக்கம் கொண்டது.

திருகோணமலை மாவட்ட எல்லை மீள் நிர்ணயக் குழுவில் தமிழர் நலன்பேணும் பிரதிநிதி நியமிக்கப்படாமை மூலம் இது வெளிக்கொணரப்பட்டுள்ளது.

தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலுள்ள பிரதேச எல்லைகளைப் பெரும்பான்மை இன மக்கள் வாழும் பிரதேசங்களுடன் இணைக்கவே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தமிழர்களின் குடி அடர்த்தியைக் குறைத்து, வட்டார ரீதியாகத் தமிழர் பிரதிநிதிகள் தெரிவுசெய்வதைக் குறைப்பதற்கு அரசு மறைமுகமாகச் செயற்படுவதற்கான முன்னேற்பாடே நடைபெறுகிறது.-என்றார்.(ச-40)

## வாகன விபத்தில் மூவர் படுகாயம்



காத்தான்குடி,பெப்.21

காத்தான்குடியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற லொறி-ஓட்டோ விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள நாசர் வித்தியாலயத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த இரண்டு பெண்கள், ஓட்டோ சாரதி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

அவர்கள் மூன்று பேரும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோ முழுமையாகச் சேதமடைந்துள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் கூறினர். (ச)



கல்முனை மாநகர சபையின் கூட்டமைப்பு உறுப்பினர் அ.விஜயரத்தினத்தின் நிதி ஒதுக்கீட்டில் பாண்டிருப்பு நூலகம் அமைந்துள்ள காணியில் இடம்பெறவுள்ள சுற்றுமதில் வரவேற்பு வளைவு அமைத்தல் என்பவற்றுக்கான ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்முனை மாநகர முதல்வர் முஹைமின் சிராஸ் மீரா சாகிப் மற்றும் பிரமுகர்கள் நூலக முன்றலில் வரவேற்கப்படுகின்றனர். (30)

## மக்களுக்கு நிவாரணம் கிடைத்தது



வாகரை,பெப்.21

வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஊரியன்கட்டு மக்களுக்கு 'சேவ்தசில்ரன்' அமைப்பு நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது.

இந்த மக்களுக்கு நுளம்பு வலை, பாய் , சுகாதாரப் பொதிகள் ஆகியவையே வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிவாரணப் பொருள்கள் 600 குடுங்களுக்கு வழங்கப்பட்டன. (ச)

### காலநிலை சீராகிவிட்டபோதும்

## விவசாயிகளின் வாழ்க்கை வழமைக்கு திரும்பவில்லை

திருகோணமலை,பெப்.21

நாட்டின் பல பகுதிகளிலும் நிலவிய சீரற்ற காலநிலை, தற்போது சீராகிவிட்ட போதிலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்க்கை வழமைக்குத் திரும்பவில்லை.

திருகோணமலை மாவட்ட விவசாயிகள் தொடர்ச்சியாக பெய்த மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த முறை பெரும் போகத்துக்காக சுமார் ஒரு லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவற்றில் அதிகளவான ஏக்கர் நெல்வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். பெரும் நட்டத்தையும் எதிர்நோக்கியுள்ளனர்.

குளங்களின் வான்கதவுகள் அடிக்கடி திறந்துவிடப்பட்டமையினால் வெள்ள நீர் விவசாய நிலங்களில் தேங்கி நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று திருகோணமலை மாவட்ட மக்கள் கவலை தெரிவித்தனர். (ச-40)

## ஆஸி. செல்ல முற்பட்டோர் கல்முனையில் சிக்கினர்

கல்முனை,பெப்.21

கல்முனை பிரதேசத்தில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குக் கடல் வழியாக சட்டவிரோதமாக செல்ல முற்பட்ட ஏழு பேரை கல்முனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அவ் ஏழு பேரும் கடல் வழியாக சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்டநிலையியே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு கல்முனை நகருக்கு பஸ்களில் வந்து இறங்கி எங்கு செல்வது எனத் தெரியாது நடமாடியுள்ளனர்.

இந்தத் தகவல் கல்முனை பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்ததை அடுத்தே, அவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

ஆஸ்ரேலியாவுக்கு அனுப்பும் முகவர்கள் கல்முனை நகரை அவர்கள் வந்தடைந்ததும் அழைத்துச் செல்வதாகத் தெரிவித்து அவர்களின் தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

அதனையடுத்து முகவர்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி குறித்த நபர்களை கூட்டிச் செல்லுமாறு கூறியதையடுத்தே முகவர்கள் கல்முனை பஸ் நிலையத்துக்கு வந்தபோது அவர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## ஹலால் வழங்கும் பணியை விட்டுக் கொடுக்க வேண்டாம்

### கோருகிறார் உலாமா கட்சித் தலைவர்

மட்டக்களப்பு,பெப்.21

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா ஹலால் சான்றிதழ் வழங்கும் பணியை விட்டுவிடக்கூடாது என்று உலாமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த விடயத்தில் உலாமா சபை தொடர்ந்தும் உறுதியான நிலைப்பாட்டில் இருக்க வேண்டும்.

சிங்கள இனவாதிகளின் அழுத்தம் காரணமாக ஹலால் சான்றிதழ் வழங்குதலை வாபஸ் பெற்றால், பின்னர் தாடி வைத்தல், பெண்களின் பர்தா என அனைத்தையும் தடைசெய்யக் கோருவர்.

ஹலால் சான்றிதழ் எந்த வகையிலும் சிங்கள மக்களுக்குப் பாதகமானதாக இல்லை என்பது நாடறிந்த விடயம். அவர்களின் பாற்சோற்றுக்கு உலமா சபையால் ஹலால் சான்றிதழ் வழங்கப்படுவதில்லை.

சிங்கள புதுவருடத்தின் போது முஸ்லிம்களின் எந்தப் பொருளும் தமக்கு வந்து சேரக்கூடாது என்பதில் இவர்கள் உண்மையாளர்களாக இருந்தால், அவர்கள் பாவிக்கும் மின்சாரம், வாகனம் என்பனவற்றுக்கான டீசலும் பெரும்பாலும் முஸ்லிம் நாடுகளிலிருந்தே வருகின்றன. எனவே அதனை முடியுமானால் அவர்கள் தவிர்த்துக் காட்டட்டும்.

ஓர் இனத்துக்கெதிராக மிக மோசமாக கருத்துகள் பகிரங்கமாக முன்வைக்கப்படும்போது அதனை அரசு பார்த்துக்கொண்டிருப்பதும் வியப்பாக உள்ளது.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

### இயற்கை இடர்கள் ஏற்படும் போது

## விசேட அமர்வைக் கூட்டுவதற்கு கிழக்கு மாகாண சபை அங்கீகாரம்

திருகோணமலை,பெப்.21

கிழக்கு மாகாணத்தில் இயற்கை இடர்கள் ஏற்படும் போது விசேட தேவை கருதி மாகாணசபையில் விசேட அமர்வை கூட்டுவதற்கு கிழக்கு மாகாண சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

**அமைச்சர் உதுமா லெப்பையால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணைக்கே சபை ஏகமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.**

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பையால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணைக்கே சபை ஏகமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த மாதாந்த அமர்வின் போது தனிநபர் பிரேரணை சம்பந்தமான குழுநிலை விவாதம் இடம்பெற்றது.

மாகாணத்தில் இடர்கள் ஏற்படும்போது விசேட தேவை எனக் கருதி , மாகாணசபையின் தலைவியின் அனுமதியோடு விசேட சபை அமர்வை கூட்டுதல் வேண்டும் என்ற பிரேரணையை அமைச்சர் உதுமாலெப்பை சமர்ப்பித்தார்.

அந்தப் பிரேரணையே சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மாகாண சபை ஆரம்பித்து நான்கு வருடங்கள் சென்ற போதிலும் முதன் முறையாக இவ்வாறான ஒரு பிரேரணையை அமைச்சர் உதுமாலெப்பை கொண்டு வந்தது மிகவும் வரவேற்கத்தக்கது என்று பிரேரணைக்கு ஆதரவளித்து பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் குறிப்பிட்டார். (ச)

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

உங்கள் வீடுகளில் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றிலிருந்து மீண்டும் புதிய பொருள்கள் செய்து தரப்படும்.
உடைந்த கழிவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படும்.

Tel: 021 222 8680, 0775925088, 0750407430

மீள்சுழற்சி

# முதலாம் ஆண்டு நினைவு கூரல்



## அமரர் முத்தையா கதிராசிப்பிள்ளை

**தோற்றம் – 12.07.1934 மறைவு – 04.03.2012**

திதி: ஏகாதசி (21.02.2013)

ஆண்டொன்று ஆனதம்மா ஆறாது உம் துயரம்
ஓராண்டு சென்றாலும் ஓயாது உங்கள் நினைவு– என்றுமே
ஒற்றுமையின் சிகரமாக நீங்கள் ஒன்றாக எம்முடன் வாழ்ந்தீர்கள்
அன்போடு அன்னையாய் எம்மை அரவணைத்து
ஆசையுடன் வளர்த்தெடுத்தீர்கள் பாசத்தின் கயிறுகளாக– நாங்கள்
பாதியிலே எம்மை விட்டு போனீர்கள் உள்ளம் தேடுது உங்களை
உறவுகள் பலருடன் தேடுகின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (21.02.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடை பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(33589)(5.6)

பிரிவால் தவிக்கும்
குடும்பத்தினர்.

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட ப.நோ.கூ. சங்கங்கள், ஏனைய வர்த்தக நிலையங்கள், சந்தை வியாபாரிகள் ஆகியோர் பயன்படுத்தும் நிலுவை, அளவை, நிறுக்கும் கருவிகள் என்பவற்றுக்கு இன்று வியாழக்கிழமை முதல் கீழ் குறிப்பிடப்படும் விலைப்படி பரிசோதகர்களால் பரிசோதனை செய்யப்பட்டு முத்திரையிட்டு கொடுக்கப்படுமென தவிசாளர் அ.ஜெபநேசன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று முதல் 22 ஆம், 26 ஆம், 28 ஆம் திகதிகளில் காலை 9. மணி முதல் மானிப்பாய் பட்டிணம் கிராம உப அலுவலகத்துக்குட்பட்டவர்களுக்கு பிரதேச சபையிலும், அடுத்த மாதம் முதலாம் திகதி பண்டத்தரிப்பு பட்டிணம் கிராமத்துக்கு உட்பட்டவர்களுக்கும் இந்தப் பணி நடைபெறும்.

(த-100)

# மரண அறிவித்தல்

## கதிரேசு ஞானநாதன்

(காணி உத்தியோகத்தர்–தம்பலகாமம் பிரதேச செயலகம்)



சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்,இல.16,மாணிக்க வாசகர் வீதி திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு ஞானநாதன் 18.02.2013 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கதிரேசு மற்றும் வள்ளியம்மாள் தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா -பாக்கியவதி தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி ஷாமினி (முகாமை உதவியாளர், பிராந்திய ஆணையாளர் அலுவலகம்-திருகோணமலை)அவர்களின் பாசமிகு கணவரும், தனுஷன், டிலக்ஷ்மி,அருண்பிரியன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,பத்மாவதி(ஆசிரியை,சாவகச்சேரி மகளிர் கல்லூரி), தேவகி, குகஆனந்தன்(நீதிமன்றம்-ஊர்காவற்றுறை),வாணி(ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி),மாதவன்(நோர்வே), ஞானசம்பந்தன்(சுவீடன்) ஆகியோரின் பாசமிகு அண்ணனும், நாகரத்தினம், (ஓய்வுபெற்ற சேவைக்கால ஆலோசகர்-விஞ்ஞானம்), வசந்தன், சாந்தினி, முகுந்தன், பிரசாந்தன் (கனடா),சுகந்தன்,இந்திரகுமார்(இ.போ.ச.கோண்டாவில் சாலை),பகீரதி(ஆசிரியை, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), ஆஸ்திரி(நோர்வே),சௌமினி(சுவீடன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,தேஜா(ஆசிரியை,யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கிருபாவதி,சுகிர்தா,வதனி,முரளிதரன்(பொறியியலாளரா்-ஆஸ்திரேலியா), ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், கார்த்திகன், தனுசிகன், சரணிகன் ஆகியோரின் மாமனாரும்,மீரா,பத்மா, நரேன், தேயா, கோபிகா, ஹம்சிகா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(21.02.2013) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் சங்கத்தானை இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருங்குளம் சங்கத்தானை வீதி,
சங்கத்தானை,சாவகச்சேரி.

(சி/4999)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல்-2015

வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்கு முகாமைத்துவ சேவைகள் நிறுவனத்தால் 01.01.2013இல் அனுமதிக்கப்பட்ட ஆளனி விவரங்களுக்கு அமைவாகவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் NP/05/01/GE6/UNS/RQ இலக்க 08.02.2013ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களை உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமை உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கும் உரித்துடையதும் ஆகும்.
2. ஊழியர் விதவைகள்/ தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் 03 வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதமான நியமங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர்வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்க பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மூலம் உறுதப்படத்தப்படல் வேண்டும் )

04. தொழிநுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும், மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிரத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

அரசாங்க சேவை மகாண ஆனைக்குழுவினால் அனுமதியளிகப்பட்ட நேர்முகப்பரீட்சை சபையினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதுடன் தகமைகளும் பரிசீலிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

01. வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா 100.00செலுத்தியவிண்ணப்பப்படிவத்தை பெற்று. பூரணப்படுத்தி தகமைகளுக்கு ஆதாரமான சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
02. விண்ணபப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு செயலாளர், வலிகாமம்தெற்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகம், கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், இலக்கம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
05. ஆள் சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னராகவோ, முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத் தெரியவரும் எச் சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 07.03.2013**

**பதவிகள்:**

1) காரியாலய காரிய சகாயர் பதவி (வெற்றிடம் - 3)
நூலக பரிசாரகர் பதவி (வெற்றிடம் - 1)
வேலை/ வெளிக்களத் தொழிலாளி பதவி (வெற்றிடம் - 7)
சுகாதாரத் தொழிலாளி பதவி (வெற்றிடம் - 8)

**கல்வித் தகைமை:**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/ சிங்களம் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:**

24.08.2007 ஆம்திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 (IV)இற்கமைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் (11730-120.10-130✱10-145✱10-160✱12-17600) PL-1-2006-A

**02)மின்னிணைப்பாளர் (பதவி வெற்றிடம் 1)**

**கல்வித்தகைமை**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ் அல்லது சிங்களம் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தொழில்சார் தகைமை:**

இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதித் திகதி அன்று 6 மாதங்களுக்குக் குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். தேவை ஏற்படின தொழில் தகைமை பரிசீலிக்கப்படும்.

**மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**

24.08.2007ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 (IV)இற்கமைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் (12210-130✱10-145✱10-160-10-170✱12-18600) PL-2 -2006-A

**03)ஆயுர்வேத மருந்தாளர் பதவி (டிஸ்பென்சர்) (வெற்றிடம் 01)**

**கல்வித் தகைமை:**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ் அல்லது சிங்களம் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தொழில்சார் தகைமை:**

இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதித் திகதி அன்று 6 மாதங்களுக்குக் குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். தேவை ஏற்படின தொழில் தகைமை பரிசீலிக்கப்படும்.

**மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**

24.08.2007ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 (IV)இற்கமைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் (12210-130✱10-145✱10-160-10-170✱12-18600) PL-2-2006-A

**04)சாரதி (வெற்றிடம் 03)**

**கல்வித் தகைமை:**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ் அல்லது சிங்களம் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள்**

1 விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/ தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்குக் குறையாத பார ஊர்தி செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப் பத்திரத்தை விண்ணப்ப இறுதித்திகதிக்கு மூன்று வருடத்திற்கு முன் பெற்றிருத்தல் வேண்டும்.
2 மோட்டார் வாகன சாரதியாக 3 வருட அனுபவத்திற்கான சான்றிதழ்.
3 விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 5 அடி, 2½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4 விண்ணப்பதாரி இரவு பகல் என்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன், சிறந்த கண் பார்வையைக் கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5 பெருந்தெருக்கள் விதிமுறைகள் பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**

24.08.2007ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 (IV)இற்கமைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் (12470-130✱10-145✱10-160-10-170✱12-18600) PL-3-2006-A

**திருமதி. சுலோச்சனா முருகநேசன்,**
**செயலாளர், வலி.தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

# மாற்றாதே உன் பயணங்களை.....




உயிரோடு உறைந்து
போகின்றேன்
உன் நினைவுகளால்.....
நீண்ட காலம்
நீயும் நானும்
சேர்ந்து வாழ
உடல் தாண்டி
வேறு பல விடயங்களும்
இருக்கின்றன
உடல் கொண்ட
உறவைத் தாண்டி
உளம் கொண்ட
உறவிற்காய் நீண்ட தூரம்
பயணித்து
பிரயாணங்களை
மாற்றுகிறேன்
நான் பிரயாணங்களை
மாற்றும் பொழுதுகளில்
நீயும் உனது
பேருந்துகளை
மாற்றிக் கொள்கிறாய்.......

*ஜெயராம், அல்வாய்த்திடல்.*



# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே...



மனிதகுலம் தோன்றிய காலத்திலிருந்து மனித நாகரிகமும் சமாந்தர வளர்ச்சி பெற்று வந்திருக்கின்றது.

அந்த வகையில் இன்று நாகரிக வளர்ச்சி அபரிதமான அதி உச்சக் கட்டத்தினை அடைந்துள்ளது. இந்த நிலையில் நோக்கின் நவநாகரிகத்தினை அதிகம் நாடிச் செல்வது பெண்களே. இவர்கள் நவநாகரிக மோகத்தில் மூழ்கித் தத்தளிப்பதுடன், இன்றைய பெண்கள் படும்பாடும், அதனால் கெடும்கேடுகளும் வெறும் வார்த்தைகளால் கூறிவிட முடியாதவை.

நவநாகரிகம் என்ற போர்வையில் இன்றைய பெண்களின் நிலைமை அந்தோ பரிதாபம். நவநாகரிக நங்கைகள் நாகரிகத்தின் பால் ஈர்க்கப்பட்டு, தமது வரைமுறைகளையெல்லாம் கடந்து படும் பாடுகளைப் பற்றி நாம் சற்றுச் சிந்திக்க வேண்டியுள்ளது.

நாளுக்குநாள் உலக சந்தையை அலங்கரிக்கும் அழகு சாதன உற்பத்திப் பொருள்களின் பிரதான சந்தை இலக்காக குறிவைக்கப்படுபவர்கள் பெருமளவில் பெண்களே. அதன் வழி இன்றைய நாகரிக நங்கைகளும் இத்தகைய அழகு சாதனங்களின் அடிமைகளாகிவிட்டமை யாவரும் அறிந்ததே.

நவநாகரிகம் என்ற மாயையினுள் மூழ்கிப்போன இன்றைய பெண்களுடன் சீர்தூக்கி நோக்குமிடத்து அன்றைய காலத்துப் பெண்கள் பெருமளவில் கலாசாரத்துக்கு கட்டுப்பட்டவர்களாகவும், தமது பண்பாட்டைப் பேணிப் பாதுகாத்தவர்களாகவும் விளங்கிய போதிலும், நவீனத்துவ நங்கைகளின் மத்தியில் அத்தகைய பண்பாட்டு விழுமியப் பண்புகளை காண்பதென்பது அரிதாகி விட்டது.

இதனால் தான் எமது கலாசார உடைகளுக்கு மவுசு குறைந்து பக்தி நெறியுடன் பண்பாட்டையும் பேணும் ஆலயங்களிலும் கூட இன்று நாகரிக உடைகளை அணிந்து செல்ல தலைப்பட்டுவிட்டனர் இன்றைய பெண்கள் என்பது வேதனை தரும் விடயமாகும்.

இங்கு கவலைக்கிடமான விடயம் என்னவென்றால், இரசாயன வேதிகள் நிறைந்த முகப் பூச்சுக்களால் எதிர்காலத்தில் ஏற்படும் பாதகமான பக்க விளைவுகள் ஏராளம் என்பதை எண்ண மறுக்கின்றனர் இன்றைய பெண்கள். கூடவே இவ்வாறான பூச்சுக்கள் இயற்கையான முக அழகை மறைப்பதுடன், சிலருக்கு ஒவ்வாமை காரணமாக தோல் சார்ந்த பல்வேறு வியாதிகளும் தொற்றிக் கொள்வதுடன், எமது மூச்சுக்கே முற்றுப்புள்ளி வைக்கும் வலிமை இத்தகைய முகப்பூச்சுக்களுக்கு உண்டென்பது யதார்த்த பூர்வமான உண்மை. இதற்கு சான்று பகரும் சில உண்மைச் சம்பவங்கள் கூட நடந்தேறியுள்ளமை ஊடகங்கள் வாயிலாக யாமறிந்தவையே.

முடி ஒப்பனை என்ற பெயரில் தமது எண்ணத்திற்கு ஏற்ப தலைமுடியை அழகு என்ற பெயரில் அலங்கோலம் செய்யும் பெண்கள் நாகரிக மோகத்தினால் இயற்கையின் நியதிகளையே மாற்றி விடும் போக்கில் மூப்பின் அடையாளமான நரையினையே முடிப்பூச்சுக்களின் உதவியுடன் மூடி மறைத்து போலி வேடம் புனைகிறார்கள். இந்த நிலைப்பாட்டில் ஆண்களை விஞ்சி விடுகின்றனர் பெண்கள்.

நவநாகரிகம் என்ற போர்வையில் இன்றைய பெண்களிடத்தில் ஆடைக்குறைப்புக்களோ தாராளம். அதனால் ஆபத்துக்களோ ஏராளம் என்ற நிலைப்பாட்டை நீக்கவும், நாகரிக மோகத்தில் இயற்கை அழகினைக் குறைக்கும் முகப்பூச்சு, நகப்பூச்சு, உதட்டுப் பூச்சு மற்றும் முடிப்பூச்சு என்ற பூச்சுக்கள் பூசுவதிலேயே முழுமூச்சாக களமிறங்கிவிட்ட இன்றைய பெண்கள் தமது இல்லக் கடமைகளிலும், அலுவலகக் கடமைகளிலும் கடமை தவறாதவர்களாகவும் பாரதி கண்ட புதுமைப் பெண்களாகப் பார் போற்ற வாழவும் ஒருதலைப்பட்டு ஒன்றிணைய வேண்டும்.

*மரியநாயகம் கேசவன், 14/8, உருத்திரபுரம், கிழக்கு, கிளிநொச்சி.*



# விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :-..........................................................

..........................................................

.......................... திகதி


.......................... கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# சிந்தனைத் துளிகள்.

★ கோபத்தால் சாதிப்பதை விட பொறுமையால் ஒருவன் அதிகம் சாதிக்கின்றான்.
★ உன் நண்பனை ரகசியமாக திருத்து; வெளிப்படையாக புகழ்.
★ நாளைக்கு மனம் வருந்தும்படி இன்றைக்கு எதையும் செய்து விடாதே.
★ இரு இதயங்கள் இணைந்தால் வைக்கோல் கொட்டிலும் அரண்மனை ஆகும்.
★ சிறிய உதவிகளை மறக்காதே; ஆனால் சிறிய தவறுகளை மறந்து விடு.
★ பல திசைகளில் ஓடும் மனதை வைராக்கியத்தால் ஒரு முகப்படுத்த முடியும்.
★ நன்றி விசுவாசத்துடன் நடந்து கொண்டால் ஆண்டவன் ஆசி நிச்சயம் கிட்டும்.
★ பிறருக்கு நன்மை செய்பவன் தனக்கு நன்மையைத் தேடிக் கொள்கின்றான்.
★ பிறருக்காக உழையுங்கள்; பிறர் உழைப்பை எதிர்பார்க்காதீர்கள்.
★ தன்னம்பிக்கை தான் வெற்றிப் பாதையின் முதல் படிக்கட்டு.

*துவாரகா, கைதடி*



# நம்புவது எப்படி ?

காதலித்தேன் - ஆனாலும்
கஷ்டம் ஒன்று வந்தவேளை
கவனியாது சென்றனரே - என்
கண்மணியாயிருந்த தோழமைகள்...

கண்ட கண்ட இடங்கள் தான்
கதியென்று களித்த - நான்
கண்டு கொள்ளவில்லை - எனை விட்டு
கடிதில் இவர் பிரிந்திடுவர் என்று...

கண்ணிமை போல் பார்த்திருந்தேன்
கண்ணியமாய் துணையிருந்தேன்
காலை வாரிச் சென்றனரே - எனக்கு
கண்ணீர் மழையைத் தந்தனரே....

கவலையில் நானிருக்க
கழற்றிவிட்டுச் சென்றவர்கள் - நான்
கடுகளவு உயர்ந்ததுமே
காரியமாய் வருகின்றாரே...

*ம. கிருத்திகா, வல்வெட்டித்துறை.*



# யாழ்ப்பாணத்தில் இருப்பவர்கள் வேடிக்கை பார்க்கும் பொலிஸார்

## சாடுகிறார் மனோ கணேசன்

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் வேடிக்கை பார்க்க மட்டுமே உள்ளனர். இவர்கள் இலங்கைப் பொலிஸார் இல்லை. சிரிப்புப் பொலிஸ் தான் இவர்கள்.

யாழ்ப்பாணத்தின் சகல அரசியல், நிர்வாக, பாதுகாப்பு அதிகாரங்களையும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவே வைத்திருக்கிறார்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தைப் பிரித்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் இயக்கத்தினரால் கொழும்பில் நேற்று புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

தெல்லிப்பழையில் மக்கள் நடத்திய அமைதி உண்ணாவிரதப் போராட்டத்தில் குழப்பம் விளைவித்தவர்களின் படங்கள், சம்பவம் இடம்பெற்றுச் சிறிது நேரத்திலேயே உலகம் முழுக்க இணையத்தளம் மூலம் காட்சிப்படுத்தப்பட்டன. இன்று அப்படி எதுவும் நடக்கவில்லை, அந்தப் படங்கள் தொழில்நுட்பத்தால் தயாரிக்கப்பட்ட படங்கள் என்று அரசு கூறுகின்றது.

இதேவேளை உலகம் முழுக்க காட்சிப்படுத்தப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் சம்பந்தப்பட்ட படங்களையும் தொழில்நுட்பத்தால் தயாரிக்கப்பட்ட படங்கள் என்று இதே அரசு தான் கூறுகின்றது.

தெல்லிப்பழையிலும், ஜெனிவாவிலும் ஒரே கதையைச் சொல்லி, உலகத்தின் முன்னால் சிரிப்பாய் சிரிக்கும் நிலைமையில், பொய் சொல்லக்கூடத் தெரியாமல் இந்த அரசு தலைகுனிந்து நிற்கின்றது.

தெல்லிப்பழையில் குழப்பம் விளைவித்தவர்கள் பயங்கரவாதிகள். அவர்களைப் பிடித்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்தே பொலிஸில் ஒப்படைத்தனர். அதனைக் கொழும்பிலிருந்து அப்படி எதுவுமே நடைபெறவில்லை என்கிறார்கள். அரசு மேற்படி பயங்கரவாதிகளைக் காப்பாற்ற முனைவதால் அன்று பிடிபட்டவர்கள் அரச பயங்கரவாதிகளே!

யாழ்ப்பாணத்தில் பொலிஸாருக்கு வேலையில்லை. பித்தளை பட்டன்களுடன் சீருடை அணிந்து, தொப்பி போட்டு, கை கட்டி நிற்கின்றார்கள். இங்கு அனைத்து அரசியல், நிர்வாக, பாதுகாப்பு அதிகாரங்களையும் யாழ். கட்டளை அதிகாரி ஹத்துருசிங்க தன் கையில் வைத்திருக்கின்றார். பொலிஸாரால் வேடிக்கை பார்க்க மட்டுமே முடியும். எனவே இவர்கள் இலங்கைப் பொலிஸ் இல்லை. சிரிப்புப் பொலிஸ்தான் இவர்கள்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கூட்டங்களில் வந்து யார் என்ன பேசினார்கள் என்பதையும் மக்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்தும் தங்கள் எஜமான்களுக்குச் சொல்லட்டும். இதைப்பற்றிக் கவலையில்லை.

இராணுவப் புலனாய்வாளர்கள் கூட்டங்களைக் குழப்ப முடியாது. அது அரசியல்வாதிகள் சொல்லிச் செய்விக்கும் வேலை. இப்படிச் செய்தால் நாங்கள் அம்பலப்படுத்துவோம். யாழ்ப்பாணத்திலுள்ள அப்பாவி மக்களை மிரட்டுவதுபோல் எங்களை மிரட்ட நினைக்க வேண்டாம்.

சம்பந்தனும், மனோ கணேசனும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி தமிழ் மக்களின் பிரச்சினைகளைச் சொல்லும்போது அதனைப் பொய் என்று கூறினார்கள்.

ஆனால் இன்று எதிர்க்கட்சித் தலைவரின் பயணத்தால் யாழில் என்ன நடக்கின்றது என்பதை உலகமே அறிந்துவிட்டது. நாம் சகல இடங்களுக்கும் சென்று உண்மைகளை வெளிக்கொண்டு வருவோம்.

பலாலியில் தமிழ் மக்கள், இராணுவ முகாமை முற்றாக அகற்றக் கோரவில்லையே! விமான நிலையம், விமானப் படைத்தளம், துறைமுகம் என்பன இருக்க, மக்களின் வளமான தோட்டம் செய்யும் நிலங்களை அவர்களிடம் மீண்டும் கையளிக்கலாம் தானே.

இன்று போர் இல்லை. புலிகளும் இல்லை. புலிகளின் எறிகணைகளும் இல்லை. ஏன் இன்னமும் மக்களின் நிலங்களைப் பிடித்து வைத்திருக்கின்றீர்கள் - என்றார். (த-5)

### வீட்டுடன் காணி மலிவு விற்பனைக்கு

நல்லூர் மூத்தவிநாயகர் வீதி 133 ஆம் இலக்கத்தில் (பழைய வளவு) 05 பரப்பு காணி பகுதியாகவும் கொடுக்கப்படும்.

தரகர் தேவையில்லை.

தொ.பே:0755109327,0778323526

(33662)(3.0.7)

### கண்ணீர்அஞ்சலி

மன்ற உறுப்பினரும், சேமிப்புத்திட்ட உறுப்பினருமான

சி.அம்பிகாபாலகரன் (உரிமையாளர் நியூ மல்ரி சென்ரர்- சாவகச்சேரி)

அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி சின்னத்தம்பி ஞானமலர்

அவர்கள் நேற்று (20.02.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் மறைவுக்கு மன்றத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

(C/9209)(6.11)

### தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் வ.து பதிவிலக்கம்.ஜே/1013

### வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

2013.03.03 ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 2013.03.17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் கூட்டுறவு வைத்தியசாலையில் நடைபெறும். பிரேரணைகளை 2013.03.01 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

சு.கணேசமூர்த்தி, தலைவர். சு.ஏழூர்நாயகம், செயலாளர்.

கூட்டுறவு வைத்தியசாலை தூர்க்காபுரம், தெல்லிப்பழை.

(33652)(6.11)

### மாடுகள் விற்பனைக்கு

இரு நாம்பன் மாடுகளும், இரு பசு மாடுகளும் விற்பனைக்குண்டு.

தொ.பே: 0770219888

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் இல. 401, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள புதிய கடைகள் வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொ.பே- 0772100909, 0778445932

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, சிவன் அம்மன் கோயிலுக்கு அண்மையில் உள்ள 1¼ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொ.பே: 0778785928

### வாகனம் விற்பனைக்கு

PR-xxxx தொடரிலக்கமுடைய TATA XENON single cap நிறம்:-கருநீலம் உடன் விற்பனைக்குண்டு.

தொ.பே:-077-4055003

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

"ரத்ன வில்லா", பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் நாச்சிமார் கோயிலுக்கு அருகில் வீட்டுடன் கூடிய 13/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொ.பே:0776154069/0716032872

(33706)

### அறை வாடகைக்கு தேவை

அரச பணிபுரியும் ஊழியர் ஒருவர் தங்குவதற்கு யாழ்.நகரப்பகுதிக்குள் அறை வாடகைக்குத் தேவை.

தொ.பே:0719021063

Diploma in Pharmacy

Leading To Bsc Pharmacy

2 Years Course

CMCC Syllabus

Full Practical

Addmissions Open

Monthly Rs.3000/= ONLY

*Initial Payment Rs.20000/

உடனடி வேலை வாய்ப்பு!!

Visalam Wide and Beyond

Visalam MINDS

127/1 Temple Road Jaffna

021 221 9695 075 979 9695

## மரண அறிவித்தல்கள்

### கணவதிப்பிள்ளை கறுவல்தம்பி

(இளைப்பாறிய கிராமசேவையாளர், வடமராட்சி கிழக்கு)



வெற்றிலைக்கேணி முள்ளியானைப் பிறப்பிடமாகவும், நெல்லியடி கரவெட்டியைப் வசிப்பிடமாகவும் கொண்ட கணவதிப்பிள்ளை கறுவல்தம்பி (இளைப்பாறிய கிராம சேவையாளர், வடமராட்சி கிழக்கு) நேற்று முன்தினம் (19.02.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மா (பூமணி)யின் அன்புக் கணவரும், உமாபதி, ஜங்கரநாதன், பாமலோஜினி, வாமதேவன், வித்தியாரஞ்சினி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற வடிவேல்கரசன், ஆகியோரின் அன்புத் தந்தையும், அல்பிரட், சிவாநந்தன், பிரதிஸ்குமார், பேபாயினி, சோபாயினி, வளர்மதி ஆகியோரின் அன்பு மாமனும், சாள்பன், சௌமியா, கலக்சன், கிருத்திகா, பிலக்சி, அனிந்திரை ஆகியோரின் பேரனும், இராசையா, பேரின்பநாயகம், ஞானவேல் ஆகியோரின் சகலனும், இளையபிள்ளை, வைத்திலிங்கம், நாகராசா, தங்கமணி, கலைவாணி ஆகியோரின் மைத்துனரும், உதயராணி, ஜெயந்தினி, இலச்சுமிப்பிள்ளை, அபிராமிப்பிள்ளை, வடிவேலு ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரணவாய்,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

### முருகேசு சிவகாமி



கரவெட்டி வடக்கு, கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி முருகேசு சிவகாமி நேற்று (20.02.2013) புதன்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், கந்தசாமி (விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம்), தவமணி, ஈஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், வசந்தா (ஆசிரியை, கரணவாய் வேதாரேணியேஸ்வர வித்தியாலயம்), இரத்தினசிங்கம் (இலங்கை மின்சாரசபை, நெல்லியடி), சற்குருநாதன் (ஈஸ்வரி அரிசிஆலை, சம்பந்தர்கடை), Dr.கேதீஸ்வரன் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்), பாஸ்கரி, சுப்பிரமணியம் (விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம்), சரோஜினி ஆகியோரின் பாசமிகு மாமியும், உமாசசிரேகா-கோகிலன், உமாகரன், வினோஜா, ஜனனி, ஜசீதன், ஜசீதா, தமிழினி, கௌதமன், திலக்ஷன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பவிஷனனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2013) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
மு.கந்தசாமி (மகன்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்மா சோமசுந்தரம்

கோவளம், காரைநகரைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்மா சோமசுந்தரம் நேற்று (20.02.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் தெய்வானைப்பிள்ளை தம்பதியின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னக்குட்டி தம்பதியின் மருமகளும் விக்கினேஸ்வரன் J.P (ஓய்வு நிலை கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர், காரைநகர் பிரிவு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர்), விஜயசரோஜினி தேவி (பத்தினியார் மகிழங்குளம்), விஜயசுந்தரம் (V.V. இராமநாதன் கம்பனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பலீலாவதி, முருகேசு, பத்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் தயாளினி, தயாபரன், அருளினி, அருட்செல்வி, நாகசுந்தரி, நந்தினி, நந்தகுமரன், துளசி, கஸ்தூரி, சுதாகரன் ஆகியோரின் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.02.2013) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல.123, 4ஆம் ஒழுங்கை, தேக்காவத்தை, வெள்ளவத்தையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### ச.வல்லபை கணேசன்

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சென்னை, இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ச.வல்லபை கணேசன் 12.02.2013 அன்று சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மு.சதாசிவம் (முன்னாள் அதிபர், சரஸ்வதி மகாவித்தியாலயம், அராலி) - வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும், திருமதிகளான முருகேசு- ஞானம்மா, செல்லத்துரை - தங்கமுத்து, நாகேசு - நாகம்மா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், கலாநிதி க.சிதம்பரநாதன் (குமார்), க.விமலநாதன், க.கணநாதன், க.கமலநாதன், க.ஜெயநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.02.2013 அன்று சென்னையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலாநிதி க.சிதம்பரநாதன் (குமார்) 0773146188,
மு.கணேசு 0776184777

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(33588) (2.6.)

### திருமதி ஞானமலர் சின்னத்தம்பி



ஐயனார் கோயிலடி, கன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஞானமலர் நேற்று (20.02.2013) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் இரத்தினம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீ.சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும் பிரபாகரன், அரிகரன், அம்பிகைபாலகரன் (நியூமல்ரி சென்ரர், சாவகச்சேரி), துஷ்யந்தி, தமயந்தி (ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தாயும் ராகினி, சிவாநந்தினி (மு/பாண்டியன்குளம் ம.வி.), பிறேம்குமார் ஆகியோரின் மாமியும் சிவமலர் (லண்டன்), அருந்ததி (பிரான்ஸ்), சந்திரமலர், சிவகுமாரி, பாலகௌரி (கனடா), பால சரஸ்வதி, முருகதாசன், கண்ணதாசன் (கண்ணதாசன் பாமசி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஐயனார் கோயிலடி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# நிரந்தர வீடுகள் கிடைக்காமையால் சிரமத்துக்கு உள்ளாகும் குடும்பங்கள்

*நெளுக்குளம்,பெப்.21*

*ஓமந்தையை அண்மித்துள்ள கிராமங்களில் வசித்து வரும் மக்கள் நிரந்தர வீடுகள் வழங்கப்படாததால் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

இங்குள்ள நாவற்குளம் கிராமத்தில் 65 குடும்பங்களும், மருதங்குளத்தில் 20குடும்பங்களும், நாம்பன் குளத்தில் 40 குடும்பங்களும், இளமருதங்குளத்தில் 50 குடும்பங்களும், அலைகல்லுப்போட்ட குளத்தில் 40 குடும்பங்களும், நொச்சிக்குளத்தில் 35 குடும்பங்களும், மாளிகைக் கிராமத்தில் 60 குடும்பங்களும், அரசன் குளத்தில் 60 குடும்பங்களும் நிரந்தர வீடுகள் வழங்கப்படாததால் அவலங்களுடன் வாழ்ந்து வருகின்றன.

போர் இடம்பெற்ற போது இடம்பெயர்ந்த இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 2010 ஆம் ஆண்டு மீள்குடியமர்ந்தனர். இவர்கள் மீள்குடியமர்ந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் நிரந்தர வீட்டுத் திட்டங்கள் இவர்களுக்கு வழங்கப்படாத நிலையே காணப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

தற்காலிகக் கொட்டகைகளில் வசித்து வரும் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மழை மற்றும் வெயில் காலங்களில் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இங்கு அண்மையில் பெய்த பெரு மழை காரணமாக இவர்களின் தற்காலிக வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

வீட்டுத் திட்ட நடவடிக்கைகளில் தாம் தொடர்ந்து திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதாகவும் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கென நிரந்தரமாக கிராம அலுவலர் இல்லாமை பெரிய குறைபாடாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## மரங்களை வெட்டுவோர் மீது கடுமையான நடவடிக்கை

### புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அறிவிப்பு

புதுக்குடியிருப்பு,பெப்.21

புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள காடுகளில் சட்ட விரோதமாக மரங்களை வெட்டுவோர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

கடந்த காலங்களில் பாதுகாக்கப்பட்டு வந்த காடுகள் தற்போது மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு, ஒட்டுசுட்டான் போன்ற பகுதிகளில் உள்ள காடுகளில் உள்ள மரங்கள் பல்வேறு தேவைகளுக்காக பொதுமக்களால் உரிய அனுமதி பெறப்படாமல் வெட்டப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினால் பல தடவைகள் அறிவித்தல் விடுக்கப்பட்ட போதிலும் அவற்றையும் மீறி மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலகத்தால் விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் மீறி காடுகளை அழிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அறிவித்தல் விடுத்துள்ளது. (க-400)

துணுக்காய்ப் பகுதி கிராமங்களுக்கு ஊடாக

## பஸ்சேவையை நடத்த முன்வந்தால் உடனடியாக வழித்தட அனுமதி

துணுக்காய்,பெப்.21

துணுக்காய்ப் பகுதியில் கிராமங்களுக்கு இடையே பஸ்சேவையை நடத்துவதற்கு முன்வருபவர்களுக்கு வழித்தட அனுமதி வழங்கப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முல்லைத்தீவு அரச அதிபர் ந.வேதநாயகன்.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் வாழுகின்ற மக்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருவதை நான் நன்கு அறிவேன். ஆனால் இந்தப் பகுதிகளில் பஸ் சேவைகளை நடத்துவதற்கு பஸ் உரிமையாளர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். பஸ் உரிமையாளர்கள் சேவைகளை நடத்துவதற்கு முன் வருவார்களாயின் அவர்களுக்கு உடனடியாகவே வழித்தட அனுமதி வழங்கப்படும் என்றும் அரச அதிபர் துணுக்காயிலுள்ள அம்பலப்பெருமாள் குளம், கோட்டை கட்டியகுளம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், தென்னியன்குளம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் அவதிப்படுகின்றனர்.

மேலும் தெரிவித்தார்.

துணுக்காயிலுள்ள அம்பலப்பெருமாள்குளம், கோட்டை கட்டியகுளம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், தென்னியன்குளம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)



*பூநகரியில் கடந்த 18 ஆம் திகதி இராணுவ தண்ணீர் பவுஸர் மோதியதில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நிகழ்ந்த இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் விசாரணைகளை மேற்கொள்கின்றார். (க-6)*

அக்கராயனுக்குச் சென்று

## பாடசாலை கட்டட வேலைகளை கல்விப் பணிப்பாளர் நேரில் ஆய்வு

*அக்கராயன்,பெப்.21*

*அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் இடம்பெறும் கட்டட வேலைகளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.*

*கிளிநொச்சி கல்வி வலயத்தில் புதிய ஆரம்பப் பாடசாலையாக அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் அமைந்துள்ளது.*

*சேவாலங்கா மற்றும் யுனிசெப் நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் தற்போது கட்டட வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையிலான குழுவினர் இந்தக் கட்டட வேலைகளைப் பார்வையிட்டு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர். மேலும் புதிய கட்டடத்தில் பாடசாலை நடத்துவதற்கான முயற்சிகளை முடுக்கி விடுமாறும் இந்தக் குழுவினரால் அறிவுறுத்தப்பட்டது.*

*இதன் போது பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளால் சில கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. பாடசாலைக் காணியில் உள்ள குடும்பங்களை அகற்றுதல் குடிதண்ணீர் நெருக்கடியைப் போக்குதல் உட்பட பல்வேறு தேவைகளை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் இவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (க-18)*

## பிராந்திய அலுவலகம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு

கிளிநொச்சி,பெப்.21

கிளிநொச்சியில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் 23மில்லியன் ரூபா நிதி உதவியுடன் கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் அமைக்கப்பட்ட பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அலுவலகம் கடந்த 15 ஆம் திகதி கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனா ரத்னவினால் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நன்னீர் மீன்பிடித்துறையில் ஈடுபடும் 13 கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளிடம் 20 லட்சம் ரூபா பெறுமதியான சிறிய வள்ளம், வலை ஆகிய கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டதாக கடற்றொழில் திணைக்களத்தைச் சேர்ந்த செ.சலீபன் தெரிவித்தார். (க-13)

## தொடரும் கல் அகழ்வினால் மண்வளம் பாதிப்புறும் அபாயம்

வவுனியா,பெப்.21

வவுனியாவின் பல்வேறு கிராமங்களிலும் தொடர்ந்து கல் அகழ்வு நடவடிக்கை இடம்பெறுவதால் மண் வளம் பாதிக்கப்படவுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள நாவற்குளம், சின்னக்குளம், மருதோடை, மாணிக்கவளவு ஆகிய இடங்களில் தினமும் பெருமளவு கல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. தினமும் சுமார் 45 க்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்கள் இந்த இடங்களிலிருந்து கல்லை ஏற்றிச் செல்கின்றன.

மேலும் தொடர்ந்து அகழப்படுவதாலும் கல் ஏற்றிச் செல்லும் வாகனங்களின் இரைச்சலாலும் தாம் இடையூறுகளை எதிர்கொள்வதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் விளாத்திக்குளம், அரபாநகர், சிதம்பரபுரம் உட்பட்ட இடங்களிலும்கல் அகழ்வு நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

விளாத்திக்குளம், அரபாநகர், சிதம்பரபுரம் உட்பட்ட இடங்களிலும் கல் அகழ்வு நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கல் அகழ்வினால் மண்ணரிப்பு ஏற்பட்டு பள்ளமான இடங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகளும் பெருமளவில் பெருகிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த நிலை தொடருமாயின் இங்குள்ள மண்வளம் முற்றாகவே பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-402)

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்குக

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி.கோரிக்கை

வவுனியா,பெப்.21

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குரிய இழப்பீடுகளை உடனடியாக அரசு வழங்க வேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்:-

ஆடம்பரச் செலவுகளை குறைத்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு விவசாயிகளுக்கு ஓர் ஏக்கருக்கு குறைந்தது 25 ஆயிரம் ரூபா இழப்பீட்டை ஒரிரு வாரங்களுக்குள் அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையினால் நெற்செய்கை, உழுந்து உட்பட சிறுதானிய பயிர்ச் செய்கைகள் அனைத்தும் முற்றாக அழிவடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபா இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்படுவதுடன் விவசாயிகள், வங்கிகளில் பெற்ற கடன்களின் நிலுவைகள் அனைத்தையும் அரசு இரத்துச் செய்ய வேண்டும்.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்களே நெற்செய்கை, உழுந்து மற்றும் சிறுதானியப் பயிர்ச் செய்கைகளில் அதிகளவில் ஈடுபட்டனர். இதற்கென வங்கிகள், உறவினர்கள், நண்பர்களிடம் அவர்கள் பெருந்தொகை கடன்களை பெற்றிருந்தனர். ஆனால் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையினால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது வாழ வழியின்றியும் பெற்ற கடன்களை மீளக் கொடுக்க முடியாமலும் தவிக்கின்றனர்.

போரினாலும், இயற்கை இடர்களினாலும் பாதிக்கப்பட்ட தமிழ் விவசாயிகளுக்கு அரசு உடனடியாக தனது ஆடம்பரச் செலவுகளை குறைத்து ஓர் ஏக்கருக்கு ஆகக் குறைந்தது 25 ஆயிரம் ரூபாவாவது இழப்பீடாக அடுத்த ஒரிரு வாரங்களுக்குள் வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

### 19 வயதுப் பிரிவு கிரிக்கெட்

# வென்றது ஸ்ரான்லி

யாழ்ப்பாணம்,பெப்.21

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான பிரிவு 3 இற்கான போட்டியொன்றில் ஸ்ரான்லி அணி 44 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஸ்ரான்லி அணியை (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கமைய தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 33.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் மதுஷன் 52 ஓட்டங்களையும், கம்ஷிக்காந், பிரசாந் ஆகியோர் தலா 15 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பாக சோபினாத் 5 இலக்குகளையும், நிமலேந்திரா 4 இலக்குகளையும் வீழ்த்தினர்.

அதன் பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 36.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் அபிராஜ் 40 ஓட்டங்களையும்,ரவிவர்மன் 33 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணிசார்பில் உதய சுபேசன் 3 இலக்குகளையும், மாதவன், கம்ஷிக்காந், விதுர்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

38 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது 2வது இன்னிஸ்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 58.2 பந்துப்பரிமாற்றங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் மதுஸன் 67 ஓட்டங்களையும்,கம்சிகன் 45 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் நிமலேந்திரா 4 இலக்குகளையும், சோபிநாத்.அபிராஜ் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

119 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஸ்ரான்லி அணியின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது 23.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 74 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் சோபினாத் 18 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார்.



விதுர்சன்

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக விதுர்சன் 5 இலக்குகளையும், உதயசுபேசன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

(ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

வதிரி டைமண்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

**பி.ப.4 மணி**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

யாழ்.உதைபந்தாட்டலீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களின் 40 வயதுக்குமேற்பட்ட வீரர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

**பி.ப.3.45 மணி**

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் எதிர் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

இராசேஸ்வரன் மகிதரனின் ஆதரவுடன் யாழ். உதைபந்தாட்டலீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மகிந்தன் வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில்பங்குகொள்ளவுள்ள அணிகள் விவரம் வருமாறு:-

**பி.ப 4.45 மணி**

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் (மஞ்சள்) எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்

★ ★ ★

கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழகம், தென்மராட்சி பிரதேச விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தும் மின்னொளியிலான தாச்சி சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு,

**பி.ப.7.30 மணி**

கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் கைதடி துர்க்கா விநாயகர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி.

(ங-23-228)

# மாவட்ட ஹொக்கி தெரிவுப் போட்டிகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான ஹொக்கிப் போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளன.

தேசிய மட்ட ஹொக்கிப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தொடருக்காக யாழ். மாவட்ட அணிகளைத் தெரிவு செய்யும் வகையிலேயே இந்தப்போட்டிகள் இடம் பெறவுள்ளன.

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள ஹொக்கிப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலை அணிகளை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் உப அதிபரும், போட்டி இணைப்பாளருமான பிரான்சிஸ் சந்திரனை தொடர்பு கொள்ளுமாறு, யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச்சங்கத்தின்செய லாளர் ப.தர்மகுமாரன் அறிவித்துள்ளார்.

இரு இடங்களையும் பெறும் அணிகள் மட்டுமே போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டன. இருந்தபோதிலும் இந்தமுறை யாழ்ப்பாணத்தில் தேசிய மட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளதால் தேசிய மட்டப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவுள்ளன என்றும் செயலாளர் அறிவித்துள்ளார்.

(ங-86)

## எறிபந்து பயிற்சி முகாம் இன்று

வவுனியா,பெப்.2:

வடமாகாணப் பாடசாலைகளிலுள்ள உடற்கல்வி ஆசிரியர்களுக்கான ஏறிபந்துப் பயிற்சி முகாம் இன்று வட்டுக்கோட்டையில் இடம்பெறவுள்ளது.

மூன்று தினங்கள் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள கல்வி வலயங்கள் ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் உடற்கல்வி ஆசிரியர்கள் கலந்துகொள்ள வுள்ளனர்.

(400)

### 'ஸ்ரார் ஒவ் வடமராட்சி' கிரிக்கெட் தொடர்

# அரையிறுதிக்கு முன்னேறியது இமையாணன் இளைஞர் வி.க.



யாழ்ப்பாணம்,பெப்.21

கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் 'ஸ்ரார் ஒவ் வடமராட்சி' சுற்றுப் போட்டியில் காலிறுதியில் வென்று அரையிறுதிக்கு இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் தகுதிபெற்றது.

இந்தத் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மகேசன் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் 15 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களை பெற்றது. இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் சார்பில் கவிதரன் 20 ஓட்டங்களையும். துவாகரன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மகேசன் விளையாட்டுக்கழகம் சார்பாக அனுசயந்தன் ,நித்தியாதரன்ஆகியோர் தலா இரு இலக்குகளையும். மதன்ராஜ், ரஜீபன்,அனுசன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

78 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய மகேசன் விளையாட்டுக் கழகம் 13.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 44 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.அந்த அணி சார்பில் மதன் 10 ஓட்டங்களையும், அனுசயந்தன், மதன்ராஜ் 7 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பந்து வீச்சில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் சார்பாக கவிதரன் 3 இலக்குகளையும், பாபு,புவிகரன் ஆகியோர் தலா இரு இலக்குகளையும் மதன்ராஜ், கோகுலன், துவாரகன் ஆகியோர் ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இந்த அரையிறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்ட இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த கவிதரனுக்கு கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பொருளாளரும் , மக்கள் வங்கி ஊழியருமான உதயசங்கர் விருதுக் கிண்ணம் வழங்கி கௌரவித்தார்.

(ங-422)



# சம்பியனானது டாக்கா கிளேடியேற்றர்ஸ்

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரின் சம்பியனாக டாக்கா கிளேடியேற்றர்ஸ் அணி தெரிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் சிற்றகொங் கிங்ஸ் அணிக்கெதிரான இறுதிப் போட்டியில் டாக்கா கிளேடியேற்றர்ஸ் அணி 43 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

இரண்டாவது முறையாக இந்தவருடம் இடம்பெற்ற பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற டாக்கா கிளேடியேற்றர்ஸ் அணியே முதலாவது தொடரிலும் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

மிர்புரில் இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிற்றகொங் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டாக்கா கிளேடியேற்றர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. முதலாவது இலக்குக்காக திலகரட்ண டில்ஷானை முதலாவது பந்துப்பரிமாற்றத்திலேயே இழந்தபோதிலும், அந்த அணியின் ஏனைய வீரர்கள் சிறப்பாக ஆடி, உயர்வான ஓட்ட எண்ணிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டார்கள்.

துடுப்பாட்டத்தில் டாக்கா கிளேடியேற்றர்ஸ் அணி சார்பாக அனாமுல் ஹக் 36 பந்துகளில் 58 ஓட்டங்களையும் ஷகிப் அல் ஹசன் 29 பந்துகளில் 41 ஓட்டங்களையும் மொஹமட் அஷ்ரபுல் 16 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிற்றகொங் கிங்ஸ் அணி சார்பாக றூபெல் ஹொசைன் 4 இலக்குகளையும் தில்ஹார லொக்குஹெட்டிகே, தஸ்கின் அஹமட் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் ரவி போபாரா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

173 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிற்றகொங் கிங்ஸ் அணி 16.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 129 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 43 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சிற்றகொங் கிங்ஸ் அணி முதலாவது இலக்குக்காக வேகமான 26 ஓட்டங்கள் பகிரப்பட்டு, ஒரு கட்டத்தில் 6.1 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோதிலும், அதனைத் தொடர்ந்து இலக்குகளை தொடர்ச்சியாக இழந்தது.

துடுப்பாட்டத்தில் சிற்றகொங் கிங்ஸ் அணி சார்பாக மகமதுல்லா 28 பந்துகளில் 44 ஓட்டங்களையும் ஜேசன் றோய் 28 பந்துகளில் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டாக்கா கிளேடியேற்றர்ஸ் அணி சார்பாக மொஷாராப் ஹொஸைசன், அல்போன்ஸோ தோமஸ் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் மஷ்ரபி மோர்தஷா, சக்லைன் சஜிப் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக மொஷாராப் ஹொஸைனும் போட்டித் தொடரின் நாயகனாக ஷகிப் அல் ஹசனும் தெரிவாகினர். (ங)






## பெயேர்ண் முனிச், பி.சி. போர்ட்டோ வென்றன

ஐரோப்பியக் கிண்ண சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் பெயேர்ண் முனிச், பி.சி.போர்ட்டோ அணிகள் வெற்றிபெற்றன.

ஆர்சனல் அணிக்கும், பெயேர்ண் முனிச் அணிக்குமிடையிலான ஆட்டத்தில் பெயேர்ண் முனிச் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இந்த ஆட்டம் ஆரம்பித்து 7ஆவது நிமிடத்திலேயே பெயேர்ண் முனிச் சார்பாகக் கோலொன்று பெறப்பட்டது. இதனால் எடுத்த எடுப்பிலேயே அந்த அணி முன்னிலை பெற்றது.

அதன் பின்னர் 21ஆவது நிமிடத்தில் பெயேர்ண் முனிச் சார்பாக இரண்டாவது கோலும் பெறப்பட முதற்பாதியில் அந்த அணி 2:0 என்ற முன்னிலையைப் பெற்றது.

போட்டியின் 55ஆவது நிமிடத்தில் ஆர்சனல் சார்பாக பொடொல்ஸ்கி கோலொன்றைப் பெற்று அணியின் வெற்றிக்காகப் போராடினார். இருந்த போதிலும், 77ஆவது நிமிடத்தில் பெயேர்ண் முனிச் சார்பாக இன்னுமொரு கோல் பெறப்பட, பெயேர்ண் முனிச் அணி 3-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. பி.சி.போர்ட்டோ அணிக்கும், மாலாகா அணிக்குமிடையில் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் பி.சி போர்ட்டோ அணி சார்பாக 56ஆவது நிமிடத்தில் பெறப்பட்ட கோலின் உதவியுடன் பி.சி.போர்ட்டோ அணி 1:0 என்ற கோல் கணக்கில் மாலாகா அணியை மண்கவ்வ வைத்தது.(ங)

## தென்னாபிரிக்காவை கண்டு அஞ்சத் தேவையில்லை

''பாகிஸ்தான் வீரர்கள் தென்னாபிரிக்காவைக் கண்டு அஞ்சத் தேவையில்லை'' என பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இன்ஸமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்ற போதிலும், துடுப்பாட்டத்தில் தடுமாற்றத்தை எதிர்கொண்டு வருகிறது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இன்ஸமாம் உல் ஹக்,

''தென்னாபிரிக்காவில் களமிறங்கியதில் இருந்து பாகிஸ்தான் அணி கடும்அழுத்தத்திற்குள்ளாகியுள்ளது. இந்தத்தொடரில் பாகிஸ்தான் வீரர்களின் அடித்தாடும் விதமே அதற்கு சான்றாகும்.

இந்தத்தொடரில் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர்களை அழுத்தத்திற்குள்ளாக்க முயன்றிருக்கவில்லை. அதிக பந்துகளைச் சந்தித்து சிறந்த நிலையில் காணப்பட்டபோதிலும், பாகிஸ்தான் வீரர்கள் அடித்தாட முயலாததால் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் சுருண்டுவிட்டனர்.

பாகிஸ்தானின் பந்துவீச்சு ஓரளவு சிறப்பாகக் காணப்படுகின்றது. இருந்த போதிலும், துடுப்பாட்ட வீரர்கள் கைவிட்டுள்ளனர். நாங்கள் தோற்றுவிடுவோமோ என்ற நினைப்பை விடுத்து பாகிஸ்தான் வீரர்கள் நேர்முக எண்ணத்துடன் துடுப்பெடுத்தாடியிருக்க வேண்டும்''- எனத் தெரிவித்தார். (ங)

## திட்டமிட்டுக் கொல்லவில்லை

''எனது காதலியை நான் திட்டமிட்டு கொலை செய்யவில்லை. இதன் பின்னணயில் எந்தவித உள்நோக்கமும் இல்லை. தவறுதலாகவே அவளின் இறப்பு என்கையால் நிகழ்ந்தது.'' -இவ்வாறு கண்ணீர் மல்க நீதிமன்றில் தெரிவித்துள்ளார் தென்னாபிரிக்காவின் மாற்றுத்திறன் தடகள வீரர் பிஸ்டோரியஸ்.

தென்னாபிரிக்க தடகள வீரர் ஒஸ்கர் பிஸ்டோரியஸ். மாற்றுத்திறனாளியான இவர், தனது காதலி ரீவா ஸ்டீன்கேம்ப்பை சுட்டுக் கொன்றார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார். இதன்பின்னர் அவர் நேற்றுமுன்தினம் இரண்டாவது முறையாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவர், ஸ்டீன்கேம்ப்பை திட்டமிட்டே கொன்றார் என்ற குற்றச்சாட்டு உட்பட 6 பிரிவுகளில் அரசு தரப்பில், வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், பிஸ்டோரியசுக்கு பிணை வழங்கக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் போது அரசு தரப்பு சட்டத்தரணி கெரியே நெல் கூறுகையில், ''காதலர் தினத்தில் காதலியை கொல்வது தான் பிஸ்டோரியசின் திட்டம். இதற்காகவே தனது இரு செயற்கை கால்களையும் பொருத்திக் கொண்டு 7 மீற்றர் தூரம் நடந்து சென்று, குளியலறையில் ஒளிந்திருந்த தனது காதலியான ஸ்டீன்கேம்ப்பை 3 முறை சுட்டுள்ளார். திருடன் என்று தவறுதலாக சுட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லை'' என்றார்.

இதை எதிர்த்து பிஸ்டோரியஸின் சட்டத்தரணியான பேரி ரவுச் வாதாடுகையில்,''பிஸ்டோரியஸ் இந்த கொலையைத் திட்டமிட்டு செய்யவில்லை. குளியலறைக் கதவின் துளை வழியாக அவர் மூன்று முறை சுட்டார் என்ற செய்தியில் உண்மை இல்லை,'' என்றார்.

அருகில் நின்று கொண்டிருந்த பிஸ்டோரியஸ், ஸ்டீன்கேம்ப் பெயரை சொல்லும் போதெல்லாம் தேம்பி அழுதார். அப்போது பிஸ்டோரியஸ் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், ''நானும் ஸ்டீன்கேம்ப்பும் ஒருவரை ஒருவர் ஆழமாகக் காதலித்தோம். எங்களைப் போல மகிழ்ச்சியான காதலர்கள் இருக்க முடியாது. குளியலறைக் கதவில் தான் சுட்டேன். அவளைக் கொன்றதில் எவ்வித உள்நோக்கமும் இல்லை''-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிஸ்டோரியசிற்கு எதிராக அதிக ஆதாரங்கள் உள்ள நிலையில், இவருக்குப் பிணை கிடைக்காது என்றே தெரிகிறது. பிஸ்டோரியஸுக்கு ஆதரவாக வாதாட தலைசிறந்த சட்டத்தரணிகள் நியமிக்கப்பட்டுள் ளனர். இதிலுள்ள ஒருவர் கென்னி ஒல்ட்வேஜ். இவர், கடந்த 2010ஆம்ஆண்டு தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவின் பேத்தி ஜெனானி மீது கார் ஏற்றிக் கொன்ற சாரதிக்கு ஆதரவாக வாதாடியவர். இதில் குறித்த சாரதி விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொல்லப்பட்ட ஸ்டீன்கேம்ப்பின் உடல், பிரேத பரிசோதனைக்குப் பின், அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் அவரது சடலம் சொந்த ஊரான போர்ட் எலிசபெத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டது.(ங)



# இங்கிலாந்து பதிலடி

**இந்த வெற்றியின் மூலம் இரு அணிகளும் 1:1 என்று சமநிலை பெற்றுள்ளன.**

நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில், இங்கிலாந்து அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து சென்றுள்ள இங்கிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி, நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூஸிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றினர். வட்லிங் 7 ஓட்டங்கள், ருதர்போர்ட் 11ஓட்டங்கள் அண்டர்சனின் வேகத்தில் வெளியேறினர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த வில்லியம்சன் 33 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார். பின்னர் வந்த ரெய்லர், அபார ஆட்டத்தின் மூலம், சதம் கடந்து, இவர் 1 சிக்ஸர் 9 பவுண்டரிகள் அடங்கலாக 100 ஓட்டங்களுடன் அன்டர்சனின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தார். அதன் பின் களம் புகுந்த எலியட் 23 ஓட்டங்கள் நிலைக்கவில்லை. பின் வந்த அணித்தலைவர் பிரண்டன் மக்கலம், எதிரணியின் பந்துவீச்சை எளிதாகச் சமாளித்தார். அரைச்சதம் கடந்த இவர், 74 ஓட்டங்களை எடுத்து வீழ்ந்தார். பிராங்ளின் ஒரு ஓட்டம், நதன் மெக்கலம் 7ஓட்டங்கள், சவுத்தி 2ஓட்டங்கள், போல்ட் ஆகியோர் ஒற்றை இலக்க ஓட்டங்களையே எடுத்தனர்.

நியூஸிலாந்து அணி 48.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 269 ஓட்டங்களை எடுத்தது. இங்கிலாந்து அணி சார்பில் அண்டர்சன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு குக், பெல் இணை பலமானஅடித்தளம் அமைத்தது. 5 பவுண்டரி அடங்கலாக 44 ஓட்டங்களை எடுத்த பெல், வில்லியம்சன் பந்தில் அவுட்டானர். தனது அதிரடி ஆட்டத்தால், அரைச் சதம் கடந்த, அணித்தலைவர் குக் 1 சிக்ஸர் 7 பவுண்டரி அடங்கலாக 78 ஓட்டங்களில் சௌத்தியின் பந்து வீச்சில் வெளியேறினார். ஜொனதன் ரொட், ரூட் ஆகியோரும் அரைச் சதம் விளாசி அணியின் வெற்றிக்கு வழிகோலினர். இங்கிலாந்து அணி 47.4 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றியீட்டியது. ரொட் 3 பவுண்டரிகள் 65 ஓட்டங்களையும், ரூட் 2 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகள் அடங்கலாக 79ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இரு அணிகளும் 1:1 என்று சமநிலை பெற்றுள்ளன. (ந)

# பீட்டர் சிடிலின் வினோத ஆட்டமிழப்பு

பயிற்சி போட்டியில் பவுண்டரி ''லைனை' தொட்ட பந்து மூலம் ஆஸ்திரேலிய வீரர் பீட்டர் சிடில் ரன் அவுட்டான வினோதம் அரங்கேறியது. இத்தவறுக்கு காரணமான இந்திய வீரர் மன்பிரீத் கோனி கடும் விமர்சனத்தை சந்தித்துள்ளார்.

இந்தியா ''ஏ', ஆஸ்திரேலிய அணிகள் மோதிய இரண்டாவது மற்றும் கடைசி பயிற்சி போட்டி சென்னையில் மூன்று நாள்கள் நடந்தது. இதன் மூன்றாவது நாளில் 48வது பந்துப் பரிமாற்றத்தை, இந்திய சுழற்பந்து வீச்சாளர் ராகேஷ் துருவ் வீசினார்.

இதை, ஆஸ்திரேலியாவின் பீட்டர் சிடில் வேகமாக அடிக்க, பந்து எல்லைக் கோட்டை நோக்கி சென்றது. இதை மன்பிரீத் கோனி விரட்டிச் சென்றார். ஆனால், பந்து பவுண்டரி ''லைனை' தொட்டது. தவிர, மன்பிரீத் கோனியின் காலும் 'லைனை' தாண்டியது. இதையடுத்து இது பவுண்டரியாக (நான்கு ரன்கள்) மாறியது. இதில் 'ரன் அவுட்' செய்ய முடியாது.

ஆனால், கோனி, பந்தை எடுத்து துருவிடம் வீசினார். அவர், சிடிலை 'ரன் அவுட்' செய்தார். பந்து ''லைனை' தொட்டதா... இல்லையா என, அங்கிருந்த ''மீடியா' நபரிடம் கேட்காமல், கோனியிடம் கேட்டார் களத்தில் இருந்த அம்பயர் அனில் சவுத்ரி.

அதற்கு 'தொடவில்லை' என, கோனி சொல்ல, மூன்றாவது அம்பயரிடம் கேட்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக பந்தை துரத்திச் செல்லும் கேமரா, மைதானத்தில் இல்லாததால், 'ரீப்ளே'யில் சரியாக பார்க்க முடியவில்லை. இறுதியில், சிடிலுக்கு ''அவுட்' தரப்பட்டது.

இதற்கிடையே, எல்லைக் கோட்டை தொட்ட நிலையில், பந்தை கோனி எடுக்கும் படம் வெளியாகியுள்ளது. இது விளையாட்டு உணர்வு இல்லாமல் இவர் நடந்து கொண்டதை அம்பலப்படுத்தியுள்ளது.

**இது சரியா ரோகித்**

சிடில் 'ரன் அவுட்' கொடுக்கப்பட்ட போது, எல்லை கோட்டுக்கு அருகில் இருந்த 'மீடியா'வை சேர்ந்த ஒருவர், இது பவுண்டரி என, நடுவரை நோக்கி 'சிக்னல்' காட்டினார். ஆனால், அந்த இடத்தில் இருந்த ரோகித் சர்மா, அவரைப் பார்த்து, தனது வாயில் விரலை வைத்து 'அமைதியாக இருங்கள்' என்று சைகை காட்டினார். (ந)

# ஹர்பஜன் சிங் சிறப்பாகச் செயற்படுவார்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், ஹர்பஜன் சிங் சிறப்பாக செயல்படுவார்,'' என, இந்திய வீரர் யுவராஜ் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள ஆஸ்திரேலிய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட், வரும் 22ம் தேதி சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் துவங்குகிறது. முதலிரண்டு டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில், நீண்ட நாள்களுக்குப் பின், அனுபவ சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் இடம்பிடித்துள்ளார். இதன்மூலம் இவர், தனது 100வது டெஸ்ட் போட்டியில் விளையாட உள்ளார். இதுவரை இவர், 99 டெஸ்டில் 408 விக்கெட் வீழ்த்தி உள்ளார்.

இதுகுறித்து இந்திய வீரர் யுவராஜ் சிங் கூறியது:

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் மோதவுள்ள டெஸ்ட் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும். இரு அணிகளிலும் திறமையான வீரர்கள் இருப்பதால், வெற்றி பெற கடுமையாக போராட வேண்டும். இது, டெஸ்ட் அரங்கில் மிகச் சிறந்த தொடராக அமையும்.

டெஸ்ட் தொடருக்கு, ஹர்பஜன் சிங் தேர்வு செய்யப்பட்டது வரவேற்கத்தக்கது. இவர், சென்னை டெஸ்டில் விளையாடும் பட்சத்தில், 100 டெஸ்டில் விளையாடிய 10வது இந்திய வீரர் என்ற பெருமை பெற காத்திருக்கிறார். மிகச் சிறந்த பந்துவீச்சாளரான இவர், துடுப்பாட்டத்திலும் கைகொடுப்பார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக முழுத்திறமையை வெளிப்படுத்தி, நிச்சயம் சாதிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது.

இத்தொடரில், உலகின் மிகச் சிறந்த இரண்டு அணித்தலைவர்கள் மோத உள்ளனர். தோனியின் கீழ் நிறைய போட்டிகளில் விளையாடி உள்ளேன். இவரது, அணுகுமுறை வித்தியாசமானது. மைக்கேல் கிளார்க் தலைமையில், இதுவரை எவ்வித போட்டியிலும் விளையாடவில்லை. இவர், ஆஸ்திரேலிய அணிக்கு சிறந்த வீரராக மட்டுமல்லாமல், சிறந்த அணித்தலைவராகவும் அசத்தி வருகிறார். இத்தொடர், இவருக்கு நல்ல அனுபவம் கொடுக்கும்.



**இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் மோதவுள்ள டெஸ்ட் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும். இரு அணிகளிலும் திறமையான வீரர்கள் இருப்பதால், வெற்றி பெற கடுமையாகப் போராட வேண்டும். இது, டெஸ்ட் அரங்கில் மிகச் சிறந்த தொடராக அமையும்.**

புற்றுநோய் பாதிப்பில் இருந்து மீண்டு, மீண்டும் சர்வதேச போட்டியில் பங்கேற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. எனது உடற்தகுதியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. விரைவில் இந்திய அணிக்காக டெஸ்ட் போட்டியில் விளையாடுவேன் என நம்புகிறேன்.-இவ்வாறு யுவராஜ் சிங் கூறினார்.


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
A/L 2015 Mechanics
ஆரம்பம் :
23.02.2013 சனி-4.15-5.15 p.m
சனி, ஞாயிறு : 4.15-5.15 p.m
K.SELVAN B Sc(Hons)

கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
கட்டணம் 9500/=
ஆரம்பம்- 22.02.2013
காலை-9.00 மணிமுதல்
100% உத்தரவாதம்.
பதிவுகளுக்கு முந்துங்கள் ISSES NALLUR CAMPUS
No762, POINT PEDRO ROAD, NALLUR, JAFFNA.
0212224728, 0777929475

விசிட்டிங்காட் - பில்புத்தகம் - லேபல்கள் - நினைவுமலர்கள்
பருவகால மலர்கள் - சஞ்சிகைகள் - போஸ்டர்கள் - லேட்டபாட்
சான்றிதழ்கள் - அழைப்பிதழ்கள் - CD கவர்கள் - CD ஸ்ரிக்கர்கள்
சகலவிதமான பிறிண்டிங் வேலைகளையும் குறைந்த செலவில் நவீன உயர்தொழில் நுட்பத்தில் செய்திட
கலர் பிறிண்ட்
யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)
தொ.பே: 0771974875 கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.